

கல்கி

KALKI 28-11-1971 45 காசு


for that millionaire look
100
100
Century
for 100% cotton
textiles
CENTURIZED
PRESHRUNK FABRIC
THE
CENTURY
SPG. & MFG. CO. LTD.,
BOMBAY 25 DD
Century's
Cosy-Cot
cotton SHIRTINGS
with Rich Woollen Feel
For Fashion Fabrics choose
Century Shirtings!
NPS-CM 16

RAJAJI-93 SOUVENIR

A collection of tributes, reminiscences and experiences from many distinguished and eminent personalities from India and abroad and profusely illustrated with pictures portraying the many events in Rajaji's long and unique life.

With each copy of the Souvenir is given free a standard 45 RPM disc carrying





(Rajaji's talks are on 'God-fearing life' on one side of the disc and on 'World Government' on the other side)

A sumptuous and high-class production with more than 300 pages in 'Life' magazine size and priced at Rs. 12/- per copy plus Rs. 1.50 to cover packing postage and registration charges.

Only a limited number of copies are printed of the Souvenir and therefore copies are reserved in the order of remittances received at the rate of Rs. 13.50 per copy inland and Rs. 25/- per copy abroad by sea mail.

The publishers of "Rajaji-93 Souvenir" have also great pleasure in offering a complimentary copy of RAJAJI-93 SOUVENIR along with the disc carrying the Voice of Rajaji to those who subscribe to 'Swarajya' for three years and remit Rs. 45/- in advance to the **Manager, Swarajya, Madras-31** on or before 10th December 1971 when Poojya Rajaji completes his ninety-third year.

In response to the request of several hundreds of regular readers of **Kalki**, the Publishers of "Rajaji-93 Souvenir" have also decided to offer a complimentary copy of "Rajaji-93 Souvenir" along with the disc carrying the voice of Rajaji to a limited number of the regular readers of Kalki who send Rs. 46/- in advance covering two years subscription for Kalki and the cost and postage of a copy of Kalki Deepavali Malar 1972 to the **Manager, Kalki, Madras-31**, on or before 10th December 1971.



T. Sadasivam
Convener, Rajaji-93 Souvenir Committee
Kalki Buildings, Chetput, Madras-31


மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும்
கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே
சீராக பால்போல் பளிச்சிடுகின்றன.
உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டு
கள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை
வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான
வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள்
திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத்
தயாரிப்பு இந்தியாவின் மிக நவீன அல்டிராமரைன்
தொழிற்சாலையில் உருவானது
தயாரிப்பாளர்.
அல்டிராமரைன் & பிக்மென்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53
OOB
BLUE
BEST ULTRAMARINE
ULTRAMARINE & PIGMENTS LTD.



உங்கள் வீட்டை கவர்ச்சியுடன் அலங்கரிக்க இம்முறை பின்டெக்ஸ் ரகங்களையே வாங்குங்கள். அவை நிகரற்றவை—இணையற்றவை. காரணம், டிசைன்களும், துணிகளும் பின்னியின் சிறந்த நிபுணர்களால் சிறந்த தென்னிந்திய நெசவாளிகளிடமிருந்தும் தரமிக்க விசைத்தறிகளிலிருந்தும் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்படுவதுதான்.

பின்டெக்ஸ் துணி ரகங்கள்: ஸ்டாண்டர்ட்; ஜகரண்டா, கேண்டி ஸ்ட்ரைப்டு மற்றும் பலநிற படுக்கை விரிப்புகள் மற்றும் திரைத் துணிகள், மேலுரைகள்; ஜகரண்டா, ஹவாய் மற்றும் ஸ்டாண்டர்ட் டவல்களும் விரிப்புகளும், நெப்டியூன் நெட் திரைகள், ஹோம் லாண்ட், மேட்டி மற்றும் சீரோக்கூ கேஸ்மெண்ட், பிரிஸிடென்ஸி தரை விரிப்புகள், 9-ஓ க்ளாக் வெளிர் மற்றும் கோடு போட்ட கம்பளங்கள், ஸெர்வெட்டிகள், நாப்கின்கள் மற்றும் தலையணை உறைகள்.

பின்டெக்ஸ்

தரநிர்ணயமும் விற்பனையும்-பின்னி

BY-6341

கல்கி

பொருளடக்கம்




விரோதிகிருது, கார்த்திகை 12 - நவம்பர் 28, 1971

நூற்றிருபதும் ஐந்தும்	—	7
ராஜாஜியின் கருத்துக்கள்	—	8
பூஜ்யர் டிஸோஸாவுக்குப் பொன்விழா	—	12
தீனபந்துவுக்கு அஞ்சலி	—	14
சடங்குகள்	—	17
அம்மா	—	18
படித்துப்பாருங்கள்	—	25
பொன்னியின் செல்வன்	—	26
விளக்கேற்றியவர்கள்	—	37
மூன்று மந்திரவாதிகள்	—	38
சென்ட்ரல்	—	42
மனோஜாவின் மனோரதம்	—	49

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம் :	ஒரு வருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 23-00	ரூ. 11-50



Sunsilk cares – with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair... revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk – more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140

கல்கி

மலர் 31

இதழ் 18

தமிழ்த்திரு நாடுதன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

நூற்றிருபதும் ஐந்தும்

ஐ. நா. சபையில் சர்வதேச அராஜகம் விளைவித்து வரும் ஐந்து அணு ஆயுத வல்லரசுகளுக்கு எதிர்த்தரப்பில் நூற்றிருபது நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த நூற்றிருபது நாடுகளும் மனித குலத்தின் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டவை. உயிரினத்துக்கு ஐந்து அணு ஆயுத வல்லரசுகள் இழைக்கும் கொடுமையை இந்த நூற்றிருபது நாடுகளும் எதிர்க்கக் கடமைப்பட்டுள்ளன. தர்மத்தின் சார்புள்ள இந்நாடுகள் தம் சக்தியைத் தாமே உணராமல் பௌதிக பலத்திடம் சரணாகதி யடைவது எத்தகைய பரிதாபம்?

ஐந்து வல்லரசுகளும் பிரம்மாண்டமாகச் செலவு செய்து அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன; வெடித்துச் சோதனை செய்கின்றன. ஒவ்வொரு வல்லரசும் தன்னுடைய அணு ஆயுத பலத்தை மற்ற நாடுகளின் அணு சக்தியைக் காட்டிலும் அதிகமாக்கினால், மற்ற நாடுகள் தன்னிடம் பயந்து, தன்னோடு அணு குண்டுப் போர் தொடுக்காது என்று நினைத்தே இவ்விதம் செய்கிறது. அணு ஆயுதங்களை உபயோகித்து யுத்தம் செய்தால் அணு குண்டுத் தயாரிப்பில் சம்பந்தப்பட்ட நாடுகள், சம்பந்தப்படாத நாடுகள் என்ற பேதமின்றி உலகத்தின் பெரும் பகுதிகளில் மனித வாழ்வு சர்வநாசமாக வேண்டியதுதான். இது அனைவருக்கும் தெரியும். எனவே, எவருமே அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதில் பொருள் இல்லை. இதை உறுதியாக எடுத்துக் காட்ட முடியாத நிலையில் நூற்றியிருபது நாடுகள் இருப்பதை என்னென்பது? வல்லரசுகள் பரஸ்பரம் அவநம்பிக்கையும் அச்சமும் கொண்டு, பூமி என்கிற கிரகம் முழுவதிலுமே உயிர் வாழ்வினை அழிக்கத் தயாராகி வருகின்றன. இந்த 'மகத்தான' ஐந்து அரசுகள் இதர நூற்றியிருபது நாடுகளின் விதியை அந்த நாடுகளின் சுயேச்சையான ஒப்புதலின்றியே நிர்ணயிக்கின்றன. நீதிக்குப் பொருந்தாத இந்தச் சக்தியை ஐந்து வல்லரசுகள் பிரயோகித்து, நூற்றிருபது நாடுகளின் சுய சங்கற்பத்தையும் ஆற்றலையும் அழித்து அந்த நாடுகளை யெல்லாம் பேடிகளாக்கி விடுமாயின் அது போன்ற இருள் மயமான துயரக் கதை வேறு எதுமே இருக்க முடியாது. உலக சரித்திரத்திலேயே இதுபோல ஒரு பரிதாபம் என்றும் நடந்ததில்லை.

இப்போது குறைந்தபட்சம் இந்த நூற்றிருபது நாடுகளும் செய்ய வேண்டியது யாதெனில், அணு வல்லரசுகள் என்கிற குற்றவாளிகளுடன் ஒரே சபையில் அமராமல் இருப்பதுதான். அவர்களோடு அமருவது அவர்களது அதரும அதிகாரத்தை ஒப்புக் கொள்வதாகவே ஆகும். ஒத்துழையாமை என்கிற ஆயுதத்தைக் கொண்டே யதேச்சாதிகாரத்தைத் தரும பலம் எதிர்க்கவேண்டும். இதனால் உலகம் முழுதும் அடங்கிய ஒரு ஸ்தாபனம் தங்களைப் பின்பற்றுகிறது என்று வல்லரசுகள் கொண்டுள்ள மாயக் கருத்து தகர்க்கப்படும்.

புதிதாகச் சீனம் என்ற அணு ஆயுத வல்லரசும் ஐ.நா.வில் இடம் பெற்றுத் தன் சொரூபத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. ஒரு தேசத்தில் எப்படிப்பட்ட சர்க்கார் இருந்தாலும் சரி, அந்தத் தேசத்துக்கு ஐ.நா.வில் இடம் தந்தேயாக வேண்டும் என்பது இந்தியாவின் கருத்து. அதனால்தான் சீனம் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் வந்த பிற்பாடும் அதற்கு ஐ.நா.வில் ஸ்தானம் தரவேண்டும் என்று இந்தியா கூறி வந்தது. ஆனால் சீனம் அணுகுண்டுகள் செய்யத் தொடங்கியதோடு நில்லாமல், வெளிச் சூழலில் சோதனை வெடிப்புச் செய்வதில்லை என்ற அமெரிக்க—ருஷ்ய உடன்படிக்கைக்கு உட்பட மறுத்த போதே, சீனத்தை ஐ. நா. வில் அது மதிக்கும் விஷயம் திசை திரும்பிவிட்டது. இதை இந்தியா உணரவில்லை.

இப்போது சீனம் தனது அணு ஆயுதத் திட்டம் 'பரிசோதனை'க் கட்டத்தில்தான் இருக்கிறது என்று கூறுகிறது. இரண்டாவது உலக யுத்த முடிவில் ட்ருமன், ஹிரோஷிமா — நாகஸாகியில் குண்டு வெடித்துப் பார்த்ததுபோல், இப்போது தைவானின் மீது சீனம் 'பரிசோதனை'யை நடத்துமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. இந்த அச்சம் நடைமுறைக்கு வராதிருக்குமாக!

(அடிப்படை: ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

ராஜாஜியின் கருத்துக்கள்

முறைகேடான சம்பவம்

அரசியல் மூல பட்டயத்தையும், அதனில் வரைந்திருக்கும் மக்கள் உரிமைகளையும் ஒழித்தெறிவதில் பழைய காங்கிரஸ் கட்சி இந்திரா காங்கிரஸோடு சேர்ந்துவிட்டபிறகு இரு கட்சிகளுக்குள் எந்தவிதமான பேதத்தையும் நான் காணவில்லை. கொள்கைகளில் எதிர்ப்பு ஏதுமில்லாமல் சொத்துக்களைப் பற்றி வியாஜ்யங்கள் நடத்துவதில் ஒரு லாபமும் இல்லை என்பது வெட்டவெளிச்சம்.

ஆனபோதிலும், ஒரு கட்சியின் தலைமைக் காரியாலயத்தை ஆளும் கட்சி என்று பெயர் சூட்டிக்கொண்டுள்ள ஒரு கட்சியினர் சட்டம், முறை, மரியாதை எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டுப் பலாத்காரமாகக் கைப்பற்றியது வன்மையாகக் கண்டிக்க வேண்டிய விஷயம். பிரதம மந்திரியின் பலம் இருக்கிறபடியால் அல்லவோ இத்தகைய முறைகேடான சம்பவம் நடைபெற்றது!

சபாநாயகரின் கண்டனம்

ராஷ்டிரபதி முத்திரை சர்க்காருக்கு எளிதில் கிடைக்கிறது. பார்லிமெண்டின் அதிகாரம், கௌரவம் இவற்றுக்குக் காவலாகிய லோக சபைத் தலைவர், ஆர்டினன்ஸுக்குமேல் ஆர்டினன்ஸாகப் புயல் மழை போல் பெய்திருப்பதைக் கண்டித்திருக்கிறார். வாய்மொழிக் கண்டனத்தோடு திருப்தி அடையாமல் தம் பதவியை ராஜிநாமா செய்திருந்தால் மிகவும் உசிதமாக இருந்திருக்கும்.

கோபுரம் சாய்கிறது!

அரசியல் சட்ட சாஸனத்தின் 24-வது, 25-வது திருத்தங்கள் நிறைவேறி, ஸுப்ரீம் கோர்ட்டும் இவற்றைச் !செல்லத்தக்கன என்று தீர்ப்புக் கூறிவிடுமாயின் அதன்பின் அதற்கு 'அரசியல் சாஸனம்' என்ற பெயரை நீக்கிவிட்டு பார்லிமெண்டின் அநேக சட்டங்களில் ஒன்றாக அதை வைத்துவிடலாம். பைஸா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தின் நிலையில் இருக்கிறது இன்றைய சாஸனம். மீண்டும் அதைச் செங்குத்தாக நிலைநாட்ட வேண்டும்.



அப்படி நடந்திருந்தால்....

ஒரு சம்பவம் நடந்துமுடிந்தபின், அதை வேறு விதத்தில் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்ற ஞானம் உதிப்பதுண்டு. காரியம் நடந்தபின் விவேகம் பெற்றுப் பயனில்லையெனினும் இவ்வித சிந்தனை ▼அடியோடு உபயோகமில்லை என்று தள்ளிவிட முடியாது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முந்திய ஒரு சம்பவத்தைப் பார்ப்போம்.

இந்திய சுதந்திரம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. காந்திஜிதான் நமது விவகாரங்களை மௌனமாக இயக்கி வந்தார். அவருக்கு காங்கிரஸ் தலைவர்களுக்குள் ஸர்தார் வல்லப பாய் படேல்தான் நிர்வாகத் திறனில் தலைசிறந்தவர் என்று தெரியும். ஆயினும், ஸ்ரீ ஜவாஹர்லால் நேருவுக்கு அந்நிய விவகாரங்களில் சிறப்பான விஷய ஞானமும் தொடர்பும் இருந்தபடியால் அவரே சுதந்திர பாரதத்தின் முதல் பிரதமராக வேண்டும் என்று காந்திஜி முடிவு செய்தார். அவை நல்ல நாட்கள் — எங்களுக்குள் அதிகாரப் போட்டி என்பதே கிடையாது. எனவே ஜவாஹர்லால் பிரதமரானார். உள்துறை மந்திரியாகவே தாம் உபயோகமாயிருக்க முடியும் என்று வல்லபபாய் உணர்ந்தார். அவ்விதமே முடிவு செய்யப்பட்டது.


இப்போது இதை எல்லாம் எண்ணிப் பார்க்கையில், ஜவாஹர்லால் நேருவை வெளிவிவகார மந்திரியாக மட்டும் வைத்துக் கொண்டு, பிரதமர் பதவியை வல்லப பாய் பட்டேலுக்குத் தந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அப்படிச் செய்திருந்தால் தேசம் எவ்வளவோ நன்மை அடைந்திருக்கும் என்று சந்தேகமறக் கூறலாம். நேரு — படேல் இவர்களுக்குள் நேருவே அதிகப் பண்பு விளக்கம் படைத்தவர் என்றும், எனவே அவர் பிரதமராக இருப்பது தான் சிலாக்கியம் என்றும் நான்கூடத் தவறாக நம்பினேன். நேரு நமது நாட்டுக்குப் பொலிவு தந்து, உலகத்தின் மற்ற பெரிய நாகரிக நாடுகளுக்குச் சமதையாக இந்தியாவை உயர்த்துவார் என்றே நாங்கள் எல்லோரும் எண்ணினோம்.

மனத் திண்மை பொருந்திய வல்லப பாய் படேல் உள்துறைப் பொறுப்புக்கு மிகவும் தகுதி பொருந்தியவராயினும், அவர் முஸ்லிம்களிடம் கடுமையாக நடப்பார் என்று ஒரு பரவலான கருத்து இருந்தபடியால், அவரைப் பிரதமராக்கவில்லை. இது தப்பான கருத்து. அவர் மிகுந்த அநுபவஸ்தர்; நீதி நிறைந்தவர். அவர் வளைந்து கொடுக்கமாட்டார் என்பதால் நீதிக்கு விரோதமாகப் பிடிவாதமாக இருப்பார் என்று அர்த்தமாகாது. நேருவின் பண்பான பான்மை மற்றவரின் குணாதிசயங்களை விஞ்சித் தென்பட்டது. நேருவே சிறுபான்மையோர் உட்பட அனைவருக்கும் சுதந்திர பாரதத்தில் திருப்தி தருவார் என்று எண்ணினோம்.

அப்போது செய்த ஏற்பாடு கவர்ச்சிகரமானது; ஆனால் அது விவேகமானதல்ல என்று இப்போது சிந்திக்கும்போது தோன்று

றது. அன்று அந்தத் தவறைச் செய்திராவிடில் சுதந்திர இந்தியாவின் சரித்திரமே முற்றிலும் மாறியிருந்திருக்கும். திரு படேல் பிரதமரா யிருந்திருந்தால் பல தவறுகளைத் தவிர்த்திருப்போம். கம்யூனிஸச் சார்பான 'சமத்துவத்'துக்கு ஒரு படாடோபமான ஒளி உண்டு. நேருவின் குற்றமறியா வெள்ளைஉள்ளம் இந்தப் பகட்டு ஒளியின் மயக்கத்தால் கவரப்பட்டது. அதனாலேயே தேசம் எத்தனையோ இன்னல்களில் இழுத்துச் செல்லப்பட்டது. வல்லபபாய் பிரதமராகி யிருந்தால் இந்தத் தவறுகளும், கஷ்டங்களும் நேர்ந்தே இரா. சர்வ சமத்துவம் என்பது ஒரு பிரம்மாண்டமான கட்டுக் கதைதான். அது நடைமுறைச் சாத்தியமான லட்சியம் அல்ல. இருபது வருடத்துக்கு முன் இதை ஒரு மோகினிப் பிசாசு என்றறியாமலே இளைஞர்கள் இதன்பின் ஓடினர். இப்போது அநுபவம் பெற்றவர்கள் விரும்பும் இலட்சியம் யாதெனில், அனைவருக்கும் நீதி அளிக்கப்பட வேண்டும் என்பதே; அனைவரும் சமமாக்கப்பட வேண்டும் என்ற சாத்தியமற்ற இலட்சியமல்ல.





சாஸன உறுதியும் 'வாக்குறுதி'யும்

புதிய சாஸனத் திருத்தங்கள் வந்த பிற்பாடும், மக்களின் சொத்துக்களைச் சர்க்கார் அந்தமாக அபகரிக்காது என்று மந்திரிகள் 'வாக்குறுதி' தந்திருக்கிறார்கள். தாற்காலிகமாகப் பதவி வகிக்கிற மந்திரிகள் தருகிற 'வாக்குறுதி'கள் ஒருகாலும் அரசியல் சாஸனத்தின் உத்தரவாதத்துக்குச் சமதையாகா. இப்போது பதவியிலிருப்பவர்கள், 'நல்லவர்களாக நடந்து கொள்கிறோம்' என்று 'வாக்குறுதி' தருவதை மதித்து, அரசியல் சாஸனத்தை அடியோடு தகர்ப்பதற்கு மக்கள் ஆதரவு தரலாகாது. 'மக்களின் உரிமைகளைக் காப்பதென்றால், சாஸன ஷரத்துக்களில் அவற்றை உறுதிப்படுத்துவதொன்றே வழி; வேறெதுவும் பூரண பலன் தராது' என்று நன்கு உணர்ந்தே நமது விவேகமிக்க சாஸன கர்த்தர்கள் அதனை வகுத்தனர்.

வீண் கொள்கை

பெரிதாக விளம்பரப்படுத்தப்படும் கருத்தடைத் திட்டங்கள், மலடாக்கும் திட்டங்கள் இவற்றால் மிதமிஞ்சிய சிற்றின்ப நுகர்ச்சியில் இறங்குவதற்கே ஊக்கமளிக்கப்படுகிறது. இது உடலுக்கும் கெடுதல், அறிவுக்கும் கெடுதல். ஓரளவுக்குப் பிரம்மசரியத்தை அநுசரித்தால் உடம்பு, அறிவு இரண்டையும் ஆரோக்கியமாக வைத்திருக்கலாம்; மக்கட் தொகையும் மிதமிஞ்சிப் பெருகாமல் காக்கலாம். 'ஓரளவு பிரம்மசரியம்' என்று கூறுவதற்குக் காரணம், அனைவரும் சந்நியாசிகளைப் போல் பூரண பிரம்மசரியம் அநுஷ்டிப்பதற்கில்லை என்பதே. சாதாரணமாகப் பொது விவாதத்துக்கு அப்பாற்பட்ட நுட்பமான விஷயங்களையும் நான் எடுத்துச் சொல்ல உரிமை பெற்றிருப்பதாக எண்ணி ஒன்று கூறுகிறேன்: இக்காலத்தில் தாய்ப் பாலூட்டும் வழக்கம் மிகவும் குறைந்துவிட்டது. புட்டிப் பாலே குழந்தைகளுக்கு ஊட்டப்படுகிறது. இயற்கை முறைப்படி

தாய்ப்பால் ஊட்டும்போது கருக் கொள்ளும் இடைக்காலம் தள்ளிப் போடப்படுகிறது. தாய்ப்பால் தருவதால் உருவப் பொலிவுக்குக் குறைவு ஏற்படலாம் என்பது உண்மை. ஆயினும், அடிக்கடி கருத்தரிக்காமலிருக்க இது உதவும். திருமண வயதை உயர்த்துவதும், தாய்ப்பால் ஊட்டும் பழக்கமும் பிரச்னைக்கு நல்ல தீர்வுகளாகும்.

இயற்கையாக வாழக் கற்போமாக. குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்குவதற்கே திருமணம் ஏற்பட்டிருக்கிறது; வீட்டுக்காரியின் உருவ அழகு பிறரைக் கவர்ந்து அவர்கள் மனத்தில் ஆட்டம் போடுவதற்காக அல்ல. இதை அனைவரும் ஒப்புவர். ஆயினும் எளிய உண்மைகளையே மறந்து போகிறோம்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வெட்கக்கேடான ஊழலில் முடிந்திருக்கின்றன. இது ஒரு வீணான கொள்கை. அந்நிய நாடுகளிடம் நிறைய யாசகம் பெற்றபோது ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த ஓரளவு நியாயம் இருந்தது. 'நாங்கள் இவ்வளவு நிதி உதவி கொடுத்தும், உங்கள் தேசத்தில் மக்கட்தொகை பெருகி வருவதால் இன்னும் உங்கள் நாட்டில் தரித்திரமே இருந்து வருகிறது. அதைக் குறைக்க நீங்கள் வழிசெய்தாலன்றி எங்கள் உதவி பலன் காட்டாது' என்று மற்ற நாடுகள் குறை சொல்லுமோ என்று எண்ணி, 'பார்த்தீர்களா, நாங்கள் மக்கட்தொகையைக் கட்டுப்படுத்தி விட்டோம்' என்று அவர்களைத் திருப்திப் படுத்தவே குடும்பக் கட்டுப்பாடு மேற்கொள்ளப் பட்டது. இப்போது வெளி நாடுகள் உதவியை மிகவும் குறைத்துவிட்டன. இப்போது குடும்பக் கட்டுப்பாட்டுக்கான 'நியாய'மும் எடுபட்டுவிட்டது.

பார்லிமென்டும் ராஷ்டிரபதியும்

'பார்லிமென்டின் வோட்டுப் பலத்தால் நிறைவேறிய மசோதாவுக்கு ராஷ்டிரபதியின் 'ஒப்புதல்' என்பது நிச்சயமாக அளிக்கப் பட்டேயாக வேண்டும். அவர் ரப்பர் முத்திரை குத்த வேண்டும் என்பதுகூட அவசியமில்லை. பார்லிமென்ட் ஒரு மசோதாவை நிறைவேற்றிவிட்டால் அது சட்டம்தான்' என்று ஒரு கருத்து வெளியாகியிருக்கிறது. பார்லிமென்ட் நிறைவேற்றிய மசோதாவிலும் குறைகள் இருப்பதாகத் தோன்றினால் அதை ஸுப்ரீம் கோர்ட்டின் ஆலோசனைக்கு விட ராஷ்டிரபதிக்கு சாஸனம் உரிமை தந்துள்ளது. ஒப்புதல் தருவது தவிர ராஷ்டிரபதி ஏதுமே செய்யக் கூடாது என்பது, சாஸனத்தின் மீது செய்துள்ள பயங்கரத் தாக்குதலாகும். இதை அறிவுள்ள எவருமே ஏற்க முடியாது. கோடிக்கணக்கானவர்களின் விதிகளை முடிவு செய்கின்ற சட்டங்களைச் செய்கிறவர்கள் தங்களது அகம்பாவத்துக்கு ஓர் எல்லையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

அஸ்திவாரத்தில் அடி

உலகில் மிகச் சிறப்பாக வாழ்ந்து உபதேசித்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்கள் நமது ரிஷிகள். அவர்களது உபதேசங்களுக்கு நாம் வாரிசாக வந்திருக்கிறோம். மிகவும் விசாலமானதொரு பண்பாட்டுக்கு, மிகுந்த சகிப்புத் தன்மை கொண்ட ஒரு மதத்துக்கு நாம் வாரிசுகள். அந்த மத உண்மைகளுக்குச் சின்னமான மாபெரும் ஆலயங்கள் நமக்குப் பிதுரார்ஜிதமாகக் கிடைத்திருக்கின்றன. ஆனால், நம் குறைபாடுகள் இவை அனைத்தின் மீதும் கரிய நிழல்களைப் பரப்பி வருகின்றன. நாம் பெருமைப்படக்கூடிய விஷயங்கள் அனைத்தும் பண்டைய காலத்தைச் சேர்ந்தனவாகவே உள்ளன. சமீப காலத்தில் நாம் பெற்ற பெருமைக்குரிய ஓர் அரிய சம்பத்து நமது அரசியல் சாஸனமேயாகும். மக்களை ஆள்வதற்கு மட்டுமின்றி, அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தி ஆளுவதற்குரிய அடிப்படைச் சட்டத்தை மகாபுருஷர்கள் அரசியல் சாஸனமாக வகுத்துள்ளனர். பெருமைக்குரிய அந்த அஸ்திவாரம் தகர்க்கப்படுகிறது. சமீப காலத்தில் கூட மகா மனிதர்கள் நம்மிடை இருந்தார்கள் என்ற நினைவைத் தவிர, சாஸனத்தில் சகலமும் நொறுக்கப்படுகிறது.


வீட்டுக்கு எட்டு லக்ஷ்மி; சென்னைக்கொரு மகாலக்ஷ்மி

'பம்பாயில் மகாலக்ஷ்மி ஆலயம் என்றே ஒன்று இருக்கிறது. அதனால்தான் அந்த மாநகரில் அப்படிப் பணம் கொழிக்கிறது. சென்னையிலும் மகாலக்ஷ்மிக்கு என்று ஒரு தனி ஆலயம் எடுக்க வேண்டும்' என்பது பிரவசன நிபுணரான முக்கூர் ஸ்ரீ ஸ்ரீநிவாச வரதாச்சாரியார் அவர்களின் அவா. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆசிபெற்று இந்தப் பணியில் இறங்கியிருக்கிறார். 'மகாலக்ஷ்மிதான் எல்லோருக்கும் செல்வம் வழங்குபவள். அவளுக்குக் கோயில் கட்டுவதற்கு யாசகம் கேட்கக் கூடாது' என்றும் ஸ்ரீ காமகோடி பெரியவாள் உத்தரவு போட்டு விட்டார்களாம். ஆயினும் பொருள் வேண்டுமே! எனவே, ஸ்ரீ முக்கூர் இதற்காக ஒரு யோசனை வகுத்து அதற்கு ஸ்ரீ பெரியவாளின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறார். இதன்படி அஷ்டலக்ஷ்மிகளையும் சாஸ்திரப்படி பெரிய அளவில் சித்திரமாக எழுதச் செய்து, இந்தச் சித்திரத்தின் பிரதி ஒன்றுக்கு ரூ. 11 விலை வைக்கப்பட்டிருக்கிறது. அஷ்டலக்ஷ்மிகளின் படத்துக்காக அன்பர் வழங்கும் கட்டணம் மகாலக்ஷ்மி ஆலயம் எழுப்புவதற்குப் பயன்படுத்தப் பெறும். அதாவது மகாலக்ஷ்மிக்கென ஒருவரும் 'தானம்' கொடுக்கவில்லை; அவர்கள் தருகிற பொருளுக்குப் பிரதியாகச் சித்திரப் பிரதி கிடைத்துவிடுகிறதே! எனவே, உங்களைத் தேடி அஷ்ட லக்ஷ்மிகளும் வருவதற்கும், சென்னையைத் தேடிச் செல்வச் செந்திரு வந்து கோயில்கொள்வதற்கும் ரூ. 11 கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்: முக்கூர் ஸ்ரீ ஸ்ரீநிவாச வரதாச்சாரியார், 14-ஏ, நடுத் தெரு, மயிலாப்பூர், சென்னை — 4.


NEW!
SUPER
Surf
FOR SUPER WHITENESS
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப், வேறெந்த
சலவைப் பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும்
அகற்றிவிடும். காண்போர் பொறாமைப்படும்
கற்பனைகடந்த வெண்மை. கேட்பானேன்,
இந்தியாவின் தலைசிறந்த ரகம் :
ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்,
(வெண்மையூட்டும் சாதனம் எதுவும் சேர்க்கத் தேவையில்லை)
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-SU. 117-140 TM

பூஜ்ய டிஸூஸாவுக்குப் புனிதப் பொன் விழா

சென்னை மாநகருக்குப் புகழையும் பெருமையையும் அளித்து அதன் பொதுவாழ்க்கையில் திலகங்களைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பல பெரியோர்களின் முதல் வரிசையில் நிற்பவர் பூஜ்யர் ஜெரோம் டிஸூஸா. இவர் பெயரைச் சொன்னவுடனே "ஓ, லயோலா கல்லூரி பூஜ்யர் டிஸூஸாதானே?" என்று தயங்காமல் எல்லோருடைய நினைவிலும் அவர் இடம் பெறுவார். அவருக்கு இப்போது வயது 74. இன்றும் இளமைத் துடிப்புடனும் மனோதிடத்துடனும் லயோலா கல்லூரியில் ஆங்கில இலக்கிய உயர் வகுப்புக்களில் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஓய்வு பெற்றுக்கொண்டிருக்க வேண்டிய காலத்தில் கடுமையான வேலையில் ஈடுபட்டுள்ளவரின் ஆர்



வமும் சேவை உணர்ச்சியும் காண்போரை மெய்சிலிர்க்க வைக்கின்றன.


அவருக்குப் பொன் விழா அண்மையில் கொண்டாட விரிவாகத் திட்டமிட்டிருக்கின்றனர், லயோலா கல்லூரி முதல்வர் பூஜ்யர் ஜே. குரியகோஸும் அவரைத் தலைவராகக் கொண்ட குழுவினரும். பொன் விழா ஐம்பது ஆண்டு நிறைவைக் குறிக்கும் சம்பவமாயிற்றே, 74 ஆண்டு நிரம்பியவருக்கு இதற்கு மேல் உயர்ந்த விழா அல்லவோ கொண்டாட வேண்டும் என்று கேட்கத் தோன்றும். ஆண்டவனிடம் உள்ளன்பு மிகுந்து சமயப் பற்றுத் ததும்பி வாழும் மாந்தர்கள் தங்கள் வாழ்நாளில் ஆண்டவன் பணிக்குத் தம்மை அர்ப்பணம் செய்யச் சங்கல்பம் செய்து கொண்ட நன்னாளையே பெருநாளாகக் கருதுவர். மனித வாழ்க்கையே ஆண்டவன் சேவைக்கு, அவர் கட்டளைப்படி நடப்பதற்கு ஏற்பட்டது என்று அவர்கள் நம்புகின்றனர். பூஜ்யர் டிஸூஸா இந்த மரபில் வந்தவர். ஏசுநாதரின் சங்கம் (Society of Jesus) என்ற கிறிஸ்துவக் கத்தோலிக்க சமய சங்கத்தில் தாம் சேர்ந்த நன்னாள் 1921ம் ஆண்டில். அன்று முதல் அந்த மரபிற்குரிய தூய வெண்மை அங்கி அணிந்து அதன் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு ஜெஸூவிட் தந்தையென விரதம் பூண்டு வாழ்ந்து வருகிறார் டிஸூஸா. இந்துக்களிடையே துறவறம் பூணுவதற்குச் சமானமாக இதைச் சொல்லலாம். பிரம்மசரியம், ஏழைமை, எளிமை, ஏசுநாதரின் கட்டளைப்படி நடப்பது, மாந்தருக்குச் சேவை செய்வது ஆகிய நெறிகளை விரதமாக வாழ்க்கையில் ஏற்பார்கள். தங்களுக்கென்று பொருள் சேர்க்க மாட்டார்கள். இத்தகைய ஏசுநாதரின் சங்க ஆசிரம வாழ்க்கையைப் பூஜ்யர் டிஸூஸா தொடங்கி இன்றைக்கு ஐம்பதாண்டு ஆகிறது. இதைக் கொண்டாடத்தான் அவருக்குப் பொன் விழா. மிக மிகப் பொருத்தம்.

பூஜ்யர் ஜெரோம் டிஸூஸாவின் வாழ்க்கைப் பணி மூன்று துறைகளில் சிறப்பாக அமைந்ததை வகைப்படுத்திக் கூறலாம். அவர் முழுக்க முழுக்கக் கல்வித் துறையில் மூழ்கியவர். அவருடைய காலத்தில், அதாவது கல்லூரியில் முதல்வராக அவர் இருந்த ஆண்டுகளில் சென்னை லயோலா கல்லூரியும் அதன் பிரிவுகளும் மிகவும் விரிவடைந்தன. கல்லூரி என்றுதான் எல்லோராலும் விவரிக்கப்பட்டாலும் இதை லயோலா பல்கலைக் கழகக் கல்லூரி என்றே குறிப்பிடவேண்டும். இன்றும் கூட இதன் உயர் முதல்வர், பூஜ்யர் ஜெரோம் டிஸூஸா. அவ்வப்போது இதர அலுவல்கள் நிமித்தம் வெளி நாடுகளுக்குச் செல்லும் காலத்தைத் தவிர இவருடைய நிரந்தரப் பதவி இதுதான். இக் கல்லூரியின் நடுநாயகமாக விளங்கும் பெட்ரம் மண்டபம் பூஜ்யர் டிஸூஸாவின் முயற்சியில் உருப் பெற்றது.

சென்னை செனெட் சபையிலும் பல்கலைக் கழகத்தின் அகாடெமிக் கவுன்சிலிலும் அங்கம் வகித்துக் கல்லூரிப் படிப்பு முறைகளை ஆராயும் குழுவிலும் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றியுள்ளார். சென்னை மாநிலத்தின் சார்பில் 1946ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகவும் இவர் பணியாற்றியிருக்கிறார். அமெரிக்காவில் உள்ள ஃபோர்தன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார் பூஜ்யர் டிஸூஸா. இவருக்கு அமெரிக்க பால்டிமோர் நகர லயோலாக் கல்லூரி டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்துள்ளது.

அரசியல் துறையில் பூஜ்யர் டிஸூஸா புரிந்துள்ள பணி இவருக்கு அகில இந்திய அரங்கிலும் புகழைத் தேடித் தந்தது. அரசியல் என்றதும், கட்சிக் கோட்பாடு, பிளவுகள், மேடைப் பேச்சுக்கள் என்று எண்ணிவிட வேண்டாம். அவருடைய சமய விரதம் அரசியலில் அவர் ஈடுபடுவதை அநுமதிக்கவில்லை. அதனால் தமது செயல்களைப் பொது வாழ்க்கைக்குத் தாம் ஆற்றும் பணியாகவே கருதி

அரசியல் துறையில் எவ்வித வேற்றுமைக்கும் பிளவு சக்திகளுக்கும் உட்படாது, ஒற்றுமைக்கும் உயர்வுக்குமே பாடுபட்டவர் டிஸூஸா. கிறிஸ்தவர்கள் சிறுபான்மை வகுப்பினரேயானாலும் அவர்களுக்காகத் தனித் தொகுதி ஒட்டுரிமையும், ஸ்தான ஒதுக்கீடும் அரசியல் சட்ட அமைப்பில் தேவையில்லை என்றும், எல்லா சிறுபான்மையினர்களுக்கும் நீதி மன்றங்கள் மூலம் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள அளிக்கப்பட்டுள்ள சாஸனங்களே தங்களுக்கும் போதுமான பாதுகாப்பு என்றும் எடுத்துச் சொன்னவர். இடைக்கால மத்திய சட்டசபையில் குஜராத் ராஜ்யத்துக்கும் மகாராஷ்டிர ராஜ்யத்துக்குமிடையே டாங்க்ஸ் பகுதி சம்பந்தமாக ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைக்க நியமிக்கப்பட்ட மத்தியஸ்த குழுவில் டாக்டர் எச். ஸி. முகர்ஜி, திரு பக்ஷி டேக் சந்த் ஆகியோருடன் பூஜ்யர் டிஸூஸாவும் சேர்ந்து பணியாற்றி நீதி வழங்கினார்.



1962ல் ராஜாஜி ரோமாபுரி வாட்டிகனில் போப் ஜான்-23 அவர்களைச் சந்தித்தபோது பூஜ்யர் டிஸூஸா துபாஷியாகப் பணியாற்றினார்.

பண்டித ஜவாஹர்லால் நேருவினால் உயர்வாக மதிக்கப்பட்ட பூஜ்யர் டிஸூஸா இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களைப் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்ளப் போப்பாண்டவரின் நல்லாசியைக் கோரிப் பெற்றுத் தந்தார். கோவா விடுதலைப் போருக்குப் பல ஆண்டுகள் முன்னரே இத்துறையில் டிஸூஸா உயர்பணி ஆற்றியுள்ளார். இதைத் தொடர்ந்து ஜவாஹர்லாலின் விருப்பத்திற்கிணங்க பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து இந்தியப் பகுதிகளை மீட்க அப்போதிருந்த அமைச்சர் திரு. ராபர்ட் ஷூமானிடம் பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் நடத்த பூஜ்ய டிஸூஸா உதவினார். பிற்காலத்திய உடன்படிக்கைகளுக்கு இவை அடிகோலிவிட்டன. தவிரவும், மூன்று நான்கு சமயங்களில் அயல்நாட்டு விவகாரங்கள் பற்றி இவர் அந்தரங்கக் குறிப்புகளும் நேருவுக்கு அனுப்பியுள்ளார்.

ஐக்கிய நாட்டுப் பொதுச் சபைக்கு 1949 லும், 1951–52லும் 1955லும், 1957லும் நான்கு முறை இந்தியத் தூதுகோஷ்டியில் அங்கத்தினராகப் பூஜ்யர் டிஸூஸா அனுப்பப்பட்டார். பெரும்பான்மை இந்துக்கள் உள்ள ஒரு தேசத்தின் பிரதிநிதியாக ஒரு கிறிஸ்தவர் அனுப்பப்பட்டது அதுவே முதல் தடவை.

பொதுவாழ்க்கையை வளப்படுத்தும் வகையில், ஜெஸூயிட் கத்தோலிக்கர்கள் நடத்தும் கல்லூரிகளில் அரசியல் சாஸனத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆதார உரிமைகள், சமூக நலக் கருத்துக்கள், சமூக முன்னேற்ற லட்சியங்கள் போன்ற விஷயங்களில் அறிவை வளர்க்கும் பல டிப்ளோமா வகுப்புக்கள் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளார். இத்தகைய வகுப்புக்கள் சென்னை, திருச்சி, பம்பாய், ராஞ்சி ஜெம்ஷெட்பூர் ஆகிய இடங்களில் இன்றும் நடைபெற்று வருகின்றன. அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சமூகநல மன்றம் (Social Institute) இப்போது புதுடில்லியில் இந்திய அரசாங்கத் தொழிலாளர் நல அமைச்சராலயத்துடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தொழிலாளர் - நிர்வாக உறவு முறைகளில் நல்லிணக்கம் உண்டாக்க பூஜ்யர் டிஸூஸா ஏற்படுத்திய இம்மன்றம் பெருமளவில் உதவிக்கொண்டு வருகிறது.

பூஜ்ய டிஸூஸா ஏசுநாதர் சங்கத்தின் உயர் காரியதரிசிக்கு உதவியாளராக ரோமாபுரியில் ஆற்றிய பணியும், ஆசிய நாட்டு விவகாரங்களில் ஆலோசகராகப் புரிந்த உயர் பணியும் மிகவும் சிறந்தவையாகும். போப்பாண்டவர் சந்நிதியிலேயே பணியாற்றிய பெருமை பூஜ்யர் டிஸூஸாவுக்கு உண்டு. அவர் ரோமாபுரியிலிருந்த காலத்தில்தான் நமது தலைவர் ராஜாஜி போப்பாண்டவரை வாட்டிகனில் சந்தித்தார்.

அமெரிக்கா, ஐரோப்பா, மடகாஸ்கர், மொரீஷஸ், ஜமைக்கா, டிரினிடாட் போன்ற பல நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள பூஜ்யர் டிஸூஸா பன்மொழிப் புலவர். கன்னடம், கொங்கணி, துளு, தமிழ் முதலிய இந்திய மொழிகளைத் தவிர, ஐரோப்பிய மொழிகளாகிய லத்தீன், ஆங்கிலம், பிரஞ்சு, இத்தாலி மொழிகளில் மிகச் சரளமாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். பல பிரஞ்சு இத்தாலியப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் வழங்கியுள்ளார். இவற்றைத் தவிர ஸ்பெயின், ஜெர்மன் மொழிகளிலும் இவருக்குப் பரிசயம் உண்டு.


இத்தகைய சிறப்புக்களை உடைய பூஜ்யர் டிஸூஸா உயர்ந்த பண்பும், மனிதாபிமானமும் அன்பும் நிறைந்தவர். அவரது உருவப் படத்தை இவ்விதழ் மேலட்டையில் வெளியிடுவதில் பெருமிதமடைகிறோம். பொன் விழா கோலாகலமாக நடைபெற ஆண்டவன் அருளட்டும். பூஜ்யர் டிஸூஸா நீடூழி வாழ்க!

தீனபந்துவுக்கு அஞ்சலி

பாரத நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டு வந்த பிரிட்டன், அதற்குப் பிராயச்சித்தமாகப் பாரதத் தாயின் அடிமைத் தளைகளை நீக்கச் சில பிரிட்டிஷ் மகான்களையும் ஈன்றிருக்கிறது. ஸர் ஆலிவர் ஹ்யூம் என்பவர் ஆதி காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு அடிக்கல் நாட்டினார். வெட்டர் பர்ன் என்பவர் அவரைப் பின்பற்றினார். டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையார் சுய ஆட்சி (Home Rule) இயக்கத்தை ஆரம்பித்தார். இன்னும் சில ஆங்கில மேதைகள் நம் நாட்டுக் கலை வளங்களையும் இலக்கியங்களையும் ஆராய்ந்தறிந்து, உலகுக்குப் பிரபலப்படுத்தியதுடன், நம் நாட்டு மக்களுக்கே அதுவரை நாம் அறியாமலிருந்த நம் நாட்டின் பெருமைகளை உணர்த்தினர். இப்படிப்பட்ட ஆங்கில மகான்களில் தீனபந்து ஆண்ட்ரூஸ் தலைசிறந்து விளங்கினார். நம் நாட்டில் தேசிய உணர்ச்சியும், சுதந்திர தாகமும் தீவிரமாவதற்கு முன்னரே தீனபந்து ஆண்ட்ரூஸ் பாரதத்தின் தவப் புதல்வராக வந்து சேர்ந்தார்.

நூறாண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில் பிறந்தார்; முப்பத்தோரு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் உயிர் நீத்தார். முப்பத்து மூன்று வயது வரையில் இங்கிலாந்திலேயே வளர்ந்தார்; கேம்ப்ரிட்ஜ் கலாசாலையில் மாணவராக இருக்கும்போதே அவர் மனம் ஏழை மக்கள் பால் சென்றது. அவர்களுக்குத் தொண்டு புரிவதில் ஆர்வம் கொண்டார். கல்வியைப் பூர்த்தி செய்து விட்டு இங்கிலாந்திலேயே சமூக சேவையில் ஈடுபட்டிருந்தார்.

ஆண்ட்ரூஸ் கேம்பிரிட்ஜ் செல்லு முன்னர் ஓரிரவில் அவருக்கு ஒரு பேரனுபவம் நேரிட்டது: அவர் மனத்தில் தூய்மை, மன்னிப்பு,



அமைதி என்னும் முக்குணங்கள் வேரூன்றின. அதுமுதல் இயேசு பக்தராக மலரலானார்.

கேம்பிரிட்ஜ் சென்றதும்தான் பிஷப் வெஸ்காட் என்ற சமயப் பெரியாருடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்தான் முதன் முதலில் ஆண்ட்ரூஸின் கவனத்தை இந்தியாவுக்குத் திருப்பினார். 1904ம் ஆண்டு சார்லஸ் ஆண்ட்ரூஸ் டில்லி வந்து சேர்ந்தார்; செயின்ட் ஸ்டீபன் கலாசாலையில் ஆசிரியரானார்.

அப்போதுதான் அவர் வாழ்க்கையில் ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது. இந்திய தேசிய கிறிஸ்துவத் தலைவராக விளங்கிய ஆசிரியர் சுசில் குமார் ருத்ரா செயின்ட் ஸ்டீபன் கலாசாலை உப தலைமை ஆசிரியராக இருந்தார். வயதில் ஆண்ட்ரூஸை விடப் பெரியவராக இருந்தாலும் அவர்களிருவருக்கும் இடையே ஓர் இணைபிரியாத நட்பு ஏற்பட்டது. ருத்ராதான் அவருக்கு ஒரு பெரிய துணைவரும் வழிகாட்டியாகவும் இருந்தது.


அந்நாளிலிருந்தே ஆண்ட்ரூஸுக்கு இந்தியாவின் அடிமை நிலையைக் கண்டு மனம் குமுறலாயிற்று.

விரைவில் ஆண்ட்ரூஸ் பல இந்தியத் தலைவர்களைச் சந்திக்க நேரிட்டது. லாலா லஜபதி ராய், ராமானந்த சாட்டர்ஜி, தேஜ் பகதூர் ஸப்ரூ, கோபாலகிருஷ்ண கோகலே முதலிய தலைவர்களின் மதிப்புக்குப் பாத்திரமானார். 1906ம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொண்டார். ஆண்ட்ரூஸ் ஒரு புரட்சி வீரரானார். அவரது புரட்சி நிறத் திமிருக்கும், ஜாதி வர்க்கத்துக்கும் எதிரான ஆன்மிகப் புரட்சி.

ஆண்ட்ரூஸ் கலாசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் திரட்டிக்கொண்டு ஏழைகளுக்குத் தொண்டு புரிவதில் ஈடுபட்டார். டில்லியிலும் ஸிம்லாவிலும் இத் தொண்டுக்காகக் கூட்டங்கள் கூட்டினார். கிறிஸ்துவ மதத்தின் பல்வேறு பிரிவுகளையும் ஸ்தாபனங்களையும் ஒன்றுபடுத்தி ஐக்கிய கிறிஸ்துவ மத ஸ்தாபனத்தை நிறுவக் கனவு கண்டார். கிறிஸ்துவ ஆசிரமங்கள் நிறுவி இயேசு கிறிஸ்து பக்தர்கள் அவற்றில் சேர்ந்து எளிய வாழ்க்கை நடத்தித் தொண்டு புரிய வேண்டும் என்று திட்டம் போட்டார். விரைவில் அவர் கனவு நனவாயிற்று. காந்திஜிக்கும் அதில் பங்குண்டு.

1912ம் ஆண்டில் தமது குருமாரில் ஒருவராக அவர் கருதிய மகா கவி டாகூரை ஆண்ட்ரூஸ் சந்தித்தார். டாகூரின் கவிதை யழகும், நயமும் ஆண்ட்ரூஸைக் கவர்ந்தன. அன்றிலிருந்து, அவர்களுக்குள் ஒரு நீண்ட கால நட்பு உருவாயிற்று.

1913ம் ஆண்டில், தென் ஆப்பிரிக்காவில் ஒப்பந்தக் கூலித் திட்டத்தின் மூலம் இந்தியத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பெருந்தீங்கை எதிர்த்து மோகன்தாஸ் காந்தி, போராட்டம் தொடங்கினார். கோகலே முதலிய இந்தியத் தலைவர்கள் இவ்வியக்கத்துக்கு ஆதரவு அளித்தனர். 1914 ஜனவரியில் ஆண்ட்ரூஸ் டர்பன் போய்ச் சேர்ந்தார்; காந்தியை நாடிச்



ராஜாஜிக்குப் பின்னாலிருப்பவர் ஆண்ட்ரூஸ். அவர்களுக்கு இரு மருங்கிலும் எல்லைப்புற காந்தியும் புலாபாய் தேசாயும். வலது கோடியில் சங்கர்ராவ் தேவ்.

சென்றார். அவரைக் கண்டதும், அவருடைய பாதங்களைத் தொட்டு இந்தியர் பாணியில் கண்ணில் ஒற்றிக் கொண்டார். அது அங்கிருந்த வெள்ளையர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அன்றிலிருந்து காந்தியும் ஆண்ட்ரூஸும் இணை பிரியாத நண்பர்களானார்கள்.

கோகலே இறந்ததும், ஆண்ட்ரூஸ் அவர் பணியை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தக் கூலி முறையை எதிர்த்துப் பிரசாரம் செய்தார். ஆண்ட்ரூஸின் விடாமுயற்சியால், இம்முறை ஃபீஜித் தீவில் கைவிடப்பட்டது. இந்தியத் தொழிலாளர் விடுபட்டனர். ஃபீஜித் தீவில் ஆண்ட்ரூஸ் ஓயாது தோட்டம் தோட்டமாக நடந்து, காடுமேடுகளைக் கடந்து இதற்காகப் பாடுபட்டார். ஃபீஜியில்தான் 1917ம் ஆண்டில் ஆண்ட்ரூஸை மக்கள் ''தீனபந்து''என்ற பட்டம் சூட்டிப் பாராட்டினர். அன்று முதல் அப்பெயர் அவருக்கு நிலைத்தது.

அடுத்த இருபது ஆண்டுகள் ஆண்ட்ரூஸ் ஆண்டியாகவே உலக மெங்கும் சுற்றினார். ஏழை எளியோர் பங்காளியாகச் சென்றவிடத்திலெல்லாம் விளங்கினார்.

1919ம் ஆண்டில் பஞ்சாபில் ஜாலியன் வாலா படுகொலையைத் தொடர்ந்து, அங்கு விரைந்து சென்று துன்புற்றவர்களுக்கு உதவி புரிந்தார். தம் நாடு இழைத்த தீங்குக்கு அவர்களிடம் மன்னிப்புக் கேட்டார்.

அதே போல் தென் ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா நாடுகளில் சுற்றி, அல்லலுற்ற இந்தியர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

இந்தியாவிலும், ஏழை எளியவர், தொழிலாளர்களிடையே பரிவுடன் பணி புரிந்தார். ஒரிஸ்ஸாவில் வெள்ளத்தால் துன்புற்ற மக்களுக்கு உதவி செய்ய விரைந்தார்; சென்னை ஆலைத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய ஓடி வந்தார். கேரளத்தில் 'தீண்டப்படாத' மக்களிடையே சென்று தொண்டு புரிந்தார். வங்காளத்தில் காலரா பரவியிருந்த இடங்களுக்குச் சென்று சேவை செய்தார். இவ்வெல்லாச் சந்தர்ப்பங்களிலும் காந்திஜியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவரை யோசனை கேட்டு அவர் சொன்னபடி நடந்தார். காந்திஜி உபவாசம் இருந்தபோதெல்லாம் அவர் பக்கத்திலிருப்பார்.

1928ம் ஆண்டிலிருந்து 1937ம் ஆண்டு வரை ஆண்ட்ரூஸ் இந்தியாவின் தனித் தூதராக பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமாக அலைந்து கொண்டிருந்தார். இங்கிலாந்தில், இந்தியாவின் சுதந்திர தாகத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசி வந்தார். காந்திஜி வட்ட மேஜை மகாநாட்டுக்கு லண்டன் போகுமுன் அங்கு முன்கூட்டி மக்கள் மனத்தைத் தயார்ப்படுத்த முற்பட்டார். ''மகாத்மா காந்தியின் நோக்கங்கள்'', ''மகாத்மா காந்தி பணியில்'' என்ற இரு புத்தகங்களை வெளியிட்டார். ''கிறிஸ்துவுக்கு என் கடமை'' என்ற புத்தகத்தையும் வெளியிட்டார்.

தீனபந்து ஆண்ட்ரூஸ் மக்கள் பணியில் ஈடுபடாதிருந்திருந்தால் ஒரு திறமையுள்ள ஓவியராகத் திகழ்ந்திருப்பார். சித்திரம் வரைவதில் இளமையில் அவருக்கு ஆர்வம் உண்டு. கவிதைகளும் புனைவார். நடிப்பில் ரொம்பப் பற்றிருந்தது. சங்கீதத்தில் மிகப் பிரியம்.

ஆனால் அவற்றிலேயே முழுக அவரது மனம் இடம் தரவில்லை. தீனபந்துவாகவே அவர் வாழ்நாட்களைக் கழித்தார்.

தம் வாழ்நாட்களையே நமக்காக அர்ப்பணித்த அந்தத் தீனபந்துவுக்கு நாம் எப்படி நன்றி செலுத்தப் போகிறோம்? அவரது நூற்றாண்டு விழாவின்போது அவரை நினைத்து அஞ்சலி செலுத்தித் தியானிப்போமாக.

சென்னை நகரில் தீனபந்து ஆண்ட்ரூஸ் நூற்றாண்டு விழாவை யொட்டி நவம்பர் 29ந் தேதி கோகலே ஹாலில் மாலை ஆறு மணிக்குப் பொதுக் கூட்டம் நடைபெறும். ஸ்ரீமதி ருக்மிணி தேவி தலைமை வகிப்பார். தீனபந்துவின் ஆப்த நண்பரான ஸ்ரீ ஹோரஸ் அலெக்ஸாண்டரும் அவரது மனைவியாரும் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

சடங்குகள்

ஜகத்குரு காஞ்சிகாமகோடி சங்கராசார்ய சுவாமிகள்

நான் சொல்கிற கர்மாநுஷ்டானங்கள், பூஜை முதலியனவெல்லாம் 'வெறும்' சடங்கு தானே என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். ஆத்மாநுபவம் என்பது உள் விஷயம். இவை எல்லாமோ வெளிக் காரியங்கள். இவை எப்படி ஆத்மாநுபவத்துக்கு உதவும் என்பது அவர்களுடைய சந்தேகம்.

உண்மையில் ஆத்மாநுபவம் பெற்றுவிட்டால் சடங்கே தேவையில்லைதான். ஆனால் உண்மையான ஆத்மாநுபவம் நமக்கு வந்து விட்டதா, அதற்கு நாம் பக்குவப்பட்டுவிட்டோமா என்று அந்தரங்கசுத்தமாகப் பார்த்துக் கொண்டால் நாம் அதற்கு எவ்வளவோ தொலைவில் நிற்கிறோம் என்று தெரியும். எத்தனையோ ஜன்மாக்கள் எடுத்து, எத்தனையோ கர்மாக்களைச் செய்து, அந்தந்த பூர்வ வாசனைகளாலும் நம் உண்மை ஸ்வரூபமான ஆத்மானந்தத்தை மூடிக் கொண்டிருக்கிறோம். சத்கருமம் செய்தும், சத்வாஸனைகளைப் பெருக்கிக் கொண்டும் பழைய துஷ்கர்மங்களையும், துர்வாஸனைகளையும் போக்கிக் கொள்ள வேண்டும். பிறகு கர்மா தானே நின்று போகும். ஆத்ம தியானத்தில் இறங்கலாம். அதுவரையில் 'வெறும்' சடங்கு என்று சொல்கிற கர்மங்கள், பூஜை எல்லாம் நமக்குப் பிரயோஜனமானவையே.

எனவே, சாமானிய மக்கள் சாஸ்திரப் பிரகாரம் விதிக்கப்பட்ட எல்லாச் சடங்குகளையும் வழுவற அநுஷ்டிப்பதே நல்லது. இவற்றால் என்ன பயன் என்பவர்களுக்கு நிதரிசனமாகச் சில பலன்களைக் காட்டலாம். இன்னின்ன கர்மங்களை இப்படியிப்படி தவறின்றிச் செய்ய வேண்டும் என்று ஒருவன் கூர்ந்த கவனத்துடன் செய்கிறபோது அவன் மனசில் ஜாக்கிரியம் (ஒருமுகப்படுத்துதல்) ஏற்படுகிறது. பிறகு ஆத்ம தியானம் செய்வதற்கு இவ்வாறு மனம் ஒருமைப்படுவது அத்தியாவசியமாகும். அதோடு சாஸ்திரம் கூறுவதுபோல்தான் இருக்க வேண்டும் என்று அவன் உறுதியாக இருப்பதால் ஓர் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு (Discipline) உட்படுகிறான். இதைச் சாப்பிடக் கூடாது, இந்தப் போக்கிய வஸ்துக்களை அநுபவிக்கக் கூடாது என்றெல்லாம் சாஸ்திரப் பிரகாரம் நடப்பது வைராக்கியத்துக்குப் பெருத்த சகாயம் செய்கிறது. எத்தனை சிரமங்கள் இருந்தாலும் குற்றம் குறை இன்றிச் சாஸ்திரப்படி சடங்குகளைச் செய்யும் போது சங்கல்ப பலமும் (Will-power) உண்டாகிறது. சொந்த அபிப்பிராயமில்லாமல் சாஸ்திரம் சொல்வதே வழி என்று இருப்பதால் அடக்கம், எளிமை எல்லாம் உண்டாகின்றன.

ஆக 'வெறும்' சடங்கு என்று சொல்லப்படுவதைத் தவறாமல் அநுஷ்டிப்பதால் சித்த ஜாக்கிரியம் (மன ஒருமைப்பாடு), கட்டுப்பாடு, வைராக்கியம், சங்கல்ப பலம், அடக்கம் இத்தனை நல்ல விஷயங்கள் உண்டாகின்றன; மொத்தத்தில் ஒழுக்கத்துக்கு (Morality) வழி உண்டாகிறது. நன்னடத்தையும் ஒழுக்கமும் இல்லாமல் ஆத்ம தியானமும், ஆத்மாநுபவமும் உண்டாகவே முடியாது. புத்தர் சடங்குகளை விதிக்கவில்லை. ஆனால் அவரும் ஒழுக்கத்தை – சீலத்தை – மிகவும் வற்புறுத்தினார். தேரு பஞ்சசீலம், பஞ்சசீலம் என்று சொல்லி வந்தாரே, அந்த சீலம் பௌத்தர்களுக்கு மிகவும் முக்கியம். வைதிக சடங்குகள் இல்லாமலே புத்தர் சீலத்தை மட்டும் வற்புறுத்தினார். பூர்வமீமாம்சகர்களோ, வைதிக கர்மங்களே போதும், ஈசுவரனைப் பற்றிக் கூடக் கவலைப்பட வேண்டாம் என்றார்கள். ஆனால் நம்முடைய சநாதன தர்மத்தில் சடங்குகள் (கர்மங்கள்), அவற்றின் மூலம் சீலம், அதோடு ஈசுவர பக்தி, பிற்பாடு ஆத்ம ஞானம் என்கிற ரீதியில் எல்லாம் இணைத்துத் தரப்படுகிறது. வெறுமே சீலம் வராது. பால் வேண்டும் என்றால் பசுவை வைத்துப் போஷிக்க வேண்டும். பசுவை வைத்துப் போஷித்தால் பால் கிடைப்பது மட்டுமின்றிச் சாணமும்தான் கிடைக்கும்; வைக்கோல் கூளமும்தான் சேரும். அப்படியே கர்மங்களைச் செய்தால்தான் சீலம் வரும்; அதோடு விரும்பத் தகாதவை என்று சிலருக்குத் தோன்றுகிற சில விளைவுகளும் உண்டாகலாம். சாணத்தையும் கூளத்தையும் சுத்தப்படுத்திவிட்டுப் பசுவைப் போஷித்து வருவதே புத்திசாலித்தனம். சடங்குகளின் உண்மைப் பயனை இவ்விதமே பெறவேண்டும்.

உண்மையான ஆத்ம தியானத்துக்குச் சடங்கு வேண்டாம் என்பது போல் ஈசுவரன் என்ற மூர்த்தியும் வேண்டாம்தான். ஆனால் அது உயர்நிலையில்தான். ஆரம்பத்திலேயே வேண்டாம் என்று இருக்க முடியாது. முதலில் ஈசுவரன் மிகவும் தேவை. அதற்கு எத்தனையோ காரணங்கள். குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். நன்மை எல்லாம் நிறைந்த மூர்த்தியாக நமக்கு ஓர் ஆதரிச உதாரணம் தேவைப்படுகிறது. தொன்றுதொட்டு ஈசுவரனை இப்படிப்பட்ட அனந்த கல்யாண குண மூர்த்தியாகத்தானே பாவித்து வந்திருக்கிறோம்? 'ஈசுவரன்' என்றவுடன் அவரிடம் கெட்ட குணம் ஏதுமே இருக்காது என்று தானே நமக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது? அழகு, கருணை, சக்தி, ஞானம் எல்லாவற்றிலும் பூரணமாக ஒன்று உண்டு என்றால் அது ஈசுவரன் என்ற கருத்துதான். மனோதத்துவப்படி நாம் எதை நினைத்துக்கொண்டேயிருக்கிறோமோ அதுவே ஆகிறோம். ஈசுவரனின் கல்யாண குணங்களையே எண்ணுவதால் நம்மிடமுள்ள தோஷங்கள் நீங்கி நாமும் நல்லவர்களாகிறோம்.

எனவே சடங்கு, பூஜை இவற்றால் உண்டாகிற மற்ற பலன்களோடு, அவை நம்மை நல்லவர்களாக்க மிகுந்த உதவி புரிகின்றன.



அம்மா

ரா. கணபதி

8. அவதாரம் எனும் அரிய புதிர்

மானுட உடலை அடைந்துள்ள நானே பொருட்களின் மகேசுவரனாக அவற்றை ஆளுபவன் என்ற உயர்ந்த பாவத்தைப் புரிந்து கொள்ளாமல், அறிவற்றோர் என் அவதாரத்தை அவமதிப்பர் ...... ஆனால் பார்த்தா! மகாத்மாக்களோ எனில் எனது தெய்விக உள்ளியல்பைத் தேடிப் புரிந்து கொண்டு, மனத்தில் வேறு எண்ணமின்றி என்னையே பொருட்களின் ஆதி என்றும், அழிவற்றவன் என்றும் கண்டுகொண்டு பஜிக்கிறார்கள்.

- ஸ்ரீமத் பகவத் கீதை 9 - 11, 13

'பூதிர்கால்' என்ற கால்வாய் சலசல வென அரித்து ஓடும் மதுரத்வனி.

மரங்களிலிருந்து மழை நீர் சொட்டும் இனிய ஒலி.

மழையில் மலர்ந்த புது வாழ்வில் மகிழ்ச்சி கொண்ட பட்சிகளின் கலகல த்வனி.

தவளைகளின் கோஷ்டி சங்கீர்த்தனம்.

ஆகிய இந்த அழகிய ஓசைகளின் மத்தியில் பேசாமலே நின்றனர் ராமகிருஷ்ணரும், சாரதையும்.

ஆனால் அங்கு தம் அருமை மாமாவைத் தேடிக் கொண்டு வந்த ஹ்ருதயர் மௌனத்தைக் கலைத்து விட்டார்.

''என்ன மாமா, கண்ணெல்லாம் சிவந்திருக்கு. மூக்கை வேறே உறிஞ்சறேள். அழுதேளா? ராத்திரியும் அழுதேளா, என்ன சமாசாரம்?'' என்று வினவினார் ஹ்ருதயர்.

அவ்வளவுதான், ராமகிருஷ்ணர் உற்சாகமாகப் பேசலானார்:

''ராத்திரி ஏன் அழுதேன் தெரியுமா? அவாவாளும் தங்களைக் கடைத்தேற்றிக் கொள்ளக் கொஞ்சம் படிப்பு போறும்; உபதேசம் செய்யறவாளுக்குத்தான் நிறைய படிப்பு வேணும்னு சொன்னேனோன்னோ? நான் இத்தனை பேருக்கு இத்தனை உபதேசம் பண்ணறேனே, நான்மட்டும் என்ன பெரிசா படிச்சுட்டேன்? படிக்கா விட்டாலும் என் வழியா உபதேசம் தரணும்னு அம்மா சங்கல்பம் பண்ணிட்டா. அதனாலே மேகம் வர்ஷிக்கிறமாதிரி என்னைப் பேச வைக்கிறா. நானா பேசறேன்? களஞ்சியத்திலேருந்து வேலைக்காரன் படிப்படியா நெல்லை அளந்து போட்டுண்டேயிருப்பான். நெல் சரிஞ்சுண்டேயிருக்கும். இவன் அளந்து போடுவான். ஆனா இவனா நெல்லைப் பண்ணினான்? அல்லது அந்த நெல் இவனுக்குத்தான் சொந்தமா? இந்த சர்வசாதாரண கதாயியை எங்கம்மா கருவியாக்கிண்டு இப்படிப் பேச வைக்கிறாளேன்னுதான் ராத்திரி சிரிச்சேன்; அழுதேன்.

''இப்போ ஏன் அழுதேன் தெரியுமா? இதோ பாரு, எங்கே பார்த்தாலும் மழை ஜலம் ஊறிக் கிடக்கு. என்னோட சர்வேசுவரியும் இப்படித்தான் சர்வத்திலேயும் ஊ...றியிருக்கா. ஆமாண்டா ஹ்ருதே! எங்கம்மாவுடைய சைதன்ய விலாஸம் ஊறாமல் அண்ட பகிரண்டத்திலேயும் ஒரு பரமாணுகூடக் கிடையாதுடா. அதோ பாரு, மழை ஜலத்திலே முழுகிட்டு, உடம்பைச் சிலிர்த்துண்டு அந்தக்

காக்கா உக்காந்திருக்கே, அப்படித்தான் இந்த உலகம் முழுக்க. இதிலே இருக்கிற சாதுக்கள் துஷ்டாள், பக பட்சி, மரம் மட்டை, மலை அலை எல்லாம் எங்கம்மாவோடே சக்திலே அப்படியே சிலிர்த்துண்டு இருக்காப்பலே எனக்குத் தெரியறது. நல்லது - கெட்டது, அழகு - கோரம், ஞானம் - அஞ்ஞானம், பிரேமை-துவேஷம், ஆஸ்திகம்-நாஸ்திகம் எல்லாத்திலேயும் எங்கம்மாதான் உயிருக்கு உயிரா ஊறிக் கிடக்கான்னு பிரத்தியட்சமாகப் பார்த்துட்டு ஆனந்தபாஷ்பம் கொட்டினேண்டா, ஹ்ருதே! வெள்ளையாயிருக்கிற மேகமே தான் கறுப்பா ஆகி, நிறமில்லாத மழையைக் கொட்டறது. அப்படியே எங்கம்மா கௌரியே மகா காளியாகி நிர்குண அநுபவத்தை மழையாக் கொட்டுவா. மழைக்கு நிறமில்லாட்டாலும் இத்தனை நிறமுள்ள செடியும் கொடியும் பூவும் காயும் அதிலேருந்து தானே வந்தன? அந்த மாதிரி நிர்குண அம்மாதான் இத்தனை குணங்களாவும் ஆயிருக்கான்னு பிரத்யட்சமா புரிஞ்சுண்டு அழுதேன். இந்த மழையிலே எத்தனையோ தாவரங்களுக்குக் ஜெகுஜெகுன்னு புதுசா உயிர் வந்திருக்கு; நண்டும் நத்தையும் மீனும் கொசுவும் தவளையும் களகளன்னு வளர்றது. கெட்ட கிருமி, நல்ல ஜீவராசி எல்லாம் ஒரே மழையிலே உண்டாறது. மழையிலே பச்சுனு உயிரும் தழைக்கிறது; காலராவும் உண்டாறது. சில பூச்சிகள் மழையிலே உண்டாகிறதுகள், சில பூச்சிகள் மழையிலேயே செத்தும் போறதுகள். எனக்கு இந்த மழை பரப்பிரம்ம சக்தியாகவும், மகா மாயையாகவும் இருக்கிற எங்கம்மா காளியாவேதாண்டா தெரியறது!''

ராமகிருஷ்ணர் பேசவே முடியாமல் பரவசத்தில் திணறினர்.



.......நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையே!

என்று மாணிக்கவாசகரும் மழையைத் தேவியின் திரு வடிவமாகவே பாடினார்.

ராமகிருஷ்ணருக்கு பாவ சமாதி கூடி விட்டால் சிலசமயங்களில் தடாலென்று விழுந்துவிடுவார். அவரது உடம்பு விரைத்துப் போகும். இப்போது இவ் வாறு நடந்துவிடப் போகிறதே என்று ஹ்ருதயர் பயந்தார்.

ஆனால் ராமகிருஷ்ணரோ பரம சாந்தராக, சற்றே காய்ந்திருந்த ஓரிடத் தில் போய் அமர்ந்து கொண்டார். ஆனந்த ரூபியாக விளங்கினார்.

மாமாவையும் மாமியையும் தனியே விட்டுவிட்டு ஹ்ருதயர் நகர்ந்தார்.

அவர்கள் மௌனமாக இருக்கும் போதே, இத்தொடருக்கு ஜீவாதார மான சில சர்ச்சைகளை நாம் கவனித்து விடுவோம்.

எல்லாவற்றுக்குள்ளும் 'எங்கம்மா' தான் ஊறிக் கிடக்கிறாள். உண்மை, குணம், குறி, கிரியை ஏதுமே இன்றித் தான் பரப்பிரம்மம் கிடந்தது. அதிலே எப்படியோ சிருஷ்டி என்கிற ஒரு சிந்தனை வந்தது. அந்தச் சிந்தனைக்குத் தான் மகா மாயை என்று பேர். அது தான் 'எங்கம்மா'. ஒன்றான பிரம்மம் 'எங்கம்மா'வான தன் சக்தியைத் தானே உணர்ந்து பலவாகத் தோற்றம் எடுத்தது. அப்படித் தோன்றும்போதே, இந்தப் பலவற்றிலிருந்து ஒன்றுக்குத் திரும்பி ஒன்றுகிற ஞானத்தையும் தோற் றுவித்தாள் 'எங்கம்மா'. பலவாகத் தோன்றும் உலகைக் கடந்து ஒன்றே யான அகண்ட ஆன்மாவில் ஜீவன் பிர வேசிப்பதற்கு அவள் வழி வைத்திரா விட்டால் ஜீவர்கள் விடுபடுவதற்கு முடி யாமலே அல்லவா போயிருக்கும்? ஆனால் மகாமாயையாகத் தோன்றும்போதே, மகா காருண்யாசாலினியாகவும், மகா ஞானாம்பிகையாகவும் அவள் தோன்றினாள்.

எல்லாவற்றுக்குள்ளும் தான் ஊறி யிருந்தாலும், எல்லாவற்றையும் அந்த உள்ளுக்குள் அவள் முழுக்கிக் கொள்ள வில்லை; மேற்பரப்பில் பெரும்பான்மை ஜீவர்களிடம் 'மனம்' என்பதாக ஒன் றைச் சுதந்திரச் சொத்து போல் கொடுத்து, அந்த மேல்மட்டத்திலேயே அவர்களை மிதக்க விடுகிறாள். மனம் இருக்கிற வரையில் எண்ணங்கள், காரியங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். எண்ணமும் காரியமும் உள்ளளவும் சம்ஸாரத்திலிருந்து விடு பட்டு எண்ணமற்ற, செயலற்ற, சாசு வத நிலைக்குத் திரும்ப முடியாதுதான்! இவ்வாறு மன மாயையால் பிறந்து பிறந்து இறந்து கொண்டிருப்பவர்களை விடுவிக்க வழிகாட்டுவதற்காக அவளே அவதாரங்கள் கொள்கிறாள். எல்லாமே 'எங்கம்மா' என்றாலும், இந்த அவ தார வியக்திகள் விசேஷமாக 'எங் கம்மா' ஆவர். தம்மை மறந்துள்ள பல 'எங்கம்மா'க்களுக்குத் தங்களை உணர்த்த வந்துள்ள சில 'எங்கம்மா'க் களே அவதாரங்கள். மற்ற ஜீவராசி களுக்குத் தனி மனம் என்று ஒன்று சுதந்திரமாகச் செயல்படுவது போல் அம்பாள் வேடிக்கை காட்டுகிறாள். வேடிக்கைக்கு ஆளாவதும் அவளே தான்! தனி மனத்தினால் சுயப் பற்று என்ற ஒன்றை உண்டாக்கிக் கொண்டு, அதற்காகக் காரியங்களைச் செய்து, கர்மங்களை அநுபவிக்கப் பிறந்து பிறந்து சாகிறாள் எண்ணிறந்த ஜீவராசிகளாக.

ஜீவனின் மனம் என்பது தவிர அவ ளுக்கென்றே ஒரு மனம் இருக்கிறது. அதில் ஜீவமனத்துக்கு இருப்பதுபோன்ற சுயப்பற்று இம்மியும் கிடையாது. அம்பிகையின் மனத்தில் பரநலம் என்ப தொன்றே உண்டு; அநுக்கிரகம் ஒன்றே உண்டு. ஜீவ மனத்தின் சம்பந்தமில் லாமல், நேரே இந்த அநுக்கிரக மனத்திலிருந்து அவதார வியக்திகளை உண்டாக்கி அனுப்புகிறாள். அவர்கள் பரநலமே செய்கிறார்கள்.

ராமகிருஷ்ணரும், சாரதையும் இப் படி எங்கம்மாவின் அநுக்கிரக மனத்தி லிருந்தே கறந்த பாலைக் கறந்தபடி கொடுப்பதுபோல் நேராக வந்தவர்கள்.

'ராமகிருஷ்ணரே அம்பாளின் அவ தாரம் எனில் அவர் எதற்காகப் பக்தி செய்தார்! அவரும் ஏன் அம்பாளின் தரிசனம் கிடைக்காமல் தவித்தார்? ரஸ கனமாகத் தரிசனம் கிடைத்த போது அவரது உடலால் அதைத் தாங்க முடியாமலிருந்தது ஏன்?

'சாரதை அவதார வியக்தி எனில் அவளுக்குப் பல விஷயங்கள் தெரியாம லிருந்தது ஏன்? அவள் தான் ஓர் அவ தாரம் என்று உணர்ந்த சந்தர்ப்பங்கள் அரிதாகத்தானே காணப்படுகின்றன?'

— இந்தத் தொடர் தொடங்கியபின் சிலருக்கு இந்த ஐயங்கள் எழுந்திருக் கின்றன. விதண்டாவாதம் செய்கிற நாஸ்திகர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை; ஆனால் ஆஸ்திகர்களின் உண்மை யான ஐயங்களைக் கூடியமட்டும் தீர்க்கப்



பார்ப்பதே கடமை. எனவே, அவதார ரகசியங்களை நாம் முற்றிலும் அவிழ்க்க முடியாதாயினும் ஓரளவுக்கு விடை கண்ட பின்னரே மேலே தொடருவது யுக்தமாகும்.

''தூய பசும் பொன்னைக் கொண்டு நகைகள் செய்ய முடியாது. அது மிகவும் மிருதுவானது. எனவே, அதில் சிறிது செம்பைக் கலந்து பிருவாக்கியே நகை செய்வார்கள். இவ்வாறே பூரண ஞானப் பொன்னாக இந்த உலகில் ஒருவர் உலவி உத்தாரணம் செய்ய முடியாது. அதில் சிறிதே மாயைச் செம்பைக் கலந்துதானாக வேண்டும்'' என்பது ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு.

ஒரு குறிப்பிட்ட வேகத்தை ஒரு வஸ்து கடந்துவிட்டால் அதன்பின் அதனால் பூமியின் ஆகர்ஷண சக்திக்கு உட்பட்டிருக்க முடியாது. அது விண்வெளிக்குத் தாவிவிடும். இவ்வாறே பூரண தெய்விகத்தால் இந்த உலகில் மனித உடல் தரித்து இருக்க முடியாது போலும். எனவே, எண்ணற்ற ஜீவர்களாக வந்து தனித் தனி மனங்களைக் கனத்த போர்வையாகப் போர்த்தித் தன்னையே அவித்துக் கொள்ளும் பராசக்தி, அவதார வியக்தியாக வரும் போதும் தனது நேர் மனத்துக்கு மேல் பரப்பில் ஒரு மாயா மனத்தைப் போர்த்திக் கொள்கிறாள். ஆனால் இது கனத்த போர்வை அல்ல. சல்லாத் துணி தான். கறந்த பால்தான். ஆனால் அதன் மேலும் பாலை மறைத்து ஒரு நுரை இருக்கிறதல்லவா? அப்படியே அவதாரங்களுக்கும் சிறிது மாயைப் போர்வை இருக்கும். கனத்த மாயையால் நாம் எப்போதுமே நம்முள் இருக்கும் பராசக்தியை மறந்திருக்கிறோம் எனில், அவதாரங்களும் மெல்லிய மாயையால் அதை மறந்தாற் போலிருப்பார்கள். அப்போது அவர்கள் செய்கிற காரியங்களைப் பார்த்து, 'இவர்களும் ஜீவ பாவத்தில்தானே இருக்கிறார்கள்' என்று சொல்வது முறையல்ல.

பொன்னோடு செம்பைச் சேர்க்கலாமே ஒழிய இரும்பைச் சேர்க்கமாட்டார்கள். சேர்த்தால் பொன்னின் தன்மை அடியோடு போய்விடும். அவ்விதமே அம்பாளின் வித்யா மாயையில் உலகத்தினருடைய அவித்யா மாயையின் அவ்வளவாகத் தோஷமற்ற குணங்கள் தாம் சேரும். காமம், குரோதம், பொய், புனைசுருட்டு, தனது பிரபாவத்தைத் தம்பட்டம் அடித்துக் கொள்வது இதெல்லாம் அவதார புருஷர்களின் அண்மையிலேயே வரா. ஏதோ சில சில்லறை மாயா குணங்களே அவர்களிடம் காணப்படுமே அன்றி, ஆழ்ந்த மோகமேதும் அவர்களிடம் இராது.

ராமகிருஷ்ணர் அவதாரமானால் ஏன் பக்தி செய்தார், மற்ற சாதனைகள் செய்தார் என்பது ஒரு கேள்வி. ஓர் ஆதரிச பக்தனாக, ஓர் ஆதரிச சாதகனாக அவதரித்துக் காட்ட வேண்டும் என்று பராசக்தி திரு உள்ளம் கொண்டிருக்கக் கூடும். அப்போது அவள் சகலவிதமான பக்தி பாவங்களையும் நிகழ்த்திக் காட்டத்தானே வேண்டும்?

சாதாரண வியக்திகள் தங்களது கர்மத்தை அழித்துக் கொண்டால்தான் பகவத் தரிசனம் பெற முடியும். அவ்விதம் கர்மத்தை அழித்துக் கொள்ள எத்தனையோ அழுகை அழுதாக வேண்டும். இதை உணர்த்துவதற்காக ஓர் அவதாரம் கொண்ட ராமகிருஷ்ணர், பூர்வ கர்மம் இல்லாத போதும் அழுது காட்டி, தரிசனம் பெற்றார்.

சாதாரண வியக்திகளின் உடலால் பக்தியின் உன்னத நிலையில் ஏற்படும் மகா பாவங்களைத் தாங்க முடியாது; ஆயினும் உடலையும் பொருட்படுத்தாது அந்த பாவங்களை விரும்பி ஏற்றால் அவர்கள் பேரானந்தத்தில் முழுகுவர் என்பதை நேரில் காட்டுவதற்காகத் தேவியே ராமகிருஷ்ணராக வந்து, மனித தேகத்தால் தாங்க முடியாத பரவச அநுபவங்களை நுகர்ந்தாள்.

'ஒன்றும் தெரியாத எளியவளாக வாழ்ந்து உலகுக்கு அன்பை மலர்த்திக் காட்ட வேண்டும்' என்ற திருஉளக் கருத்துடன் சாரதையாகத் தேவி உருக்கொண்டிருப்பின், சாரதை எப்படி 'ஸர்வக்ஞை'யாக இருக்க முடியும்?

'நான் நாராயணன் என்பதையே மறந்து ஆதரிச மனிதனாக வாழ வேண்டும்' என்று கருதிப் பராசக்தி ஸ்ரீ ராமனாகப் பிறக்கவில்லையா? ஜீவர்கள் தாம் ஈசுவரனே என்று உணர வேண்டும் என்பது அத்வைதம். இங்கோ அதற்கு நேர் மாறாக ஈசுவரனான ராமன் தேவாதியரிடம், ''நான் என்னைச் சாதாரண மனிதனாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

புருஷ அவதாரங்களில் ராமனைப் போல், பெண்களில் சாரதை எனலாம். கதாதரரை 'ராம-கிருஷ்ணர்' என்பது சிவபெருமானை 'கௌரி — சங்கரன்' என்று சதியைச் சேர்த்துச் சொல்வது போலாகும். ஈசுவரனில் ஒரு பாதி அம்பாள் என்பதுபோல் 'ராமகிருஷ்ண' பெயரில் முதல் பாதி சாரதைக்கே விசேஷமாகப் பொருந்தும். ராமகிருஷ்ணர் கிருஷ்ணனாக, பிரேம ஸ்வரூபியாக இருந்தார், ஞான போதனை தந்தார், கிருஷ்



ணனைப் போலவே அவருக்குக் குடும்ப வாழ்வு விசேஷமாக இருக்கவில்லை. சாரதையோ ராமனைப் போல் குடும்பத்தில் இருந்துகொண்டு, அதற்காக வாழ்ந்தாள். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு நேர்மை, பொறுமை, அன்பு, ஒழுக்கம், தர்மம், சத்தியம் இவற்றை ஸ்ரீ ராமன் வாழ்ந்து காட்டியது போல் வாழ்ந்தாள். சாதாரணமான ஒரு குடும்பப் பெண் எப்படியிருக்க வேண்டுமோ அதைப் போதிக்கவே பராசக்தி அந்த வடிவத்தில் வந்தாள். அப்போது அதற்குப் போதுமான ஞானத்தை மட்டுமே வைத்துக் கொண்டாள். ஆசிரியர் பட்டதாரியாக இருந்தாலும்கூட முதல் வகுப்பு மாணவனுக்குப் பாடம் சொல்லித் தருவது என்றால் அதற்குரிய புஸ்தகத்தைத்தானே தாமும் வைத்திருப்பார்; அதைத்தானே அவரும் படித்துப் பார்ப்பார்?

'அதெப்படி ஸர்வக்ஞையான தேவியால் பலவற்றை மறக்க முடியும்? பொதுவாக நாம் ஒன்றை மறக்க வேண்டும் என்று நினைக்கும் போதே அதன் நினைவு வரத்தானே செய்கிறது? எனவே, 'ஞாபகமாக ஒன்றை மறப்பது சாத்தியமல்லவே?' என்கிறீர்களா? நம்மால் ஒன்றை 'ஞாபகமாக' மறக்க முடியாதுதான். ஆனால் சர்வேசுவரியால் சகலமும் முடியும். அவளால் ஒன்று முடியாதென்றால் அப்போது அவள் சர்வேசுவரியே அல்ல.

காளிதாஸன் எழுதிய சாகுந்தல நாடகத்தில் துஷ்யந்தன் சகுந்தலையை மறந்து போகிறான். காளிதாஸனே துஷ்யந்தனாக வேஷம் போட்டுக் கொண்டிருந்தாலும் சகுந்தலையை மறந்ததாகத்தான் நடித்திருப்பார். 'இவரே எழுதிய நாடகம் — இவர் எப்படி சகுந்தலையை மறக்க முடியும்?' என்று கேட்கலாமா? இந்தப் பிரபஞ்சம் முழுவதும் 'எங்கம்மா' எழுதுகிற நாடகம். அதில் தனது பிரபாவங்களைத் தானே மறந்தாற்போலவும் அவள் ஒரு பாத்திரம் தாங்கி நடிக்க முடியும். அவதார வடிவில் வரும்போது அவள் ஒரு குறிப்பிட்ட பாத்திரமாகவும் இருப்பாள்; ஓரொரு சந்தர்ப்பங்களில் சகல பாத்திரங்களையும் படைத்த ஆசிரியராகவும் தன்னைக் காட்டிக் கொள்வாள். துஷ்யந்த வேஷம் தரித்த காளிதாஸவிடமே திரை மறைவில் இன்னொரு பாத்திரம் தனது வசனங்களைக் கேட்டுக் கொண்டால் அவர் சொல்லியும் தருவார் அல்லவா? அப்படியே மறைவிலே மெய்யடியார்களுக்குத் தன் தெய்வீகத்தை வெளியிட்டு அவர்களுக்கான மார்க்கத்தைப் போதித்தாள் சாரதை.

சர்வமும் சாத்தியமான ஈசுவர சக்தி, 'ராமகிருஷ்ணராகத் தோன்றி இத்தனை ஆண்டுகள் இப்படி இப்படி இருக்கப் போகிறேன்; சாரதையாகத் தோன்றி இத்தனை வருடங்கள் இந்தமாதிரி எல்லாம் வாழப்போகிறேன்' என்று சங்கற்பித்திருக்குமாயின், அதன் பின் அவர்களைப் பற்றி ஏன், எப்படி, எதற்காக என்றெல்லாம் நாம் துருவுவதில் பொருள் என்ன?

'ஒன்றும் படித்தறியா கதாயியாவேன்; படிப்பு இல்லாவிட்டாலும் தூய்மையாலேயே மகா காளியைத் தரிசித்து, அதன் பின் படிப்பறிவில் வராத பேரறிவை எல்லாம் பெற முடியும் என்று கதாயி மூலம் காட்டுவேன்' என்று பராசக்தி திருவுளம் கொண்டனள் போலும். தனக்குத் தானே நெற்களஞ்சியத்தைச் சரித்துவிட்டுக் கொண்டு அளந்து போட்டாள். அவளே ஒன்றும் தெரியாத சாரதையாக வந்து, படிப்பில் விசேஷமாக ஒன்றும் தெரியாமலே என்றும் அன்பில் வாழ எண்ணினாள். இந்த அவதாரத்தில் நெல்லை அறிகம் சரிக்கவும் இல்லை, அளக்கவும் இல்லை. ராமகிருஷ்ணரின் பக்தி பரவசங்களும் இவ் வாழ்விலே அடங்கித்தான் இருந்தன.

மல்லிகைப் பூ தானே நன்றாகத் திறந்து மலர்வது போல் சில அவதாரங்கள் தமது அவதாரத் தன்மையைத் தாமே நன்கு மலர்த்திக் காட்டும். வாமனனும் நரசிம்மனும் கண்ணனும் இப்படிப்பட்டவர்கள். தாமரையில் புற இதழ்களைப் பிறர் கையால் விரித்து மலர்த்துவது போல் பக்தர்கள் விரித்துப் பார்த்துப் பூரணத்துவத்தை அநுபவிக்கிற அவதாரங்களும் உண்டு. சங்கர பகவத்பாதர்கள், ராமகிருஷ்ணர் ஆகியவர்கள் இப்படிப்பட்டவர். சம்பகமோ முழு மலரான பின்னும் தன் இதழ்களைத் திறப்பதேயில்லை. மடலவிழாத ஒரு மொட்டின் தோற்றத்திலேயேதான் இருக்கும். நாம் மலர்த்த முற்பட்டாலும் பிய்ந்து போகும். சாரதாமணி இப்படித்தான் இருந்தாள். தோற்றத்தில் மடலவிழ்ந்து காட்டாவிட்டாலும் சம்பகத்தின் மணமாக அவளிடமிருந்து கமகமத்த அவதாரத் தன்மையைப் பக்தர் உலகம் புரிந்து கொள்ளும்.

மதிப்புக்குரிய ஒருவர் பின்கண்ட கருத்தைத் தெரிவிக்கிறார்: ''ராமகிருஷ்ணரும், சாரதையும் 'அவதாரம்' 'அவதாரம்' என்று திரும்பத்

திரும்ப எழுதாதீர்கள்! அவதாரம் என்று அப்பட்டமாகச் சொல்லிவிட்டால், அதன் பின் அவர்கள் செய்த எந்தக் காரியத்திலும் பெருமை இல்லை. சாதாரண மனிதர்கள் இப்படி யெல்லாம் இருப்பதுதான் பெருமை.''

இந்தக் கருத்தில் நியாயம் இருக்கிறது. ஆனால் வெளிப் போராட்டங்களில் ஒரு பாத்திரம் எப்படி நடக்கிறது என்பதை விட, உட் போராட்டத்தின் எதிரெதிர்ச் சக்திகளைச் சமாளித்துச் சமநிலை அடைவதில்தான் மானுட பாத்திரங்களின் பெருமை வெளியாகிறது. உட்போராட்டம் என்பதாக எதுவுமே இன்றி, பிறந்த நிலத்திலிருந்தே ராமகிருஷ்ணரும் சாரதையும் சத்ய—தர்ம—சாந்தி — பிரேமைகளின் மூர்த்தங்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிரகிருதி வேகங்களில் பிரதானமான சரீர இச்சை திணையளவும் ஏற்படவில்லை. எத்தனையோ உட் போராட்டங்களுக்குப் பின்னரே சாதாரண மக்கள் பெறுகிற ஆத்ம சம்பத்துக்களை அவர்கள் சுபாவத்திலேயே அள்ளிச் சொரிந்து கொண்டு வந்திருந்தனர். பாலப் பருவத்திலிருந்தே அவர் பக்தி பரவசத்துக்கு மூர்த்தியானார்; அவளோ, சேவைக்கு ரூபகமானாள். இப்படிப் பட்டவர்களை மனமாயைக்கு ஆட்பட்டு சம்ஸாரத்தில் சுழன்று கொண்டே, எதிர் நீச்சுப் போட்டு வெற்றி கண்ட உன்னத மானுடர்களாக மட்டும் வருணிப்பது எப்படிப் பொருந்தும்?

அப்பட்டமாக அவதாரம் என்று எழுதாமல், வாசகர்களே தொனிப் பொருளாக உணரும்படி கோடி காட்டுவதில் இலக்கியச் சுவை அதிகம் இருக்கலாம். ஆனால் பக்திக்கு முன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பலிதர வேண்டும் என்பது போல், இலக்கியச் சுவையையும் பலி தந்தால் அதுவும்கூடத் தருமே!

இத்தனை விரிவான விளக்கமும்கூட சாரதா சரித்திரத்தின் இலக்கியச் சுவையைக் குறைப்பதாகத் தோன்றலாம்! எங்கம்மாவின் லீலா விபூதிகளில் ராமகிருஷ்ணர் திளைத்திருந்த பூதிர்காலுக்குத் திரும்பலாம்.

முதல் நாள் இரவு மழையில் கால்வாய் கரைக்கு மேலே வழிந்தபோது வெளியில் வந்த மீன்களில் ஒன்று நில இடுக்கு ஒன்றில் மாட்டிக் கொண்டிருக்கிறது! இப்போது தண்ணீர் வடிந்து விட்டது. இடுக்கிலே மாட்டிக்கொண்ட மீன் ஈரத்தில் தன் உயிரை இறுக்கிப் பிடித்துக் கொண்டு துடிக்கிறது.

ராமகிருஷ்ணர் ஒரே பரிவு மயமாக எழுந்திருந்து வந்தார்.

மீன் மாட்டிக் கொண்டிருந்த நிலப் பிளவு கால்வாய்வரையில் எட்டியிருப்பதைப் பார்த்தார். திருப்திப் புன்னகை புரிந்து கொண்டார்.

தமது கால் பெருவிரலால் அந்த இடுக்கிலேயே மீனை அங்குலம் அங்குலமாக நுந்தித் தள்ளிக்கொண்டு வந்தார். கடைசியில் மீனைக் கால்வாய்க்கே கொண்டு வந்துவிட்டார்!

பிரவாகத்தை அடைந்ததுதான் தாமதம். மீன் தன் வாலை வளைத்துஆனந்தக் குதியல் போட்டுக் கொண்டு அதற்குள் முழுகிவிட்டது. பூரித்து நின்றார் ராமகிருஷ்ணர்.

ஓர் அற்ப ஜீவனுக்கு இத்துணை பரிவு காட்டும் பதியைக் கண் பனிக்கப் பார்த்து நின்றாள் சாரதை. குடத்திலும் செம்பிலும் நீர் முகர்ந்து அவற்றை ஒன்றன் மேல் ஒன்றாக வைத்துக் கொண்டு வந்து நின்ற சாரதையை அவரும் ஒரு புதிய நினைவோடு பார்த்தார். 'இவளும் தன் இடத்தை விட்டு வெளிவந்து மாட்டிக்கொண்டிருக்கிறாள். இவளை இவளுடைய இடத்துக்கு நுந்தி நுந்தித் தள்ளவேண்டும்' என்று எண்ணி அவளை நேருக்கு நேர் பார்த்து நிர்மலமாகச் சிரித்தார் ராமகிருஷ்ணர்.

இரட்டைச் சல்லாவுடன் நிற்கிற அவதாரத்தின் ஒரு சல்லாவை எடுக்க முடிவு செய்தார். 'உலகத்தில் இத்தனை ரூபங்களையும் முக்காடாகப் போட்டுக் கொண்டு எங்கம்மா அவற்றின் இடுக்கால் என்னைப் பார்க்கிறாள்' என்று கூறியவர் அவர். அவற்றில் முக்காடிட்ட சாரதையும் ஒரு விசேஷமான எங்கம்மா எனக் கண்டார். அவளது விசேஷத்தைத் தம்மைக் கொண்டு மலர்த்திக் கொள்ளத் திரு உளம் கொண்டிருக்கிறாள் எனக் கண்டு மலர்ந்து சிரித்தார்.

அந்த அற்புதச் சிரிப்பைக் கண்ட சாரதைக்கு ராமகிருஷ்ணரிடம் ஒரு ஸ்வாதீனம் வந்தது. ''என்ன சிரிக்கிறேள்?'' என்று தன் மௌனத்தைக் கலைத்து, இனிக்கக் கேட்டாள்.

''உன்னை நீயாக்கறத்துக்குப் பாடம் ஆரம்பிக்கட்டுமா?'' என்று கேட்டார் ராமகிருஷ்ணர்.

''ஊம்'' என்று ஆமோதித்துத் தலையை ஆட்டினாள் சாரதை.

ஈரம் செறிந்திருந்த காமார்புகூர் நிலத்தில் பலர் விதைகளை நட்டனர். ஈரம் செறிந்த சாரதையின் நெஞ்சில் வித்தை நடத் தொடங்கினார் ராமகிருஷ்ணர். (தொடரும்)



எங்கெங்குமே... அழகிய சினிமா நட்சத்திரங்கள், தூய, மெல்லிய
லக்ஸ் பற்றி என்ன கூறுகிறுர்கள், உங்களுக்குத் தெரியுமா?



நீங்களும் ஒருவரது இதய வானில் சுடர் விடுபவர் தானே? – உங்கள் மேனியெழிலையும் பராமரிக்கட்டும் லக்ஸ்

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்புகள்

லின்டாஸ் – 280-140 TM

படித்துப்பாருங்கள்

From Man to God-Man

'நிகழ்காலத்தின் மிகச் சக்தி வாய்ந்த ஆன்மிகத் தலைவர் மறைந்துவிட்டார்; இந்தியாவில் சமயத் துறையிலும், தார்மிக போதனைத் துறையிலும் அவரது மறைவால் காலியாகிவிட்ட இடத்தைப் பூர்த்தி செய்ய இயலாது' என்று ராஜாஜி எழுதினர் — ஸ்வாமி சிவாநந்த சரஸ்வதி அவர்கள் விதேக முக்தி எய்தியபோது. ஹ்ருஷீகேசம் என்றாலே சிவாநந்தர் என்ற நினைவு வருமாறு, ஹிமோத்கிரியில் ஆசிரமம் அமைத்து, ஆயிரமாயிரம் அடியாருக்கு ஆசிரயம் அளித்தவர்; சரீரத்திலும், ஆத்மாநுபவத்திலும் இமயபர்வதமாக விளங்கியவர் ஸ்வாமிகள். அவரது ஆன்ம மகிமை ஒருபுறமிருக்கட்டும் — மக்களோடு மக்களாக அவர் பழகிய எளிமையன்புக்கு உவமையே சொல்ல முடியாது. உலகை உய்விக்க வேண்டும் என்ற உள்ளார்ந்த ஆர்வத்துடன் அவர் தொண்டு செய்தார். அவரது அந்தரங்க சுத்தத்தின் காரணமாகவே சகல கண்டங்களிலிருந்தும் நூறு நூறு பக்தர்கள் அவர் காட்டிய நன்னெறியை மேற்கொண்டனர். தெய்விக வாழ்க்கைச் சங்கம் என்பது சர்வதேச ஸ்தாபனமாயிற்று.



ஸ்வாமி சிவாநந்த சரஸ்வதி

மானுடரொருவர் தெய்விக மனிதரானதை அருமையாக விளக்குவது அந்த மகானின் இச் சரித்திரம். நூலாசிரியருக்கு விஷயத்தில் உள்ள ஆழ்ந்த பற்றும், எழுத்து நடையில் உள்ள திறனும் புத்தகத்தை மிகவும் சுவாரஸ்யமாக்குகின்றன.

Author and Publisher: N. Anantanarayanan, 18-C, Irwin Road, New Delhi - 1; Price Rs. 16.

Concentration and Meditation

மனத்தை ஒடுக்கி, உருப்படைத்த ஈசுவரவிடமோ, உருவமற்ற பரம்பொருள்—அல்லது ஆத்மாவிலோ ஈடுபடுத்துவதே தியானம். சிதறும் சித்தங்களைத் திரட்டுவதை தாரணை (Concentration) என்றும், ஒன்றுபட்ட மனத்தை அந்த நிலையிலேயே நிறுத்தி வைப்பதை தியானம் (Meditation) என்றும் யோக சாஸ்திரங்களில் சொல்லப்படும்.

'மனத்தை ஒருமுகப்படுத்துவது' என்று எழுதுவது சுலபம். காரியத்தில் செய்வது மகா கடினம். இதில் எத்தனை எத்தனை இடர்ப்பாடுகள் ஏற்படும், அவற்றை எப்படியெல்லாம் எதிர்கொண்டு வெல்வது, அவ்விதம் வென்று மனத்தைக் கட்டுப்படுத்துவதால் எப்படிப்பட்ட பேரின்பப் பெருவாழ்வு கிட்டும் என்ற விஷயங்களை மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் இந்நூலில் விளக்கியிருக்கிறார் தியான சித்தர்களான ஸ்ரீ சிவாநந்தர்.

மகாத்மாவான ஸ்வாமி சிவாநந்தரின் நூலில் குறை சொல்லலாகாது. ஆயினும் இது 'நூல்' என்று அவரால் எழுதப்பட்டதல்ல. பல சந்தர்ப்பங்களில் அவர் இவ்விஷயமாக எழுதியதைத் தொகுத்திருக்கிறார்கள். எனவே, அந்தத் தொகுப்பில் உள்ள குறையைச் சொல்லலாம்: ஒரே விஷயம் பல இடங்களில் திரும்பத் திரும்பக் காணப்படுகிறது — மன ஒருமைப்பாடு பற்றிய நூலிலேயே மனம் ஒன்ற முடியாத அளவுக்கு!

ஒரு குறிப்பிட்ட சாதகரை எப்படியேனும் தியானத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக ஸ்வாமிகள் 'ஆசை' காட்டு முகமாகக் கூறிய யோசனைகளைப் பொதுப்படையாக்குவதில் ஆபத்து உண்டு. உதாரணமாக, 'ஸப் கான்ஷியஸ்' எனப்படும் உள் மனத்தைத் தட்டி எழுப்பி அதன் மூலமாகப் பல சாதனைகளைச் செய்வது மெய்ப்பொருள் தரிசனத்தை மறைக்கும் தடையே ஆகும். ஆத்ம சாட்சாத்காரத்துக்கு மாறான அனைத்தையும் கடந்து செல்ல வேண்டும் என்று அடித்துக் கூறும் ஸ்வாமிகளின் நூலில் இந்த யோசனைக்கு இடம் தந்திருப்பது யுக்தமல்ல.

கண்டன வார்த்தையுடன் விமரிசனத்தை முடிக்க வேண்டாம்: மிக மிகப் பயனுள்ள, உயர்ந்த நூல்.

Published by The Divine life Society, P. O. Sivananda Nagar, Dt. Tehri - Garhwal. U. P. Price Rs. 6 - 50.

சிவாநந்தர் திரு உருவச் சிலைத் திறப்பு

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பத்தமடை சிவாநந்த மடத்தில் வருகிற டிசம்பர் 2-ந் தேதியன்று காலை 6 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமி சிவாநந்த சரஸ்வதி அவர்களின் வெண்பளிங்குத் திருவுருவச் சிலை பிரதிஷ்டை செய்யப்படுகிறது. தற்போது ரிஷிகேசத்தில் தெய்விக வாழ்க்கைச் சங்கத் தலைவராக உள்ள ஸ்வாமி சிதாநந்தா அவர்கள் இந்த உத்ஸவத்துக்குத் தலைமை தாங்குகிறார்கள்.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



அத்தியாயம் எழுபத்துநான்கு

"நானே முடிசூடுவேன்!"

வந்தியத்தேவன் கடைசியாகக் கூறினான்: ''இளவரசே! ஒரே ஒரு மனிதர் மனது வைத்தால் உண்மையில் என்ன நடந்தது என்பதைச் சொல்லி என்னைக் குற்றமற்றவன் ஆக்கலாம். அந்த ஒருவர் பெரிய பழுவேட்டரையர்தான். கடம்பூர் மாளிகையில் யாழ்க் களஞ்சியத்தில் ஒளிந்திருந்த என்னைத் திடீரென்று கழுத்தைப் பிடித்து இறுக்கிக் கீழே தள்ளி மூர்ச்சை அடைந்து விழச் செய்தவர் அந்த வீரப் பெருமகனாராகவே இருக்க வேண்டும் என்று ஊகிக்கிறேன். வேறு யாரும் அச்சமயம் வந்திருக்க முடியாது. நந்தினி தேவி பேரில் சந்தேகங் கொண்ட அந்தக் கிழவர்தான் அவ்வாறு காளாமுக சைவராக உருக்கொண்டு மறைவிடத்திலிருந்து அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக வந்திருக்க வேண்டும். காளாமுகச் சைவக் கூட்டத்தைச் சேர்ந்த இடும்பன்காரி அவருக்கு இரகசிய வழியில் வருவதற்கு உதவி செய்திருப்பான். ஆனால் அந்த மாபெரும் வீரருக்கு என்னை முதன்முதல் பார்த்த போதே என்மீது வெறுப்பு உண்டாகி விட்டது. அந்த வெறுப்பு நாளுக்கு நாள் அதிகமாகியே வந்தது. அவர் என் உயிரைக் காப்பாற்றுவதற்காக முன் வந்து அங்கு உண்மையில் நடந்ததைச் சொல்லப் போவதில்லை. நான் இந்தப் பயங்கரமான பழி பூண்டு இறந்தால் அவருக்கு ஒருவேளை சந்தோஷமாகவே இருக்கும். ஆகையால், இளவரசே! எனக்குத் தப்பிச் செல்வதற்கு அனுமதி கொடுங்கள்! முடிந்தால் நான் ஈழ நாடு சென்று அங்கே பாண்டிய குலத்து மணிமுடியையும் இரத்தின ஹாரத்தையும் தேடிக் கண்டு பிடிப்பேன். அல்லது இங்கேயே உங்கள் கை வாளால் என்னைக் கொன்று விடுங்கள்! என்னிடம் அளவிலாத அன்பு வைத்திருந்த தங்கள் தமையனாரைக் கொன்ற பழியைச் சுமந்து நாற்சந்தியில் கழுவில் ஏற்றப்படும் கதிக்கு என்னை ஆளாக்காதீர்கள்! அதைக் காட்டிலும் தங்கள் கை


வாளினால் இறப்பது எனக்கு எவ்வளவோ ஆறுதலை அளிக்கும்! அல்லது இந்தக் கொடும்பாளூர்க் கோமகளின் கையினால் நஞ்சுண்டு இறந்தாலும் பாதகமில்லை. இவரும் தங்கள் திருத்தமக்கையுமே இந்த அநாதையின் பேரில் கருணை கொண்டு யமலோகத்தின் வாசற்படி வரைக்கும் சென்றிருந்தவனைத் திரும்பவும் இவ்வுலகத்துக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். இதற்காக இவர்களுக்கு நன்றி செலுத்தப் போவதில்லை!''

இவ்வாறு வந்தியத் தேவன் கூறிய போது வானதி இளவரசரை நோக்கி, ''கேளுங்கள், ஐயா! நீங்களே கேளுங்கள்! இந்தச் சுத்த வீரருக்குப் போர்க்களத்தில் எதிரிகளுக்கு முன்னால் நின்று போரிட்டு வீர சொர்க்கம் அடையும் விருப்பம் இல்லையாம்! பெண்களின் கையினால் விஷம் அருந்திச் சாவதற்குத் தவம் கிடக்கிறாராம்!'' என்றாள்.

''இளவரசே! இவரும் தங்கள் திருத்தமக்கையும் என் மீது சொல்லும் நிந்தை மொழியினாலேயே என்னைக் கொன்று விடுவார்கள் போலிருக்கிறது. அதை விட இவர்கள் கையினால் நஞ்சுண்டு இறப்பது விசேஷம் அல்லவா?'' என்றான் வாணர் குல வீரன் வந்தியத்தேவன்.

அருள்மொழி வர்மர் இந்தப் பேச்சுக்களையெல்லாம் பாதி கவனத்துடனே தான் கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய மனத்துக்குள் வேறு எதைப் பற்றியோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது.

சட்டென்று ஒரு குதிகுதித்து எழுந்து நின்று, ''ஆகா! நான் முடிவு செய்து விட்டேன். நானே சோழ நாட்டின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்வேன். நாடு நகரமெல்லாம் மக்கள் 'அருள்மொழி வர்மனே இரு முடி சூட வேண்டும்!' என்று கோஷம் செய்கிறார்கள். போர்வீரர்களின் விருப்பமும் அதுவே! அவர்கள் எல்லாருடைய விருப்பத்தையும் நிறைவேற்றுவேன்.



எதற்காகத்தெரியுமா? உன்னைக் குற்றம் அற்றவன் என்று விடுதலை செய்வதற்காகத்தான். அதனால் எனக்கு ஏதேனும் அபகீர்த்தி வருவதாக இருந்தால் வரட்டும்! அது என்னைப் பாதியாது! என் பேரில் விரோதப் பான்மை கொண்ட சிற்றரசர்கள் சிலர் ஒருவேளை அந்த அபகீர்த்தியைப் பரப்புவதற்கு முயலலாம். ஆனால் மக்கள் அதை நம்பமாட்டார்கள். சிற்றரசர்கள் என் பேரில் குற்றம் சுமத்தத் துணிந்தால், அது அவர்கள் பேரிலேயே திரும்பிப் போய்ச் சேரும்! கடம்பூர் மாளிகைக்குச் சிற்றரசர்கள் விருந்துக்கு அழைத்து அவரைக் கொன்றுவிட்டார்கள் என்று என்னால் திருப்பிச் சொல்ல முடியும். அத்தகைய நம்பிக்கைத் துரோகத்துக்காகவும் இராஜகுலத் துரோகத்துக்காகவும் அவர்கள் எல்லாரையும் தண்டிக்கவும் என்னால் முடியும். எது எப்படியானாலும் நானே முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன். என் தந்தை தமக்கை இவர்களின் விருப்பத்துக்கு விரோதமாக நடந்தாலும் நடப்பேன். ஆனால் உனக்கு எந்தவிதத் தீங்கும் நேருவதை என்னால் பார்த்துக்கொண்டு பொறுத்திருக்க முடியாது!'' என்றார்.

வானதி ஒரே குதூகலத்துடன், ''தங்களுடைய இந்த வார்த்தைகளைக் கேட்பதற்கு இளையபிராட்டி இங்கே இல்லாமற் போனாரே! அவர் முன்னிலையிலும் ஒரு தடவை இந்த வார்த்தைகளைச் சொல்லுங்கள்!'' என்றாள்.

''ஒரு தடவை என்ன? பல தடவை சொல்லுகிறேன்! காரியத்திலும் இதைச் செய்து காட்டுகிறேன்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

வந்தியத் தேவன் தன் கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ''ஐயா! ஏழையும் அநாதையுமான என் காரணமாகத் தாங்கள் தங்களுடைய மன உறுதியை மாற்றிக் கொண்டு முடிசூடுவதற்கு முன்வந்தால், அது சோழநாடு செய்த பாக்கியமாகும். உண்மையைச் சொல்வதாக இருந்தால், மதுராந்தகத் தேவரை நான் அறிந்த வரையில் அவர் முடிசூடச் சிறிதும் தகுதி இல்லாதவர். பெண்களைப் போல் மூடு பல்லக்கிலே பிரயாணம் செய்து இராஜ்யத்துக்காகச் சதி முயற்சிகளில் ஈடுபடுகிறவர் ஒரு சாம்ராஜ்யத்தை ஆளத் தகுதி உடையவரா? விஜயாலய சோழரும் பராந்தக சோழரும் அலங்கரித்த சோழ சிங்காதனத்தில் இத்தகைய கோழைத்தனமே உருக் கொண்டவர் ஏறுவது நியாயமா? இதை இந்நாட்டு மக்கள் விரும்பாததில் வியப்பு ஒன்றுமில்லை!'' என்று குரல் தழுதழுக்கக் கூறினான்.

''இதை உணர்ந்துதான் மதுராந்தகத் தேவரே மாயமாய் மறைந்துவிட்டார் போலிருக்கிறது!'' என்றாள் வானதி.

''ஆம், ஆம்! அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பிரயத்தனத்தை இனி விட்டுவிடப் போகிறேன். நானே முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன்!'' என்றார் அருள்மொழி வர்மர்.

இதைக் கேட்டுக் கொண்டே அச்சமயம் அவ்வறையினுள் பிரவேசித்த குந்தவை, ''தம்பி! அந்த ஆசையை அடியோடு விட்டுவிடு! உனக்குச் சிங்காதனமும் இல்லை; மணிமகுடமும் இல்லை. என் அருமைத் தோழி வானதி தஞ்சைச் சிங்காதனத்தில் ஏறுவதில்லை என்று சபதம் செய்திருப்பதை மறந்துவிட்டாயா? அவள் இல்லாமல் வேறொரு பெண்ணை உன் அருகில் வைத்துக் கொண்டு நீ முடிசூட்டிக் கொள்வதை நான் ஒருநாளும் என் கண்களால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது!'' என்றாள்.

''அக்கா! அந்தச் சமயத்திலே மட்டும் தாங்கள் தங்களுடைய கண்களை மூடிக் கொண்டால் போகிறது. நான் வேணுமானாலும் தங்கள் கண்களை அச்சமயம் பொத்தி உதவுகிறேன்!'' என்றாள் வானதி.

பொன்னியின்செல்வர் குந்தவையைப் பார்த்து, ''சகோதரி! தங்கள் தோழியின் சபதத்துக்காகச் சோழ ராஜ்யம் அரசன் இல்லாமலே நடக்க முடியுமா? நம் தந்தையோ இராஜ்ய பாரத்தை இறக்கி வைத்துவிட்டுக் காஞ்சிக்குப் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார். மதுராந்தகத் தேவரோ மாயமாக மறைந்துவிட்டார். வேறு வழிதான் என்ன? எப்படியும் நான் முடி சூட்டிக் கொள்ளாமல் தீராது போலிருக்கிறதே? இராஜ்ய உரிமை பற்றி நாடெங்கும் ஒரே கொந்தளிப்பாக இருப்பது தங்களுக்குத் தெரியாததல்லவே? இந்தக் கொந்தளிப்பை எத்தனை காலம் விட்டு வைக்க முடியும்?'' என்றார்.

''தம்பி! ஒரு சந்தோஷ சமாசாரம். அதைத் தெரிவிப்பதற்குத்தான் நான் விரைந்து ஓடிவந்தேன். மறைந்திருந்த மதுராந்தகத் தேவர் வெளிப்பட்டுவிட்டார். சோழ குலத்து முன்னோர்கள் செய்த தவம் வீண் போகவில்லை! இராஜ்யம் என்ன ஆகுமோ என்று நீ கவலைப்பட வேண்டியதில்லை. அவர் வேண்டாம் என்று சொன்னாலும் நாம்

இக்கட்டான நிலை; விடுபட்ட கலை!

சென்னையில் ரேடியோ நிலையம் தோன்றிய காலத்திலிருந்து திரு ஆனந்த ராவ் கிரிக்கெட் விமர்சகராக டெஸ்ட் பந்தயங்களை அலசி வருகிறார்.

நேரு ஸ்டேடியத்தில் ரஞ்சித் கோப்பைப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீ ஆனந்த ராவ் விமர்சனம் செய்து கொண்டிருந்தார். அருகிலிருந்த ஸ்கோரருக்குக் காக்கா வலிப்பு வந்துவிட்டது. மற்ற இரு விமர்சகர்களும் அந்த ஸ்கோரருக்கு சிகிச்சை செய்ய எழுந்து சென்றார்கள். ரேடியோவில் வர்ணனையைப் பாதியில் நிறுத்த முடியுமா? "நானே ஸ்கோர் எண்ணிக்கையைக் குறித்துக் கொண்டு ஆட்டத்தைக் கவனித்து விமர்சனம் செய்து அந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுபட்டேன். அஷ்டாவதானம்தான்" என்கிறார் டெஸ்ட் விமர்சகர் ஸ்ரீ ஆனந்தராவ்.

* * *

"1960-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் கிரிக்கெட் பந்தயம் நேரு ஸ்டேடியத்தில் நடந்து கொண்டிருந்தது. திடீரென்று நெருப்புப் பிடித்துவிட்டதாகச் செய்தி கிடைத்ததும், அருகில் கிரிக்கெட் விமர்சனம் செய்து கொண்டிருந்த சகாக்கள் கீழே இறங்கிச் சென்று விட்டார்கள். ரேடியோ விமர்சனத்தில் நெருப்பை அணைக்க முயற்சி எடுத்துக் கொண்டதையும் நெருப்பு அடங்கிவிட்டதையும் தைரியமாக இருந்த இடத்தை விட்டு நகராமல் அமர்ந்து கூறினேன். பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்கும்போது அவர்களுக்குக் கிலி 'ஏற்படும்படியான நிலைமை உண்டாக்கிக் குழப்பம் விளைவித்துவிடக்கூடாதல்லவா?" என்று அன்றைய பந்தயத்தில் துணிச்சலுடன் விமர்சனம் தொடர்ந்து நடத்தியதைக் கூறுகிறார் ஸ்ரீ ஆனந்த ராவ். —குண்டுமணி





பிடிவாதம் பிடித்து அவருக்கு மகுடாபிஷேகம் செய்துவைக்க வேண்டும்!" என்றாள் இளையபிராட்டி.

அவருடைய உற்சாகம் மற்ற மூவருக்கும் சிறிது வியப்பை அளித்தது. சில நாட்களாகவே குந்தவைப் பிராட்டி மதுராந்தகருக்கு முடிசூட்டுவதற்குச் சாதகமாக இருந்தது உண்மைதான். ஆனால் அதில் அவர் இவ்வளவு உற்சாகம் உடையவர் என்று இதுவரையில் காட்டிக் கொள்ளவில்லை.

பொன்னியின் செல்வர் அது சம்பந்தமாகத் தம் வியப்பை அடக்கிக்கொண்டு, "தேவி! அவர் எங்கே மறைந்திருந்தார்? எதற்காக? எப்படி வெளிப்பட்டார்?" என்று கேட்டார்.

"நமக்கு அருகிலேயே அவர் இருந்து வந்தும் நம்மாலேதான் கண்டுகொள்ள முடியாமற் போயிற்று. தம்பி! செம்பியன் மாதேவியின் திருவயிற்றில் உதித்தவர்தான் சோழ சிங்காதனத்தில் ஏறத் தகுந்தவர். உன் சித்தப்பாவுக்குத்தான் இந்த ராஜ்யம் நியாயமாக உரியது. நீ மகுடம் புனையலாம் என்ற எண்ணத்தை அடியோடு விட்டுவிடு! ஓர் அதிசயத்தைக் கேள் தம்பி! நாலு நாளைக்கு முன்னால் நம் சித்தப்பாவுக்கு ஒரு பெரிய கண்டம் வந்தது. கொலைகாரன் ஒருவன் அவர் மீது குத்திட்டியை வீசி எறியக் குறி பார்த்தான். அதை அவன் எறிந்திருந்தால் மதுராந்தகத் தேவரின் உயிர் போயிருக்கும். சோழ குலத்தில் இன்னொரு அகால மரணம் ஏற்பட்டிருக்கும். அப்படி நேராமல் தடுத்த வீராதி வீரர் யார் தெரியுமா? தம் உயிரைக் கொடுக்கத் துணிந்து நம் சித்தப்பாவைக் காப்பாற்றியவர் யார் தெரியுமா?" என்று கூறிக் கொண்டே இளையபிராட்டி தமது விசாலமான கண்களை வந்தியத்தேவன் பேரில் திருப்பினார். அந்தக் கண்களில் ததும்பிய அன்பும், ஆர்வமும், நன்றியும், நன்மதிப்பும், ஆதரவும், அநுதாபமும் வந்தியத்தேவனது நெஞ்சின் அடிவாரம் வரையில் சென்று அவனைத் திக்குமுக்காடச் செய்தன.

பொன்னியின் செல்வரோ வியப்புக் கடலில் ஆழ்ந்தவராக "இது என்ன அக்கா! எனக்குப் புரியவில்லையே? என் தோழனும் இதுபற்றி எனக்குச் சொல்லவில்லையே?" என்றார்.

"அவர் சொல்லி யிருக்க மாட்டார். ஏனெனில் அவர் செய்த காரியத்தின் பெருமையை அவரே உணர்ந்திருக்க மாட்டார். சோழ குலம் அவருக்கு எவ்

வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பது அவருக்கே தெரியாது!''

''அக்கா! புதிர் போடுவது போல் பேசுகிறீர்களே! எல்லாம் ஒரே மர்மமாயிருக்கிறதே? எங்களை வீண் திகைப்புக்கு உள்ளாக்காமல் விளக்கமாகச் சொன்னால் நல்லது. இந்த வாணர் குல வீரர் மதுராந்தகரை எப்படி, எங்கே, எந்த வித அபாயத்திலிருந்து காப்பாற்றினார்? மதுராந்தகத் தேவர் இப்போது எங்கே?'' என்று இளவரசர் கேட்டார்.

''பொன்னியின் செல்வ! இதோ இன்னும் சில விநாடிப் போதில் அவரே இங்கு வந்து விடுவார்! நீ இங்கே வந்திருக்கிறாய் என்று தெரிந்து இவ்விடம் அழைத்து வரச் சொல்லி யிருக்கிறேன். அவர் வாய்மொழியாகவே கேட்டுத் தெரிந்து கொள்! அல்லது எல்லாவற்றையும் கண்ணால் பார்த்த பூங்குழலியிடம் கேட்டுத் தெரிந்து கொள்! இதோ அவர்கள் வருகிறார்கள் போலிருக்கிறது!''

ஆம்; அச்சமயம் அறைக்கு வெளியில் காலடிச் சத்தம் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் நாலு பேர் உள்ளே வந்தார்கள். முதன் மந்திரி அநிருத்தர், ஆழ்வார்க்கடியான், பூங்குழலி, சேந்தன் அமுதன் ஆகியவர்கள் வந்தார்கள்.

சேந்தன் அமுதன் மட்டும் வழக்கத்துக்கு மாறாக விசித்திரமாக உடை அணிந்திருந்தான். தலையில் இளவரசுக் கிரீடம் அணிந்து, பட்டுப் பீதாம்பரமும், அரச குலத்துக்குரிய ஆபரணங்களும் புனைந்திருந்தான்.

அறைக்குள் வந்த கோஷ்டியினரை உள்ளே இருந்தவர்கள் சிறிது வியப்புடன் பார்த்தார்கள்.


''சகோதரி! மதுராந்தகர் வருவார் என்றல்லவோ சொன்னீர்கள்? அவரைக் காணோமே?'' என்றார் அருள்மொழி.

''தம்பி! இதோ உன் முன்னால் இளவரசுக் கிரீடம் அணிந்து நிற்கிறாரே, இவர்தான் செம்பியன் மாதேவியின் திருவயிற்றில் உதித்த, சிவஞான கண்டராதித்தரின் புதல்வர். இவர்தான் நமக்கெல்லாம் சித்தப்பன் முறை பூண்ட சிவபக்திச் செல்வர். இத்தனை காலமும் சேந்தன் அமுதன் என்ற பெயருடன் அக்ஞாதவாசம் செய்து வந்தார். சோழர் குலம் செய்த பாக்கியத்தினால் இன்றைக்கு வெளிப்பட்டு வந்தார். இவரைத்தான் நாலு நாட்களுக்கு முன்னால் கொடியோன் ஒருவன் ஈட்டியினால் குத்திக் கொல்ல முயன்றான். அதைத் தடுத்து இந்த வாணர் குல வீரர் சோழ குலத்துக்கு இணையில்லாத உதவி புரிந்தார். நமது முதன் மந்திரியின் சீடரான இந்த வீர வைஷ்ணவர் இவர் சைவர் என்பதையும் பொருட்படுத்தாமல் இவரைக் கோட்டைக்குள் கொண்டு வந்து சேர்த்தார்...''

இச்சமயத்தில் திருமலை குறுக்கிட்டு, ''தேவி! இச்சைவருக்கு நான் எவ்வித உதவியும் செய்யவும் இல்லை; செய்ய விரும்பவும் இல்லை. வல்லத்து இளவரசரைப் பல்லக்கில் கொண்டு வருவது சாத்தியமாகும் பொருட்டு இவருக்கு மாறுவேடம் புனைந்து யானையில் ஏற்றி வந்தேன்'' என்றான்.

குந்தவை, ''ஆம், ஆம்! திருமலை நம்பி இருவகையில் பேருதவி புரிந்திருக்கிறார். மதுராந்தகத் தேவருக்கு இளவரசுக் கிரீடம் அணிந்து யானைமீது ஏற்றிக் கொண்டு வந்தபோது உண்மையிலேயே இந்த நாட்டின் சிங்காதனத்துக்குரியவரை அழைத்து வருகிறோம் என்று தெரிந்திராது. அல்லது தெரிந்து தான் செய்தாரோ, அதை நான் அறியேன்! எப்படியேனும் இருக்கட்டும்! தம்பி! இத்தனை காலமும் மதுராந்தகத் தேவர் என்று நாம் எல்லோரும் எண்ணியிருந்தவர் உண்மையில் மதுராந்தகத் தேவர் அல்ல. இவர்தான் சோழ குலத்தின் தவப் பயனாக மூத்த எம்பிராட்டியின் வயிற்றில் உதித்தவர். நாம் அறிய முடியாத இறைவன் திருவிளையாடல் இவரை இத்தனை காலமும் குடிசையில் வாழ்ந்திருக்கச் செய்தது. ஆயினும் சோழர் தொல்குடியில் பிறந்ததனால் வந்த குணாதிசயங்கள் இவரிடம் குடிகொண்டிருந்ததை நாம் எல்லோரும் ஒவ்வொரு சமயம் பார்த்து வியந்திருக்கிறோம். முன்னொரு சமயம் இவர் இந்த வாணர் குலத்து வீரரைத் தப்ப வைப்பதற்காகச் செய்த முயற்சியை நாம் அறியோமா? தம்பி! உன்னை இவரும் பூங்குழலியும் கோடிக் கரையிலிருந்து நாகைப்பட்டினம் வரையில் கொண்டு போய்ச் சேர்த்ததைத்தான் மறக்க முடியுமா? இவர்தான் உண்மையில் நம் சித்தப்பா என்பதை இன்று செம்பியன் மாதேவியின் வாய்மொழியாகவும் அறிந்தோம்; இவரும் ஒப்புக் கொண்டார். தம்பி! இந்தப் புண்ணிய தினத்தில் இவரை நம் அரண்மனைக்கு வரவேற்கிறேன். இல்லை, இல்லை; இவருடைய சொந்த அரண்மனைக்கு வரவேற்கிறேன். இத்தனை காலமும் நம்மை விட்டுப் பிரிந்து வாழ்ந்தவரை இன்று நம் குடும்பத்தோடு ஒன்று சேர்த்துவிடும்படி அழைக்கிறேன். இத்தனை நாளும்

இன்று—ஜானகியின் வீட்டுவேலை பூராவும் முடிந்தது. அம்மாவைப் பார்த்துவிட்டு, வரும் வழியில் கடைக்கும் போய் வந்தாயிற்று. இப்போது — மகன் ராஜனுடன் விளையாடும் நேரம்.



"என்ன இருந்தாலும் 'ஹார்லிக்ஸ்' தரும் முழுமையான ஊட்டச்சிறப்பே தனி"

என்கிறாள் ஜானகி

முழு ஆடைப்பால், செழுமையான கோதுமை இவை தரும் நிறைவான பயனும் புரதச்சத்தும் நிரம்பியது 'ஹார்லிக்ஸ்'.

அன்றாட உணவில் விட்டுப்போகும் ஊட்டக்குறையை 'ஹார்லிக்ஸ்' ஈடுசெய்து உடலுக்கு உறுதியும் அதிக சக்தியும் அளிக்கிறது.

60 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர்கள் சிபாரிசு செய்து வரும் 'ஹார்லிக்ஸ்' தாய்மார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

'ஹார்லிக்ஸ்' அருந்துங்கள். தரமான சத்தும் அதிக சக்தியும் அளிப்பது அதுவே.



முழுமையான ஊட்டம்பெற—'ஹார்லிக்ஸ்'

'ஹார்லிக்ஸ்' பதிவு பெற்ற டிரேட் மார்க்.


HL-2916 A.

பிரிந்திருந்தவர் நம்மோடு வந்து சேர்ந்த வைபவத்தை எவ்வளவோ விமரிசையாகக் கொண்டாட வேண்டும். அதற்குத் தகுதியான காலம் இதுவன்று. இந்தச் செய்தியை எவ்வளவு தூரம் வெளியில் தெரியாமல் நமக்குள் வைத்துக்கொள்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லது. ஆகையால் நமக்குள்ளேயே இந்த வைபவத்தை நடத்திக் கொள்ளலாம். சித்தப்பா! இப்படி வாருங்கள். நெடுநாளையப் பிரிவுக்குப் பின்னர், இன்று சோழர் குலத்தில் வந்து சேர்ந்ததற்காக எங்கள் மகிழ்ச்சியை வேறு விதத்தில் தெரிவித்துக் கொள்ள முடியவில்லை. என் அருமைச் சகோதரர்கள் வெளியூர்களுக்குப் போகும் போதும் சரி, திரும்பி வரும்போதும் சரி, அவர்கள் நெற்றியில் நான் திருநீறு பூசிக் குங்குமத் திலகம் இடுவது வழக்கம். அதுபோலவே இன்று திரும்பி வந்து சேர்ந்த தங்கள் நெற்றியில் திருநீறும் குங்குமமும் இடுகிறேன்!''

இவ்விதம் கூறிவிட்டு இளையபிராட்டி குந்தவை தேவி சேந்தன் அமுதன் என்று இத்தனை காலமும் பெயர் வழங்கிய மதுராந்தகன் நெற்றியில் திருநீறும் குங்குமமும் இட்டார்.

அப்போது முதன் மந்திரி அநிருத்தர் ''சோழர் குலத் தோன்றல் இளங்கோ மதுராந்தகத் தேவர் நீடூழி வாழ்க!'' என்று ஆசி கூறினார். ''வாழ்க! வாழ்க!'' என்று ஆழ்வார்க்கடியான் நம்பி எதிரொலி செய்தான்.

குந்தவை முதலில் பேச ஆரம்பித்த போது அருள்மொழி வர்மர் உள்ளத்தில் வியப்புத்தான் அதிகமாக இருந்தது. அதில் சிறிது சந்தேகமும் கலந்திருந்தது. இதெல்லாம் தம் திருத் தமக்கையாரின் விளையாட்டோ, ஏதேனும் ஒரு முக்கிய காரணம் பற்றி இவ்விதம் பேசுகிறாரோ என்றுகூட எண்ணினார். போகப் போக, அவருடைய ஐயம் தீர்ந்து விட்டது. குந்தவை தேவியின் வார்த்தைகள் இதய அந்தரங்கத்திலிருந்து வந்த அன்புணர்ச்சி ததும்பிய வார்த்தைகள் என்பதை அறிந்தார். அவர் பெரிதும் போற்றிய தமக்கையின் உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சி வெள்ளம் அவரையும் ஆட்கொண்டு விட்டது. குந்தவை தேவி திலகமிட்டதும் அருள்மொழித் தேவர் சேந்தன் அமுதன் அருகில் சென்று, ''சித்தப்பா! முன்னமே தங்களிடம் நான் அன்பு கொண்டிருந்தேன். தாங்கள் என் சகோதரராயிருக்கக் கூடாதா என்று எண்ணியதும் உண்டு. நமக்குள் இருக்கும் இரத்தத்



விசித்திரமான காட்சியாகத் தோன்றுகிறதல்லவா? என்னவாயிருக்கும்? யோசித்துப் பாருங்கள்!

- பி. வி. சுப்பிரமணியம்

விடை : 48ம் பக்கம் பார்க்க

தொடர்புதான் அத்தகைய உணர்ச்சியை எனக்கு அளித்தது போலும்!'' என்று கூறிச் சேந்தன் அமுதனை ஆலிங்கனம் செய்து கொண்டு கண்ணீர் பெருக்கினார்.

வந்தியத் தேவன், ''ஆகா! நான் முன்னமே கொஞ்சம் சந்தேகித்தேன். சேந்தன் அமுதன் என்கிற சிவபக்தருக்குள்ளே பரம்பரையான வீர இராஜகுலம் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கத்தான் வேண்டும் என்று எண்ணினேன். இல்லாவிட்டால் ஊரும் பேரும் இல்லாதவனாக வந்த எனக்கு அடைக்கலம் தந்து ஆதரித்து ஊரை விட்டு ஓடவும் உதவி செய்திருப்பாரா? பேரரசர் மகனே! முன்னொரு தடவை எனக்குச் செய்த உதவியை எனக்கு மறுபடியும் செய்து அருள் புரியுங்கள்! தங்களுடைய மகுடாபிஷேக வைபவத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று வருத்தமாகத்தான் இருக்கிறது. என்ன செய்யலாம்! ஒரு விஷயத்தில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. சேந்தன் அமுதனுக்குச் சோழ சாம்ராஜ்யம் சொந்தமாவதிலே கூட எனக்கு அவ்வளவு திருப்தி யில்லை. எனக்குக் கடல் கடக்க

உதவி செய்த பூங்குழலி அம்மை மகாராணி ஆகப் போவதிலேதான் எனக்குப் பூரிப்பு. சமுத்திர குமாரியின் ஆசைக் கனவு இவ்வளவு விரைவில் நிறைவேறப் போகிறது என்று அவரே எதிர் பார்த்திருக்க மாட்டார்!'' என்றான்.

குந்தவை குறுக்கிட்டு, ''ஐயா! தாங்கள் இன்னும் சில நாள் இவ்வளவு அதிகமாகப் பேசாமலிருந்தால் நல்லது. அப்போது உடம்பு குணப்பட்டுத் தப்பி ஓடுவதாயிருந்தாலும் விரைவாக ஓட முடியும்!'' என்றாள்.

பின்னர், ''தம்பி! அருள்மொழி! இத்தனை காலமும் நமது அருமைப் பாட்டியார் தமது திருமகனுக்கு மகுடம் சூட்டுவதை ஏன் ஆட்சேபித்தார் என்பதை இப்போது நாம் அறிந்து கொண்டோம். நமக்குக் கூடப் பழைய மதுராந்தகர் முடிசூடுவதில் அவ்வளவு திருப்தி இல்லாமலிருந்தது. வீரசோழ குலத்தில் பிறந்தவர்களிடம் இருக்க வேண்டிய குணதிசயம் அவரிடம் இல்லை. நமது பாட்டியார் எவ்வளவோ முயன்று பார்த்தும் சிவபக்தி அவருடைய உள்ளத்தில் ஒட்டவில்லை. வீரம் என்பது அவரிடம் மருந்துக்குக்கூட இல்லை. அப்படியிருந்தும் ஒருவாறு நாம் அவருக்கே முடிசூட்டுவதற்கு மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டோம். இந்தப் புதிய மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவதில் நமக்கெல்லாம் திருப்தி என்பது மட்டுமில்லை; குதூகலமும், பூரிப்பும் அடைகிறோம். உன்னையும் வல்லத்து இளவரசரையும் நடுக் கடலில் மூழ்காமல் கரையேற்றிக் காப்பாற்றிய பூங்குழலி சிங்காதனம் ஏறுவதைப் பார்க்கவும் எனக்கு ஆசையாக இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நம் முதன் மந்திரி உடனே செய்ய வேண்டும்!'' என்றாள்.

''தேவி! பெரிய பழுவேட்டரையர் மனசு வைத்துக் கடம்பூர் மாளிகையில் என்ன நடந்தது என்பதைச் சொல்ல வேண்டும். பழைய மதுராந்தகத் தேவர் என்ன ஆனார் என்பது தெரியவேண்டும். இந்த இரண்டு காரியமும் ஆவதற்கு முன்னால் மகுடாபிஷேகத்துக்கு நாள் வைப்பது எப்படி?'' என்றார் அநிருத்தர்.

''பெரிய பழுவேட்டரையரிடம் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பழைய மதுராந்தகரைக் கண்டுபிடிப்பது உங்கள் பொறுப்பு!'' என்றாள் குந்தவை.

அப்போது சேந்தன் அமுதன் என்று நாம் இதுவரையில் அழைத்து வந்த இளவரசர் மதுராந்தகத் தேவர் பொன்னியின் செல்வரைப் பார்த்துக் கூறினார்: ''இளவரசே! தாங்கள் என்னைச் சித்தப்பா முறை வைத்து மரியாதையாக அழைத்தீர்கள். இவர்களும் என்னை 'இளவரசர்' என்று அழைக்கிறார்கள். ஆனால் தங்களை நான் 'மகனே!' என்று அழைப்பது சாத்தியமில்லை. இருபத்திரண்டு ஆண்டுகள் எளிய குடிசையில் வாழ்ந்துவிட்டு திடீரென்று இன்றைக்கு என்னைப் பேரரசர் குலத்தில் பிறந்த இளங்கோவாகக் கருதிக் கொள்ளவும் முடியவில்லை. உங்கள் எல்லோருக்கும் ஒரு விண்ணப்பம் செய்து கொள்கிறேன். வந்தியத்தேவர் தப்பி ஓடக் காரணமாக இருந்ததற்காக என்னைச் சில நாள் பாதாளச் சிறையில் அடைத்திருந்தார்கள். அப்போது பக்கத்து அறையில் இருந்தவன் மூலம் இன்று வெளியான செய்தியை நான் அறிந்தேன். ஊமைத் தாயின் பிள்ளை அரண்மனையில் அரச குமாரனாக வளர்கிறான் என்றும் இராஜகுலத்துக் குழந்தை ஊமைத் தாயின் வீட்டில் வளர்ந்து வருகிறான் என்றும் அவன் கூறினான். அப்போதே எனக்கு உண்மை தெரிந்து விட்டது. உலகம் போற்றும் செம்பியன் மாதேவி என்னிடம் காட்டிய அன்பின் காரணத்தை ஊகித்து அறிந்து கொண்டேன். அவர் என்றாவது ஒரு நாள் என்னை 'மகனே!' என்று அழைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அந்த ஆசை இன்று நிறைவேறி விட்டது. இதற்குமேல் நான் ஒன்றும் விரும்பவில்லை...!''

முதன் மந்திரி குறுக்கிட்டு, ''இளங்கோவே! தாங்கள் விரும்புகிறீர்களா, இல்லையா என்பது கேள்வி அல்லவே? எது நியாயம், எது முறைமை என்று தானே யோசிக்க வேண்டும்?'' என்றார்.

''ஆகா! நன்றாக யோசியுங்கள். என்னைப் பற்றிய வரையில் யோசனை அவசியமே இல்லை. ஏற்கெனவே தீர்க்கமாக யோசித்து முடிவு செய்துவிட்டேன். பூங்குழலி பலமுறை என்னிடம் 'அரச குமாரனை மணந்து அரியாசனம் ஏறப் போகிறேன்' என்று கூறினாள். அதனாலேயே என்னுடைய அந்தரங்கக் காதலை நிராகரிப்பதாகவும் சொன்னாள். அப்போதெல்லாம், 'பெண்ணே! உண்மையில் நான் அரச குமாரன்தான்! நான் விரும்பினால் இந்தச் சோழ ராஜ்யம் என்னுடையதாகும்!' என்று கூற என் உள்ளமும் நாவும் துடிதுடித்தன. அந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். நாடாளும் ஆசை என் உள்ளத்தில் என்றும் புகலாகாதென்று இறைவனை வேண்டிக் கொண்டேன். அந்த வைராக்கியத்தை நிறைவேற்றும்


அற்புதமான
சூப்பர் டஸ்ட்!
அருமையான டீ!
Super Dust Tea
Super Dust
உயர் தரமான டீ
உயரிய சுவை. மேன்மையான
டிகாக்ஷன். முற்றிலும்
உயர்ந்த தேநீரின் திருப்தியை
உங்களுக்குத் தருவது
ப்ருக் பாண்ட் சூப்பர் டஸ்ட்.
அருந்தி ஆனந்தமடையுங்கள்.
BB 6593



முனியன் : இந்தாங்க, ஸ்டாம்பு கேட்டீங்களே !

எஜமானி : அதை நானேதான் ஒட்டிக்கணுமா ?

முனியன் : நீங்க ஏனுங்க ஒட்டிக்கணும், கவர்மேலே ஒட்டுங்க !


பொருட்டுப் பூங்குழலியைத் தியாகம் செய்யவும் உறுதி செய்து கொண்டிருந்தேன். நல்ல வேளையாக, இந்தச் சமுத்திர குமாரி தனக்குத் தகுதி யில்லாத ஆசையை விட்டு விட்டு, இந்த ஏழைச் சிவாலயத் தொண்டனை மணந்து கொள்ள முன்வந்தாள்.''

பூங்குழலி இங்கே குறுக்கிட்டு, ''ஐயா! எனக்குத் 'தகுதியில்லாத ஆசை' என்று எப்படிக் கூறினீர்கள்? மூன்று உலகும் ஆளும் சக்கரவர்த்தினி யாவதற்கும் நான் தகுதி யுடையவளே. அப்படி யிருந்தும் தங்களை மணந்து பூமாலை கட்டிப் பிழைப்பதற்கும் ஓடம் தள்ளி வாழ்நாளைக் கழிப்பதற்கும் இசைந்தேன்!'' என்றாள்.

''அப்படிச் சொல், பூங்குழலி! உன் தகுதியை நிலைநாட்ட இதுவே போதுமே! தகுதியும் தகுதியின்மையும் எப்படி ஏற்படுகின்றன? 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று தெய்வப் புலவரின் தமிழ் மறை கூறுகிறதே! ஆகையால் உன்னுடைய பழைய மனோரதத்தை இப்போது நீ கைவிட்டு விட வேண்டாம். உன்னைக் கைப்பிடிக்கப் போகும் இந்தப் பேரரசன் மகனுக்கும் எங்களுடன் சேர்ந்து சொல்லு! சித்தப்பா! தாங்கள் தங்கள் பிறப்பின் உண்மையை அறிந்த பிறகும் இந்த ராஜ்யம் வேண்டாம் என்று வைராக்கியம் கொண்டிருந்தது நியாயம்தான். அது தங்கள் பிறவிக் குணத்தின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இப்போது நாங்கள் எல்லாரும் சொல்லுகிறோம். சக்கரவர்த்தி சொல்லுகிறார்; முதன் மந்திரி சொல்லுகிறார்; நானும் என் சகோதரனும் சொல்லுகிறோம்; என் தோழி வானதி சொல்லுவதுடன் அவளுடைய பெரிய தகப்பனாருடைய மனத்தையும் மாற்றி விடுவதற்கு ஒப்புக் கொள்கிறாள். இப்போது ஏன் தாங்கள் மறுக்க வேண்டும்?'' என்றாள் இளைய பிராட்டி குந்தவை தேவி.

''தேவி! நீங்கள் எல்லோரும் சொல்கிறீர்கள். ஆனால் இந்த ராஜ்யத்தின் குடி மக்கள் என்ன சொல்லுகிறார்கள்? அது உங்களுக்கு ஒருவேளை தெரிந்திராது. நாட்டு மக்களோடு பழகியுள்ள எனக்கு நன்றாகத் தெரியும். இந்தத் தஞ்சையிலும் பழையாறையிலும் குடந்தையிலும் கோடிக்கரையிலும் நாகைப் பட்டினத்திலும் ஜனங்களின் விருப்பம் என்ன என்று எனக்கு நன்றாய்த் தெரியும். பாண்டிய நாட்டிலும் பல்லவ நாட்டிலும், கொங்கு நாட்டிலும், ஈழ நாட்டிலும் உள்ள மக்களின் விருப்பத்தையும் நான் கேள்வியினால் அறிந்திருக்கிறேன். 'அருள்மொழி வர்மரே திருமுடி சூட வேண்டும்' என்பதுதான் ஏகோபித்த மக்களின் வாக்கு. இவ்வளவு பெரிய பிரளய வெள்ளத்தை எதிர்த்து என்னால் நீந்த முடியுமா? நான் ஆசைப்பட்டாலும் இந்தப் பெரிய சோழ சாம்ராஜ்யத்தை என்னால் ஆள முடியுமா? கடவுளே! நீங்கள் எல்லாரும் 'பழைய மதுராந்தகர்' என்று சொல்கிறவர் மீது ஜனங்கள் எவ்வளவு வெறுப்புக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் அறிவேன். அந்த வெறுப்புக்கெல்லாம் என்னை உரிமையாளனுக்கி விடப் பார்க்கிறீர்களா? வேண்டாம்! வேண்டாம்! அவ்வளவு பெரிய தீங்கை எனக்குச் செய்ய வேண்டாம். நான் உங்களில் யாருக்கும் எந்தவிதத் தீங்கும் செய்யவில்லையே?''

மற்றவர்களில் யாரும் இதற்கு மறுமொழி சொல்வதற்குள் பொன்னியின் செல்வர் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நின்று, ''இந்தப் பேச்சு இத்துடன் நிற்கட்டும்! நீங்கள் இந்த அறைக்குள் வரும் சமயத்தில் நான் 'சோழ ராஜ்யத்துக்கு நானே முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன்' என்று வந்தியத் தேவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அதை நிறைவேற்றியே தீருவேன். முதிய எம்பிராட்டியின் திருவயிற்றில் உதித்த இந்த உத்தமத் தோழரின் கருத்தையும் அறிந்து கொண்டேன். இராஜ்ய உரிமை பற்றி இனிப் பேச்சு எதுவும் வேண்டாம்!'' என்றார். (தொடரும்)







1. "இப்படி ஆலை புகைந்தால் கார்த்திகை விளக்கு ஏற்றி என்ன பயன்? போய் ஆலை முதலாளியிடம் சண்டை போடுகிறேன்!"

2. நவராத்திரிக் கொலு பாணியில் கார்த்திகை விளக்கு! ஆண்களுக்கு அல்லல்!

3. 'மெக்கானிக்' வீட்டுக் கார்த்திகை!

4. பேராசிரியர் அகல் வாங்க மறந்ததன் பலன்! காப்பிக்குக் கோப்பை இல்லை.

5. காலமே மாறிப் போச்சு; மகிழ்ச்சி இடம் மாறக் கேட்பானேன்!

6. கண்ணாடிக் கடைக்காரர் கெட்டிக்காரர்! எதிர்க் கடைக்காரர் ஏற்றிய விளக்குகளைத் தம் கடைக் கண்ணாடிகளில் பிரதிபலிக்கச் செய்து கார்த்திகை கொண்டாடி விட்டார்!

7. அடுக்கு மாடிக்காரர்கள் கூட்டுறவு முறையில் கார்த்திகை கொண்டாடுகிறார்கள்!






விளக்கேற்றியவர்கள்

• சிட்சார்த்தி •





மூன்று மந்திரவாதிகள் (9)

கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராஜு






இளவரசி ஷோபாவைக் கண்காணிப்பதில் நால்வரும் மிகத் தீவிரமாக இருந்தும் மந்திரவாதியின் சக்தியினால் நள்ளிரவில் நால்வரும் ஆழ்ந்த நித்திரை வசப்பட்டார்கள். ஷோபாவை மந்திரவாதி கொண்டு போய் விட்டான்.
ஏமாந்து போனோம், நண்பர்களே! இளவரசியைக் காணவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவான் மந்திரவாதி...
கவலைப் பட வேண்டாம் இளவரசே. இதோ ஒரு நொடியில் இளவரசி எங்கிருக்கிறாள் என்பதைச் சொல்லுகிறேன்...
இதோ தெரிகிறது... இங்கிருந்து நூறு காதங்களுக்கு அப்பால் ஒரு பெரிய காடு. அதன் நடுவே ஒரு பெரிய ஆலமரம். அம் மரத்தில் உச்சாணிக் கிளையிலே ஒரு பெரிய ஆலம்பழம். அப்பழம் தான் அழகி ஷோபா...
நெட்டையன் என்னைச் சுமந்து கொண்டு போகட்டும். சில நொடிகளில் நாங்கள் அந்தப் பழத்தோடு திரும்பி வருகிறோம்.



பொட்டையன் வழி காட்ட நெட்டையன் இரண்டே தாவலில் அதை பழத்துடன் திரும்பினான்.
இளவரசி, இந்தப் பழத்தைத் தரையில் ஓங்கி மோதி வீசுங்கள்... தாமதிக்க வேண்டாம்.
விக்ரமன் பழத்தைத் தரையில் வீசியதும் மின்னல் ஒளி உண்டாயிற்று. அதன் நடுவே இளவரசி தோன்றினாள். அந்த விருந்து அறைக்கு வெளியே...
எழுந்திருந்திருப்பார்கள். இளவரசியைக் காணாமல் ஏங்கிப் போய் உட்கார்ந்திருப்பார்கள். இவர்களாவது?... ஹ... ஹ... ஹா!
மந்திரவாதியவர்களே, வாருங்கள். இதோ இளவரசி பத்திரமாக இருக்கிறாள்.
என்ன... இளவரசியா? ஏதோ சூழ்ச்சி...ம்...
வெற்றி பெற்று விட்டதாக இறுமாப்பு வேண்டாம். இன்னும் இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன. பார்த்து விடலாம்.
இதோ என் மந்திரக்கட்டுக்களுள் ஒன்று தெறித்து விழுகிறது. அவர்கள் வெற்றி என் பலத்தில் ஒரு பகுதியைப் பலி வாங்கிவிட்டதே!
தொடரும்



டிவிஎஸ் ரீடிரெட் எப்பொழுதும் பத்திரமானது

டிவிஎஸ் ரீடிரெடிங் செய்யும் டயர்கள் புதிய டயர்களைப் போலவே தோன்றுகின்றன. ஆனால், ரீடிரெடிங் செய்யும்போது, ஒவ்வொரு அம்சத்தையும் ஊன்றிக் கவனித்துக் கண்ணும் கருத்துமாகச் செய்யும் வேலை, டயர்களுக்குப் புதிய தோற்றத்தைக் கொடுப்பதற்காக மட்டும் அன்றி, அவை சாலைகளில் நன்கு பதிந்து செல்லவும், நீண்ட காலம் உழைக்கவும் துணை புரிகின்றது.

ஒவ்வொரு டயரையும் ஒரு முறைக்கு இரு முறையாகப் பரிசோதிக்கின்றனர். டயரில் ஆணி, கண்ணாடித் துண்டு முதலியவை அணுவளவு இருந்தாலும், டயர் பழுதாகிவிடும். ஆகையால் நவீன இயந்திரங்களில் அனுபவமுள்ள நிபுணர்கள் செம்மையாகப் பணியாற்றுகின்றனர். உறுதியாக இருக்கவேண்டும் என்பதற்காக டிவிஎஸ் ஸ்தாபனம் காமெல்பாக் ரப்பரைத் தானே சொந்தமாகத் தயாரிக்கின்றது.

டிவிஎஸ் ரீடிரெட் டயர்கள் வேறு எந்த ரீடிரெட் டயர்களைக் காட்டிலும் அதிக நாள் உழைக்கின்றன.

இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் ரீடிரெட் செய்வது டிவிஎஸ்.

உங்கள்
நம்பிக்கைக்கு
உரியது
டிவிஎஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்,

பங்களூர் - கோயமுத்தூர் - களமசேரி - மதராஸ் - புதுக்கோட்டை - சேலம் - செகந்திராபாத் - திருநெல்வேலி - விஜயவாடா

SI-6073

சென்ட்ரல்

பி.வி.ஆர்

"இரவு நேரங்களில் தனியாகப் பிரயாணம் செய்யும்போது, பிரயாணிகள் - அதிலும் முதல் வகுப்புப் பிரயாணிகள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

ஓர் ஆபத்திலிருந்து தப்பியவரின் குரல் (நடுக்கத்துடன்)

அத்தியாயம் 17

எம். தேவன் என்கிற மகாதேவவிடம் என்றென்றும் வற்றாமல் வழிந்து ஓடுவது அவருடைய உதட்டுப் புன்னகைதான். எதிரிகளைத் தம் புன்னகையாலேயே சமாளித்து, வாய்ச்சாலகத்தால் வெற்றி கொண்டு அவர்களிடமிருந்து — அவர்கள் அவரிடம் எதை எதிர்பார்த்து வந்தார்களோ—அதையே வாங்கிக் கொண்டுவிடுவார். யார் யாரை லட்சியம் செய்யாமல் போய்க் கொண்டே யிருக்கலாம், எவனிடம் எதைப் பற்றிப் பேசினால் காரியம் ஜயமாகும் என்பதெல்லாம் எம். தேவன் தம் வாழ்க்கை அனுபவம் என்ற பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொண்ட பாடங்கள்.

அவருக்கு நிறைய உற்றார் உறவினர்கள் இருக்கிறார்கள். ஆனால் மனைவி மகன் என்ற இரண்டு பேரைத் தவிர வேறு யாரையும் உறவினர் என்று அவர் கருதவில்லை; மதிக்கவுமில்லை. தகப்பனாரின் ஒன்றுவிட்ட சகோதரியின் பிள்ளை பம்பாயில் பெரிய பணக்கார வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார். அடிநாளிலிருந்தே — எம். தேவன் அடுத்த சாப்பாட்டுக்கு என்ன வழி என்று யோசித்துக்கொண்டிருந்த காலத்திலேயே—அந்த ஒன்றுவிட்ட அத்தையின் பிள்ளை பெரிய பணக்காரர். அந்தக் காலத்தில் எம். தேவன் அவரை அணுகியிருந்தார். ஆனால் அவர் எம். தேவனை மதிக்கவில்லை. இரண்டு ரூபாயைக் கையில் கொடுத்துவிட்டுக் கதவையும் சாத்திவிட்டார். அவர் இவ்வாறு செய்ததன் காரணம் எம். தேவனுக்குத் தெரியும். சொந்தக்காரர்களின் வீடுகளிலேயே பணம் பாத்திரம் நகை என்று விரல் ஜாலம் செய்யும் குணம் எம். தேவனுக்கு உண்டு என்று அத்தை பிள்ளை தெரிந்து வைத்திருந்ததுதான்.

இதெல்லாம் 1934ம் ஆண்டுக்குமுன்னால் நடந்தது.

1939ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்றாந் தேதி, எம். தேவனுடைய நல்வாழ்க்கையை உத்தேசித்து ஹிட்லர், போலந்தின் மீது படையெடுத்து, இந்திரஜித்து வேகத்தில் அதை விழுங்கினார். உலகத்தைக் காப்பாற்ற பிரிட்டனும் பிரான்சும் ஹிட்லரை எதிர்த்தன. போர்ப் பிரகடனம் செய்தன.

உடனடியாக, இந்தியாவில் பெரும் மாறுதல்கள் விளையாமற் போனாலும், ஐரோப்பாவில் விழுந்த குண்டுகளின் சத்தம் எதிரொலி செய்தது. அரசாங்கம் விழித்து எழுந்து சுறுசுறுப்புடன் இயங்க ஆரம்பித்தது. அவர்கள் பாடிய பாட்டுக்களுக்கு அழகாகத் தாளம் போட்ட பல அரசியல்வாதிகள் பிரமுகர்கள், திவான்பகதூர்கள் மேடை ஏறிப் பேச ஆரம்பித்தார்கள். அவர்களுடைய பதவி, பணம், பட்டம் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமானால் இந்தியா பிரிட்டனுக்குத் தோள் கொடுத்து உதவ வேண்டும் என்று சொன்னார்கள்; பல அறிக்கைகளும் விட்டார்கள்.

இத்தகைய பிரமுகர்களில் ஒருவர் திவான்பகதூர் டி. எஸ். லிங்கம். இந்தத் திவான்பகதூர் கல்கத்தாவில் ஓர் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரக் கம்பெனியில் ஒரு டைரக்டர். தரையைப் பார்த்தால் பாரதத்தின் பிச்சைக்காரர்களும், அவர்களுடைய அவலக் கோலங்களும் கண்ணில் பட்டுக் கண்ணீரை வரவழைத்துவிடும் என்று மேலே பார்த்துக் கொண்டே நடப்பார். (அதாவது நடக்கும் வாய்ப்பு ஏற்பட்டால்!) இந்தப் பரம தயாளு மாட்சிமை தங்கிய வைசிராயின் கட்டளையைச் சிரமேல் தாங்கி, யுத்தம் சம்பந்தமாக மற்ற திவான்பகதூர், ராவ்பகதூர், ஸர்களுடன் கலந்தாலோசிக்கச் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்.

இது 1940ம் வருஷ ஆரம்பத்தில்.

திவான்பகதூர் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்தார். நேரம் எட்டு மணி. அவருடைய காரியதரிசி — மாதம் இருபத்திரண்டு ரூபாய் எட்டணா வாங்குகிறவர் — முதல் வகுப்பு டிக்கெட்டை அவரிடம் கொடுத்துவிட்டு மூன்றாம் வகுப்பு டிக்கெட்டைப் பத்திரமாகத் தம் கோட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். திவான்பகதூரைச் சுற்றி ஒரு பஜனைக் கோஷ்டி நின்று கொண்



டிருந்தது. அவர் வியர்வையைத் துடைக்க, கைக்குட்டையை எடுக்கக் கை போவதற்குள் சோடாவும் கலருமாகப் பல கைகள் ஓடின. அவருடைய தலைப்பாகையின் ஜரிகைக் கீற்றின் மேல் ஒருவர் வெண்பா பாடினார். இந்த வயதிலும் (திவான்பகதூரின் அப்போதைய வயது 56) அவர் தேசத்துக்காக, உலகத் துக்காக (தேசமும் உலகமும் பிரிட்டனில் அடக்கம்) உடல் நலனையும் லட்சியம் செய் யாமல் உழைப்பதைப் பற்றி ஒருவர் சிலாகித் துக் கண்ணீர் உகுத்தார். பல பக்தர்கள் பயத்துடன் கைகட்டி வாய் புதைத்து நின்றனர்.

ரயில் புறப்பட இன்னும் பத்து நிமி டங்கள் இருந்தன. திவான்பகதூர் முதல் வகுப்புப் பெட்டியில் பிரயாணக் களைப்புக்குத்



தம்மைத் தயாராக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். பிளாட்பாரத்தில் பஜனைக் கோஷ்டி.

திடீரென்று, 'வழி ஸார். வழி' என்று போர்ட்டரின் கூவல் கேட்டது. நவநாகரிக உடையில் ஓர் இளைஞன், புன்முறுவலைப் பன்னீர் தெளிப்பது போல் தெளித்துக் கொண்டே போர்ட்டர் பின்னால் வந்தான்.

திவான்பகதூருக்குத் தூக்கிவாரிப் போட்டது. தம்முடைய அந்தஸ்தைக் குறைக்கும் வகையில் ஒருவன் — அதுவும் இருபது இருபத்திரண்டு வயதில் ஒரு சிறு பையன் அர்ஜுனனுடைய கம்பீரத்துடன் வந்து ரயிலில் ஏறுகிறான்.

ஏறின இளைஞன் ஒரு தடவை—ஒரே தடவைதான் திவான்பகதூரைப் பார்த்தான் ! அடுத்தகணம் அவர் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்தான்!

''ஸார்.... திவான்பகதூர் ஸார்.... என்னை ஆசீர்வதியுங்கள், சார்.....!''

இளைஞனுடைய நாத் தழுதழுப்பில் திவான் பகதூரின் உடம்பெல்லாம் சிலிர்த்தது. முன்பின் தெரியாத ஒருவன், பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளையின் தோற்றத்தோடு இருக்கிறவன், அவருடைய பாதங்களில் விழுகிறான்!

''எழுந்திரு, மேன். உனக்கு என் பூரண ஆசி உண்டு !''

பஜனைக் கோஷ்டி பிரமிப்பில் வாய் அடைத்து நின்றது.

ரயிலும் புறப்பட்டது.

ரயில் ஓடலாயிற்று. திருவொற்றியூர் போவதற்குள் இளைஞனுடைய பட்டம், பிதிரார்ஜிதமாகக் கிடைத்த நஞ்சை, புஞ்சை, குலம், கோத்திரம் எல்லாம் திவான்பகதூருக்குத் தெரிந்தன.

ரயில் பொன்னேரியைத் தாண்டும் போது, இளைஞன் பிளாஸ்கிலிருந்த பாலை எடுத்து, பெரியவரிடம் நீட்டினான். அவருடைய பிளாஸ்கை அவனே கழுவி வைத்தான். திவான்பகதூரின் உடல் புல்லரித்தது. ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை, கல்கத்தாவில் மாபெரும் வெள்ளைக்கார பாங்கியில் அதிகாரியாகப் பதவி ஏற்கப் போகிறவன் அவருக்குப் பால் ஆற்றிக் கொடுக்கிறான். படுக்கை விரிக்க நேரம் ஆகிவிட்டதா என்று கேட்கிறான் !

பொன்னேரிக்குப் பிறகுதான் அந்த இளைஞன் பேச ஆரம்பித்தான்.

''ஸார்!''

''யெஸ், பாய்!''

''நான் தூங்க முடியாது, ஸார்.''

''ஏன் ?''

''வேலையில் சேருவதற்குமுன் ஐம்பதாயிரம் டெபாஸிட் பணம் கட்டணும்னு நிபந்தனை. அதில் முப்பதாயிரத்தைக் கட்டியாகி விட்டது. பாக்கி இருபதாயிரம்....''

''உனக்குப் பணம் வேணுமா...?''

''நோ...நோ...இதோ இந்த லெதர் பெட்டியில் இருபதாயிரம் ஆயிரம் ரூபாய் நோட்டாக இருக்கு.''

''பின் ஏன் விசாரப்படுகிறாய்?''

''பணம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமே சார் !''

''பூ... என் பெட்டியிலே ரொக்கம் எவ்வளவு ரூபாய், இருக்கு, தெரியுமா? நாற்பதினாயிரத்து ஐந்நூறு. நான் உன்னை மாதிரியா பயப்படுகிறேன் ?.... சும்மா தூங்கு.....'' பெரியவர் நீண்ட கொட்டாவியாக உதிர்த்தார். அடுத்த கணம் உட்கார்ந்தபடியே தூங்கலானார்.

சூளூர்ப்பேட்டையை அடைவதற்கு முன் பச்சை விளக்குக்காக ரயில் நின்றது. இளைஞன் எழுந்தான். பாண்டையும் கோட்டையும் கழற்றி எறிந்து விட்டு, வேஷ்டியும் ஜிப்பாவுமாக மாறினான். தோல் பையில் நாற்பதாயிரத்து ஐந்நூறை அள்ளிப் போட்டுக்கொண்டு அழுக்குத்துண்டால் மறைத்தான். இரண்டாயிரம், மூவாயிரத்துக்குமேல் எதிர்பார்க்காத அவனுக்கு நாற்பதாயிரத்து ஐந்நூறைப் பார்த்தபோது மூச்சுத் திணறியது. விளக்குகளை அணைக்குமுன் ஒரு தடவை திவான்பகதூரைப் பார்த்தான். பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலைப் பிடித்து வாழும் வாழ்க்கை விஜயவாடா போவதற்குமுன்னால் தீர்ந்துவிடும். அவர் குடித்த பால் வேலையைச் சரியாகச் செய்துவிடும்! விளக்குகளை அணைத்து விட்டான்.

ரயில் நகர ஆரம்பித்தது.

இளைஞன் தயாராக வைத்திருந்த சாவியால் கம்பார்ட்மெண்டைப் பூட்டினான். சாவி அடுத்த கணம் சவுக்குக் காட்டில் விழுந்தது.

ரயில் வேகம் எடுத்தது.

இளைஞனும் குதித்தான்.

இருண்ட வானில் அங்குமிங்குமாக நட்சத்திரங்கள் சிரித்துக் கொண்டிருந்தன. இளைஞன் சூளூர்ப்பேட்டையிலிருந்து நடக்கலானான்.

நடுநிசி. இருட்டு. இளைஞன் நடந்தான். பார வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாய் ஊர்ந்து கொண்டிருந்தன. வண்டிக்காரர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அரும்பாக்கத்தை அடைந்தபோது மணி மூன்று. இளைஞன் ஒரு டீக்கடை முன்னால் இறங்கினான்.

டீ குடித்தான். எதிரே ஒரு லாரி டிரைவரும் கிளீனரும் பீடியில் லயித்துக் கொண்டிருந்தார்கள்.



கயிறு இழுப்புப் போட்டியில் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் கலந்துகொண்டால் இப்படித்தான் இருக்கும். ஆனால் உண்மையில் திரு நிக்ஸன் இந்த விளையாட்டில் ஈடுபட்டிருக்கவில்லை, படத்தில். பின்னர்?

ஆரம்ப விழா என்றால் அடிக்கல் நாட்டுவதுதான் நமக்குப் பழக்கம். ஆனால் அமெரிக்க - கனடிய கூட்டு முயற்சியில் உருவாகும் லிப்பி அணை அங்குரார்ப்பண விழாவின்போது பிரதம இன்ஜினீயர் கரங்களை உயர்த்தியதும் காங்கிரீட் கலவை நிரம்பிய முதல் தொட்டியைக் கவிழ்த்தார் நிக்ஸன். அப்படி கவிழ்க்கத்தான் கயிற்றைப் பிடித்து இழுக்கிறார், வேறு இரு நல்லவர்களின் உதவியுடன்.

''ஏம்ப்பா டிரைவர்... லாரி எந்தப் பக்கமாப் போவுது?'' இளைஞன் அலட்சியமாகக் கேட்டான்.

''டைரக்ஷனைப் பார்த்தால் தெரியலே. பட்டணம் போவுது.'' கிளீனர் பதில் சொன்னான்.

இளைஞன் ''ஓகோ!'' என்றான்.

''நீ எங்கே போறே?''

''பட்டணம்தான்.''

''ஒரு ரூபாய்!''

இளைஞன் சிரித்தான்.

''ஏம்ப்பா சிரிக்கிறே?'' க்ளீனருக்குக் கோபம் வந்தது.

''என் கார் இப்போ வந்துவிடும்.''

''மன்னிச்சுடுங்க சார்.''

''பரவாயில்லை.... பிளிமத்.. ரேடியேட்டர் லீக்... ரிப்பேர் பண்ணிட்டிருக்காங்க... இங்கேதான் இரண்டு பர்லாங் தூரத்திலே... கார்பரேட்டர் வேறே சரியில்லை.''

''நான் வேணும்னா உதவி பண்றேன்'' என்றான் டிரைவர்.

''வேணாம்ப்பா... என் டிரைவர் இருக்கான்.. ஆனா 'ஸோல்டர்' பண்றவன் எல ஊர்லே இருக்கானோ இல்லையோ!'' இளைஞன் அலட்சியமாகச் சொன்னான். பிறகு, ''ஸோல்டர் பண்ண ஆள் கிடைக்கலேன்னா, கார்த்தாலே வரையில் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்'' என்றான்.

''அப்போ பட்டணம் போயிடலாம்.... ஒரு மணி நேரம்தான்.''

''டிரைவர்கிட்டே சொல்லலியே? என் டிரைவர் என்னைத் தேடுவானே! நான் காலாற நடந்து வந்தேன். திரும்பி வருவேன்னு நினைச்சுக்கிட்டிருப்பானே!''

''போய்ச் சொல்லிவிட்டுத் திரும்புவோம்... எவ்வளவு நேரம்தான் நீங்க காத்துக்கிட்டிருப்பீங்க...''

இளைஞன் கண்முன் திவான்பகதூர் தோன்றினார். கனவுகூடக் காண முடியாத நிலையில் அவர் இப்போது ஓங்கோல், பித்ரகுண்டா என்று போய்க்கொண்டிருப்பார்.

''வேணாம்.... இன்னொண்ணு செய்வோம்... தம்பீ....''

டீக்கடையிலே வேலை செய்யும் 'தம்பி' வந்தான்.

''இந்தா, உனக்கு ஒரு ரூபாய்... இதே திசையில் ஓடிப் போ.. அஞ்சாவது பர்லாங் கல்லு கிட்டே ஒரு பிளிமத் கார் நிற்கும். டிரைவர் இருந்தால் அவன்கிட்டே, முதலாளி லாரியிலே போயிட்டார்னு சொல்லு. பணம் எதுனாச்சும் தேவையிருந்தால் இந்த டீக்கடையிலே கொடுத்து வைச்சிருக்கேன்னு சொல்லு.... சொல்றியா?''

இளைஞன் பதிலுக்குக் காத்திராமல் டீக்கடைக்காரர் பக்கம் திரும்பினான். ''இந்தாங்க, ஐம்பது ரூபாய். என் டிரைவர் பிளிமத்திலே வருவான். அவன்கிட்டே தயவுசெய்து கொடுத்துவிடுங்கள்.''

லாரி பட்டணத்தை நோக்கிப் பறந்தது.

இளைஞனுடைய வாழ்க்கையும் பறக்கலாயிற்று. பாண்டிச்சேரி, கொழும்பு, ஏடன், பீருட் என்று ஓடி ஓய்ந்த பிறகு — ஹிட்லர் தம் துப்பாக்கிக்கே இரையான பிறகு, — முஸோலினியை மக்கள் மரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்ட பிறகு — சர்ச்சில் இரண்டு விரல்களால் உலகமெங்கும் 'வி' காட்டின பிறகு — மகாத்மா காந்தியின் நவகாளி யாத்திரை முடிந்த பிறகு —

திவான்பகதூரை அவருடைய மனைவி மக்களே மறந்து போன பிறகு —

ஒரு நாள் —

எம். தேவன் பெண்டாட்டி பிள்ளையுடன் இந்தியாவுக்கு வந்தார். அப்போது வருடம் 1948. அவருடைய வயது முப்பது.

நாற்பதாயிரத்து ஐந்நூறு வெளிநாடுகளுக்குச் சென்று ஏழெட்டு லட்சமாகத் திரும்பி வந்தது. ஏடனில் அவர் ராணுவ கண்டிராக்டர். பீருட்டில் செல்வாக்கு. ஸ்விட்ஸர்லாந்து பாங்கியில் பணம்.

பிள்ளை சென்னையில் படிக்க, குடும்பம் கல்கத்தாவில் வாழ்ந்தது.

இப்போது எம். தேவனை யாரும் பழைய மகாதேவனுக அடையாளம் கண்டு கொள்ள முடியாது. அந்தத் திவான்பகதூரே கல்கத்தா மெயில் முதல்வகுப்புப் பெட்டியிலிருந்து திரும்பி வந்தாலும், அன்று இரவு பிளாஸ்கிலிருந்து பாலைத் தம்ளரில் ஊற்றிக் கொடுத்து, தம்ளரையும் கழுவி வைத்தவன் இந்தப் 'பெரிய' மனிதன்தான் என்று சாட்சி சொல்ல முடியாது.

* * *

எம். தேவன் மங்களாவிடம் பேசிவிட்டு, ஹிக்கின்பாதம்ஸ் ஸ்டாலுக்கு வந்தார். பல புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, ஏழெட்டுப் புத்தகங்களை வாங்கினர். எல்லாம் கொலை சம்பந்தமான அமெரிக்க நாவல்கள். மணியைப் பார்த்தார். பன்னிரண்டு அடிக்கப் பத்து நிமிடங்கள். அன்றே கணபதியைப் பார்த்துவிட வேண்டும் என்ற அவா தோன்றியும், அதை அடக்கிக் கொண்டார்.

திடீரென்று ஒரு மாணவர் கூட்டம் ஹிக்கின்பாதம்ஸை நோக்கி வந்தது. எம். தேவன் புத்தகங்களுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு, பர்ஸைப் பாண்ட் பாக்கெட்டில் போடுவதற்குள், கூட்டம் நெருக்கி யடித்துக் கொண்டு வந்தது.

அவர் புன்னகையை வீசிக்கொண்டே, கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டு வெளியே வர முயன்றார். ஒரு புத்தகம் கீழே விழுந்தது. அதை யாரோ செருப்புக் காலால் மிதித்தார்கள். அதை எடுக்க அவர் குனிந்தார். இன்னொரு புத்தகம் விழுந்தது. மாணவர்கள் அவரையோ விழுந்த புத்தகங்களையோ இலட்சியம் செய்யவில்லை.

எம். தேவன் விழுந்த புத்தகங்களை எடுத்துக் கொண்டார். டெரிலின் ஷர்ட்டில் யாரோ தொட்டதால் உண்டான அழுக்கு கண்ணை உறுத்தியது. 'டை'யைச் சரிசெய்து கொண்டு கூட்டத்தை விட்டு வெளியே வந்து, தம் கார் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தார்.

அதே சமயம் விரல்களால் விளையாடும் மணி எதிர்த் திசையில், இடுப்புக்கும் பனியனுக்கும் நடுவே விழுந்த ஒரு சிறிய சுமையுடன், மூன்றும் நெம்பர் பிளாட்பாரத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். 12-55க்குப் புறப்பட வேண்டிய பெங்களூர் எக்ஸ்பிரஸ் நின்று கொண்டிருந்தது. இன்னும் என்ஜினை இணைத்தாகவில்லை. ரயில் பெட்டிகளையெல்லாம் தாண்டி நடந்த அவன் மார்பில் கையை விட்டு, வயிறு வரை துழாவினான்.

பர்ஸ். அதில் மூன்று நூறு ரூபாய் நோட்டுகள். இரண்டு பத்து ரூபாய் நோட்டுகள், நான்கு ஒரு ரூபாய் நோட்டுகள், எழுபத்திரண்டு பைசா சில்லறை.

பணத்தைத் தனியாக எடுத்து வைத்த அவன், பர்ஸை எங்கே போடுவது என்று ஒரு கணம் யோசித்தான். அடுத்த கணம், சற்றுத் தொலைவில் இரு தண்டவாளங்களுக்கிடையே, நிலக்கரிச் சாம்பலை என்ஜினிலிருந்து கொட்டுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் நீண்ட சதுரப் பள்ளம் கண்ணில் பட்டது. அவன் விரைந்து சென்றான். சுற்று முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. ஒரு சிறு கல்லைப் பர்ஸினுள் போட்டுவிட்டு, சக்தியுடன் குறி பார்த்து எறிந்தான். பர்ஸ் சாம்பலில் புதைந்தது. அடுத்த கணம் மூன்றாவது பிளாட்பாரத்திலிருந்து குதித்து, தண்டவாளங்களைத் தாண்டி, நான்கு, ஐந்து, ஆறு என்று மனத்தால் எண்ணிக்கொண்டே ஏழாவது பிளாட்பாரத்தின் கோடிக்கு வந்து நின்றான்.

அவன் வந்து நிற்கவும் டாடா எக்ஸ்பிரஸ் கம்பீரமாகக் குரல் கொடுத்துப் புறப்படவும் சரியாக இருந்தது. அடுத்த நிமிடம் வழி அனுப்ப வந்தவர்களின் கூட்டத்தில் அவன் கலந்துவிட்டான்.

கூட்டத்தோடு கூட்டமாக நடக்கும்போது, திடீரென்று சித்தப்பாவின் நினைவு வந்தது. ஆர். எம். எஸ். அருகே கிடந்த தோல் மூட்டைகளின் நடுவே நின்ற ஒரு வெற்று டிராலியின் மேல், பையைத் தலையணையாக வைத்துக் கொண்டு சித்தப்பா படுத்துக் கொண்டிருந்தார். அருகே வெற்றிலை உரலும் உலக்கையும் இருந்தன. பிளாட்பாரத்தின் ஜன நெரிசலோ, இரைச்சலோ அவரைப் பாதித்ததாகத் தெரியவில்லை. அவர் அரை மயக்கத்தில் கிடந்தார்.

''சித்தப்பா!''

விடை :

உஜ்ஜயினியில் உள்ள தீபஸ்தம்பங்கள்

குரல் கேட்டவுடன் சித்தப்பா கண் திறந்து பார்த்தார். "யாருடா, மணியா...? வாடாப்பா வா.....!"

"சாப்பிட்டாச்சா ?"

"ஊஹூம்....

"ஏன்? இன்னுமா சாப்பிடவில்லே?" மணி மலைபோல் கிடந்த காக்கி மூட்டைகளைத் தாண்டி அருகே வந்தான்.

"ஆமாம்."

"டிபன் பலமோ?"

"ஊஹூம்."

"பின் ஏன் சாப்பிடலே?"

"காசு இல்லே."

"காசு இல்லியா.... மூந்தா நாள் கார்த்தாலே இருபது ரூபாய் தந்தேன்!"

"நேத்து ராத்திரியோடே தீர்ந்துடுத்து. கார்த்தாலே பதினைந்து பைசா இருந்தது. வெத்திலே பாக்கு புகையிலே வாங்கினேன்."

"பணத்தை என்ன செய்தீர்கள்?"

"ஒண்ணும் கேட்காதேடா, மணி...! எனக்குப் போதாத காலம் ரொம்ப இருக்கு..... மீன ராசி.... கோசாரத்திலே சனி இரண்டிலே இருக்கான்..... ரொம்ப விரயம்....."

"பணம் தொலைஞ்சு போயிடுத்தா?"

"தொலைஞ்சு போனா, தேவலையே! தொலைச்சுட்டேன்."

"என்ன ?"

"போன வாரம் யாருக்குமே ஜாக்பாட் கிடைக்கலே. மூணேகால் லட்சத்தை இந்த ஞாயிற்றுக் கிழமை ரேசோடு சேர்த்தா.... பேப்பர்லே பார்த்திருப்பியே... ஏழெட்டு லட்சத்துக்குக் குறையாமே ஜாக்பாட் பணம் குவியும். ரெண்டு டிக்கெட் வாங்கினேன். ஒரு டிக்கெட்டிலே நாலு லெக் பாஸாச்சு.... கடைசி ரேஸிலே இரண்டாவதாக வந்தது. இன்னொரு டிக்கட்டிலே ஒரு லெக்கூட பாஸாகலே..... போதாத காலம். இரண்டிலே சனி.... விரயம்.... உம்... விட்டுத் தள்ளு !"

மணிக்குக் கோபித்துக் கொள்ளுவதா, அழுவதா என்று தெரியவில்லை.

"சித்தப்பா...! கோசாரத்திலே சனி இரண்டில் இருக்கான் என்கிற ஞானோதயம் எப்போ உதிச்சுது? ரேசுக்கு முன்னாடியா, பின்னாடியா.....?"

"நீ ஏண்டா பிராணனை வாங்கறே.... நான் பட்டினி கிடந்து செத்துக்கிறேன். நீ போ....."

"சித்தப்பா !"

"சரித்தாண்டா.... ஏதோ ஆசையிலே பணத்தைக் கட்டிட்டேன். அது போயிடுத்து. போகட்டும்.... பட்டினி தானே கிடக்கணும்?"

"இனிமேல் உங்ககிட்டே மொத்தமா பணமே தரக் கூடாது."

"நீ பணமே தர வேண்டாம். திருப்தி தானே ?"

"இந்தாருங்கள், மூன்று ரூபாய். நாளைக் காலை காப்பி வரைக்கும். சாப்பாட்டுக்கு நான் வந்து தரேன்."

"எனக்கு வேண்டாம்டா..." சொல்லிக் கொண்டே கையை நீட்டினார்.

"இதிலே ஒரு ரூபாய்க்கு லாட்டரி டிக்கெட் வாங்காதீர்கள்.... விழாது... இரண்டிலே சனி...." மணி சிரித்தான்.

"லாட்டரி குருட்டு அதிர்ஷ்டம்டா. குதிரை அப்படியில்லே. கணக்கு வெறும் கணக்கு. சாமர்த்தியம்."

"உங்க சாமர்த்தியத்தைத்தான் இப்போ பார்த்தேனே!"

"ஜாக்கி குதிரை ஜயிக்கக்கூடாதுன்னு இழுத்தால் நான் என்னடா பண்ணுவது?" என்றார் சித்தப்பா.

"நீங்க ஜாக்கியாப் போக வேண்டியதுதான்."

மணி அடுத்த விநாடி புறப்பட்டான்.

கணபதி வீட்டு விருந்தில் மங்களா கலந்து கொண்டிருக்கிறாளா இல்லையா என்ற கேள்வி திடீரென்று எழுந்தது. அதை அறிய அவன்நேரே 'என்கொயரி' கவுண்டரை நோக்கி விரைந்தான்.

ரொஸாரியோவுக்கு இருநூறு ரூபாய் கொடுத்த அவனுக்கு இப்போது தெய்வம் முந்நூறுக்கும் மேலாகக் கொடுத்து விட்டது. மறுநாளே, மார்வாடியிடமிருந்து சைக்கிளை மீட்டுவிடலாம் !

ஹிக்கின்பாதம்ஸில் புத்தகங்களைக் கீழே போட்டுவிட்டுத் தவித்த, அந்தத் தங்க பிரேம் மூக்குக் கண்ணாடிக்காரரை அவனுடைய மனம் வாழ்த்தியது.

என்கொயரி கவுண்டருக்குப் போகும் வழியில் திடீரென்று அவன் ஒரு கண் இமைக்கும் நேரம் நின்றான்.

தங்க பிரேம் மூக்குக் கண்ணாடி புன்முறுவலுடன் நின்று கொண்டிருக்க, ஓரிரண்டு பையன்கள் புத்தகசாலையின் மர அமைப்பின் அடியில் எதையோ தேடுவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

'எதை' என்று மணி யோசிக்கவில்லை. மூன்றும் பிளாட்பாரக் கோடியில், இரு தண்டவாளங்களுக்கிடையில், — நிலக்கரிச் சாம்பலில் புதைந்து கிடப்பதை இங்கே தேடிப் பார்ப்பதில் என்ன லாபம்? ஆனால் தேடுவது என்றால் என்ன? இல்லாத இடத்தில் பார்க்க முயலுவது தானே ?

(தொடரும்)

சரியாக எட்டு மணிக்கெல்லாம் மனோஜா வந்துவிட்டாள். அவளுடன் சேர்ந்து மறுபடியும் காப்பி சாப்பிட்டுவிட்டு அவளை அழைத்துக் கொண்டு நான் மொட்டை மாடிக்குச் சென்றேன்.

கொஞ்ச நேரம் அவள் பேசவில்லை. அவள் முகத்தில் தென்பட்ட செம்மையும் தலை தாழ்ந்திருந்த விதமும் இரண்டும் இரண்டும் நாலு என்று என்னைக் கணக்குப் போட வைத்தன. எனக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

''நீ என்ன சொல்லப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். அதை ஊகித்துவிட்டுத் தான் நான் சிரித்தேன் என்பது உனக்கும் தெரியும்'' என்றேன்.

அவளுக்கும் சிரிப்பு வந்தது. ''என்ன ஊகித்தாயாம்? கொஞ்சம் சொல்லிவிட்டுத் தான் சிரியேன்'' என்றாள். முகத்தில் செம்மை இன்னும் அதிகமாயிற்று.

''யாரோ உன்னைக் காதலிக்கிறார்கள். உனக்கும் அவரை மணந்து கொள்ள விருப்பம். விஷயம் அவ்வளவுதான். என் கணக்கு எப்படி?'' என்று நான் கேட்கவும், மனோஜாவின் கண்கள் விரிந்தன. அவள் முகத்தில் வியப்புத் தெரிந்தது.

''நீ ரொம்பக் கெட்டிக்காரியடி ஆனந்தி!''

''கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த உன் உறுதியைத் தகர்த்தெறிந்த அந்தக் கதாநாயகன் யார் என்று நான் தெரிந்துகொள்ளலாமா?'' என்று நான் ஆங்கிலத்தில் குறும்பாகக் கேட்டேன். மனோஜா வாய்விட்டுச் சிரித்தாள்.

''இவ்வளவு சரியாக விஷயத்தை ஊகித்த நீ, அவர் யார் என்பதையும்தான் உன் ஜோசியத் திறமையைக் கொண்டு கண்டு பிடியேன், பார்ப்போம்.''

நான் சிறிது நேரம் யோசிப்பது போல் மௌனமாக இருந்த பிறகு கேட்டேன்: ''சீதாராமனா?''

மனோஜாவின் முகம் எழுத்தாளர்களின் மொழியில் குங்குமமாகச் சிவந்து விட்டது.



அவள் சட்டென்று தன் தலையை என் மடியில் புதைத்துக் கொண்டாள். நான் அவள் முதுகில் குத்தினேன்.

''மறுபடியும் என் ஜோசியம் சரிதானேடி?'' மனோஜா என் மடியில் தன் தலையைப் புதைத்துக் கொண்டவள், அதை நிமிர்த்தாமலேயே, ''உம்'' என்று முனகினாள். முனகலில் வெட்கமும் மகிழ்ச்சியும் இழையோடின.

'' முகத்தை நிமிர்த்தி நன்றாக உட்கார். அசடு வழிகிற உன் முகத்தை நான் பார்க்க வேண்டாமா?'' என்றவாறு நான் அவளைப் பிடித்து நிமிர்த்தினேன். மனோஜா முழங்கால்களிடையே முகத்தைப் பதித்தவாறு என்னை நேருக்கு நேராகப் பார்க்காமல் தரையைப் பார்த்தாள்.

''என்னிடம் உனக்கென்னடி வெட்கம் ? உன் வெட்கத்தை யெல்லாம் எங்கே வைத்துக் கொள்ள வேண்டுமோ அங்கே வைத்துக் கொள். இப்போது விஷயத்தை முதலிலிருந்து சொல்லு. எத்தனை நாட்களாக இந்த நாடகம்? ஏன் இத்தனை நாட்கள் வரை என்னிடமிருந்து விஷயத்தை மூடி மறைத்தாயாம் ?''

மனோஜா பொங்கி வந்த சிற்றத்துடன் என்னை வெட்டிவிடுகிறாற்போல் பார்த்தாள். '' ஏய்! இரண்டு நாட்களுக்கு முன்புதான் என்னைக் கேட்டார். முந்தா நாளும் நேற்றும் உன்னை அலுவலகத்தில் தனியாகப் பார்த்துப் பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதனால் தான் சொல்லவில்லை......''

''சரி. போகட்டும். என்ன கேட்டார் ? எப்படிக் கேட்டார் ? எங்கே நீங்கள் இருவரும் சந்தித்துப் பேசினீர்கள்? எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் அப்படியே சொல்லு. கேட்போம்........''

மனோஜா எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள். தன் உள்ளக் கிடக்கையை ஒரு கடிதத்தில் எழுதி அதை யாரும் இல்லாத நேரம் பார்த்து அவளிடம் நீட்டினாராம். கடிதத்தைப் படித்துப் பார்க்குமாறும் அவளுக்கு உடன்பாடு இல்லாவிடில் அதைத் திருப்பிக் கொடுத்து விடுமாறும், சம்மதமெனில் பதில் எழுதும்படியும் சொன்னாராம். அதைச் சொல்லி முடிப்பதற்குள் அவர் குரல் நடுங்கிப் போய்க் குழறிவிட்டதாம். அதிலிருந்தே அவள் விஷயத்தை ஊகித்து விட்டாளாம்.

'' நீ பதில் எழுதினாயா ?'' என்று கேட்டேன்.

'' எழுதினேன்.''

''என்ன எழுதினாய்? நான் தெரிந்து கொள்ளலாமா?''

''அந்தக் கடிதத்தின் நகலையே கொண்டு வந்திருக்கிறேன்'' என்றபடி மனோஜா தான் சீதாராமனுக்கு எழுதிய பதிலின் நகலைத் தன் கைப் பையிலிருந்து எடுத்து என்னிடம் கொடுத்தாள்.

'அன்புள்ள திரு சீதாராமன் அவர்களுக்கு, உங்கள் கடிதம் கிடைத்தது. உங்களை மணந்து கொள்ள எனக்குப் பூரணமான சம்மதமே. ஆனால் எங்கள் வீட்டில் இதற்கு இணங்கவே மாட்டார்கள். நான் மணமே செய்துகொள்ளாமல் இப்படியே இருந்து விடுவதையாவது அவர்கள் அனுமதிப்பார்களே ஒழிய, வேறு சாதிக்காரராகிய உங்களை மணந்து கொள்வதற்கு அவர்கள் ஒருகாலும் எனக்கு அனுமதி அளிக்கவே மாட்டார்கள். என் தகப்பனார் மிகவும் வைதிகமானவர். தாயில்லாத என்னை ஒரு குறையும் இல்லாமல் வளர்ப்பதற்கு அவர் பட்ட பாடுகள் கொஞ்சநஞ்சமில்லை. இவ்வளவு பெரிய விஷயத்தில் அவர் மனத்தைப் புண்படுத்துவதைப் பற்றி என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆயினும் நாம் போராடி வெற்றி பெறுவதைத்தவிர வேறு வழியில்லை. இன்னும் கொஞ்ச நாட்கள் கழித்துத்தான் அப்பாவிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும். ஏனென்றால், அவர் இப்போதுதான் மிகவும் உடம்பு சரியில்லாமலிருந்து நோயிலிருந்து மீண்டு எழுந்துள்ளார். அவருக்கு அதிர்ச்சி அளிக்க நான் விரும்பவில்லை.

உங்கள் அன்புக்கு என் மனமார்ந்த நன்றி.'

கடிதத்தைப் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்த நான் என்னையும் அறியாது பெருமூச்செறிந்தேன். மனோஜா இந்தக் காதல் விவகாரத்தில் எப்படி வெற்றி அடையப் போகிறாளோ என்று எனக்கும் மலைப்பாகத் தான் இருந்தது.

சிறிது நேரத்துக்கு எங்களிடையே ஆழ்ந்த அமைதி நிலவிற்று.

பிறகு மனோஜாவே பேசினாள். '' என் அப்பாவைப் பற்றி உனக்குத்தான் தெரியுமே? என்னைப் படிக்க வைத்ததும் வேலைக்கு அனுப்பியதும் அவசியத்தை முன்னிட்டுத் தான். மற்றபடி அவர் முழுக்க முழுக்க ஒரு பிற்போக்குவாதியே. அதை நினைத்தால் என் சப்தநாடிகளும் ஒடுங்கிப் போய்விட்டது மாதிரி நான் வலுவிழந்து போகிறேன்..... ஆமாம், அவ்வளவு சரியாகச் சொன்னாயே, சீதாராமன் என்று? எப்படிக் கண்டு பிடித்தாய் ?''

''அவர் உன்னைப் பார்க்கிற பார்வையிலிருந்து'' என்றேன்.

மனோஜா சிரித்தாள். பிறகு, ''அவர் மிகவும் நல்லவர், இல்லையாடி ஆனந்தி ?'' என்று கேட்டாள்.

'' ஆமாம். மிகவும் நல்லவர்தான். கண்ணியமாகப் பழகுகிறவர். இந்த ஒன்று போதுமே ஒரு பெண்ணின் மனசைக் கவருவதற்கு ?''

'' எங்கள் இருவருக்குமிடையே ஏற்பட்டுள்ள உறவு திருமணத்துக்கு நான் குறிக்கும் வரை யாருக்குமே தெரியக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார். உனக்குக்கூடத் தெரியக்கூடாதாம்..... அதனால் நான் உன்னிடம் சொல்லிவிட்டது அவருக்குத் தெரிய முடியாதபடி ஜாக்கிரதையாகப் பழகு ஆனந்தி. எனக்கு ஒரே திகிலாயிருக்கிறதடி. எந்த முகத்தை வைத்துக் கொண்டு அப்பாவிடம் இதைப் பற்றிச் சொல்லி எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ ?''

''அதெல்லாம் ஒன்றும் இப்போதிலிருந்தே கவலைப்படாதே. எல்லாம் நல்லபடியாக முடியும்'' என்று அவளுக்குத் தேறுதல் கூறினேன்.

பிறகு இருவரும் கீழே இறங்கி வந்தோம். சாப்பிட்டுவிட்டு, பஸ் பிடித்து அலுவலகம் போய்ச் சேர்ந்தோம்.

மனோஜாவும் நானும் ஒரே நாளில் வேலையில் சேர்ந்தவர்கள். பத்து ஆண்டுகளாக நாங்கள் இருவரும் பழகி வருகிறோம். எங்கள் இருவரிடையே ஒளிவு மறைவு என்பதே கிடையாது. எந்த ஒரு செய்தியையும் நாங்கள் பரிமாறிக் கொள்ளத் தவறியதே இல்லை.

மனோஜா என்னைவிட ஒரு வயசு சின்னவள். அவளுக்கு இருபத்தெட்டு வயசு ஆகிறது. இது வரை அவளுக்குத் திருமணம் ஆகாததற்குக் காரணம் அவர்கள் குடும்பத்தில் நிலவிய வறுமையும் அவள் தானாகவே இழுத்துப் போட்டுக் கொண்ட பொறுப்புக்களும்தான். படித்து முடித்து வேலை தேடிக் கொண்டிருந்த அவள் அண்ணன் திடீரென்று, டாக்டர்கள் கண்டுபிடிக்க முடியாத நோய் ஒன்றில் விழுந்து, மூன்றே நாட்களில் மறைந்து போனது ஒரு பெரிய துயரக் கதை. அதற்குப் பிறகு மனோஜா ஓர் ஆண்டில் தன் படிப்பை முடித்துவிட்டுத் தட்டெழுத்து — சுருக்கெழுத்துப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து இரண்டிலும் அமோகமாகத் தேறி எங்கள் அலுவலகத்தில் வேலைக்கு வந்தாள். எனக்கும் அவளுக்கும் ஒரே நாளில் நேர்முகத் தேர்வு நடந்து நாங்கள் இருவரும் ஒரே நாளில் வேலையை ஒப்புக் கொண்டோம். மனோஜா வேலையில் சேர்ந்த போது அவள் தந்தை ராமசுப்பன் தம் வேலையிலிருந்து ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தன.

மனோஜாவின் தாய் இறந்தபோது அவளுக்கு ஒன்பது வயசு. அடுத்தவள் மாலாவுக்கு ஏழு வயசும், மூன்றாவதான தம்பிக்கு ஐந்து வயசும், நான்காவதான தங்கைக்கு மூன்று வயசும் ஆயின. கைக் குழந்தை பேபிக்கு ஒரு வயசு. ராமசுப்பன் தம் குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்ளுவதற்காகக் கிராமத்திலிருந்த தம் தங்கை — வீணாய்ப் போனவள்—காமுவை அழைத்து வைத்துக் கொண்டார். ஆனால் மனோஜாவின் அந்த அத்தையும் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போனதிலிருந்து மனோஜாதான் அந்தக் குடும்பத்தில் எல்லாம். மகளின் திருமணத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட முடியாத நிலையில் இருந்தாலும் ராமசுப்பன் ஒரு தந்தைக்குரிய பொறுப்புணர்ச்சியுடன் மனோஜாவுக்கு வரன் தேடவே செய்தார். ஜாதகம் பொருந்திய இடத்தில் அவர்கள் கேட்ட வரதட்சிணை கையைக் கடித்தது. விரலுக்குத் தகுந்த படிதான் வீங்க முடிந்த நிலையில் அந்த வரன்கள் கைநழுவிப் போனதிலும் வியப்பில்லைதான். மனோஜா மட்டும் அடிக்கடி என்னிடம் சொல்லுவாள்: "இங்கே யார் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள்? ஆயிற்று. அப்பா எனக்கு மாப்பிள்ளை தேடி முடிப்பதற்குள் என் தங்கைகள்கூடக் கல்யாண வயசைத் தாண்டி விடுவார்கள். நான் கல்யாணமே செய்து கொள்ளப் போகிறது இல்லை. அப்படிச் செய்து கொண்டுதான் தீர வேண்டும் என்ற நெருக்கடி வந்தாலும் அது இப்போதைக்கு இல்லை. இருக்கிற பணங் காசையெல்லாம் என் ஒருத்திக்கே வேட்டு விட்டுவிட்டால் மற்றவர்களுக்கெல்லாம் எப்போது செய்வது?" என்று.

அதற்குப் பிறகு இரண்டு நாட்கள் வரையில் மனோஜாவோடு தனித்திருக்க எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவளுக்கும் சீதாராமனுக்குமிடையே புதிய நெருக்கம் ஏற்பட்டதற்கு மறுநாளே அவரது மாற்றல் உத்தரவு வந்திருந்தது அவளைப் பெரும் அதிர்ச்சிக்கும் ஏக்கத்துக்கும் உட்படுத்தியிருந்தது என்பது மட்டும் நன்றாகப் புரிந்தது. வாடிக் கிடந்த அவள் முகத்தைப் பார்த்த போது எனக்கே என்னவோபோல் இருந்தது. இரண்டு நாட்கள் கழிந்த பின்னர் நானும் அவளும் தனிமையில் இருக்க நேர்ந்தபோது, நான் மறுபடியும் அந்தப் பேச்சை எடுத்தேன்.

"நீ உன் மனசைத் திடப்படுத்திக்கொண்டு எப்படியாவது அப்பாவிடம் விஷயத்தை உடனடியாகச் சொல்லிவிடுவதுதான் நல்லதென்று எனக்குப் படுகிறது. அவர் வேறு மாற்றிப் போகிறார் பார்" என்றேன்.

மனோஜா மௌனமாக இருந்தாள். அவள் கண்கள் கலங்கின. "எப்படியடி சொல்வது? அப்பா அப்படியே அதிர்ந்து போய்விடுவார். உடம்பு சரியில்லாமலிருந்து இப்போதுதான் ஏதோ நடமாடிக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் அவரிடம் நான் எப்படி இந்தப் பேச்சை எடுப்பது? ஒரே திகிலாக இருக்கிறது" என்றாள்.

"அப்படியானால் எப்போது சொல்லப் போகிறாய்?"

"குறைந்தது ஆறு மாதங்களாவது ஆன பிறகுதான்."

"பெங்களூருக்குப் போனபிறகு அவர் உனக்குக் கடிதம் எழுதுவாரா?"

"எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்...... ஆபீசுக்குத்தான் எழுதுவார். ஆனால் யாரும் விஷயத்தை ஊகிக்கக் கூடாது என்பதற்காக உறையின் மேல் ஒரு பெண்ணின் முகவரியை எழுதப் போகிறாராம். கடிதத்தை ஓர் ஆவலில் வேறு யாரும் பிரித்து விடக்கூடாது என்பதற்காகப் பதிவுத் தபாலில்தான் அனுப்புவாராம்" என்றாள்.

"சரிதான்" என்றேன்.

"ஆனந்தி! எங்கள் கல்யாணம் நடக்குமாடி? எனக்கென்னவோ பயமாயிருக்கிறது" என்று மெதுவாக அவள் முனகியபோது எனக்குக் கூட எதனாலோ மனம் கலக்கமுற்றது.

சீதாராமன் இரண்டு நாட்களுக்கெல்லாம் புறப்பட்டுப் போனார். பெங்களூர் வேலையில் சேர்ந்த பிறகு மனோஜாவுக்கு மிகவும் சுருக்கமாக ஒரு கடிதம் எழுதினார். புதிய அலுவலகத்தில் வேலை அதிகமாக இருப்பதால் விரிவாக எழுத முடியவில்லை என்றும் பின்னர் எழுதுவதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். கடிதத்தை மனோஜா என்னிடம் காட்டினாள். தான் அதற்கு எழுதிய பதிலையும் என்னிடம் காட்டினாள். அவள் எழுதிய பதிலும் சுருக்கமாகவே இருந்தது.

ஒரு வாரம் கழிந்த பின்னர் தனக்கு மறுபடியும் சீதாராமனிடமிருந்து வந்த கடிதத்தை மனோஜா என்னிடம் காட்டினாள்.

'அன்புள்ள மனோஜாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. இத்தனை நாளையப் பழக்கத்தில் நாம் இருவரும் நம்மிடையே உள்ள குறைநிறைகளை ஓரளவு

தெரிந்து கொண்டுள்ளதாக நான் நினைக்கி றேன். என்னிடம் உள்ள குறைகளை நீ மனம் விட்டு எழுதலாம் என்று எதிர்பார்த்துத் தான் நான் எனது சென்ற கடிதத்தில் குறை நிறைகளைப் பற்றி முன்கூட்டி விவாதித்து விடுவது திருமணத்துக்குப் பிறகு நாம் நடத்த விருக்கும் வாழ்க்கையை எவ்வகைச் சிக்கலும் இன்றித் தொடங்குவதற்கு வழிவகுக்கும் என்று எழுதி யிருந்தேன். ஆனால் உன்னிட மிருப்பதாக நீ கருதும் ஒரு குறையைப்பற்றி மட்டும் குறிப்பிட்டிருந்தாய். என்னிடம் நீ கண்டிருக்கக் கூடிய குறைகளைப் பற்றி ஒன் றுமே எழுதவில்லையே, ஏன்?'

மேற்படி கடிதத்தில் ஊரைப் பற்றியும் மற்றும் சில பொதுவான செய்திகளையும் சீதா ராமன் எழுதியிருந்தார். நான் ஒன்றுமே சொல்லாமல் கடிதத்தை அவனிடம் திருப்பிக் கொடுத்தேன்.

சிறிதுநேரம் மௌனமாக இருந்த மனோஜா, ''ஆனந்தி, எனக்கென்னமோ பயமா யிருக் கிறது. கடிதத்தின் தொனி எப்படியோ இருக்கிறது. குறை நிறைகளைப்பற்றி விவா

நாவல்



திக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருப்பதை வெறும் சாதாரணமான வார்த்தைகளாக என்னால் நினைக்க முடியவில்லை. அது ஏன் என்று எனக்குப் புரியவுமில்லை. திருமணம் நடப்பதற்கு முன்னால் இதையெல்லாம் விவாதிப்பது அவ்வளவு அவசியம்தானா?'' என்று கேட்டாள்.

சற்றுநேரத்துக்கு எங்களிடையே மௌனம் நிலவிற்று. மனோஹராவே பேசினாள்:

''அவரிடம் இருப்பதாக எனக்குத் தோன்றும் குறைகளைப் பற்றியெல்லாம் நான் என் பதில் கடிதத்தில் விவாதிக்கப் போவதில்லை. எனக்குத் தெரிந்த வரையில் அவரிடம் குறைகளே இல்லையென்றும், என்னிடமுள்ள குறைகளைப் பற்றி வேண்டுமானால் அவர் விவாதிக்கலாம் என்றும் எழுதப் போகிறேன். நீ என்ன சொல்கிறாய்?''

''நீ நினைப்பதுதான் சரி. அந்தமாதிரி நீ பதில் எழுதினால் அதற்குப் பிறகு அசட்டுத்தனமான இந்த வழியை அவர் பின்பற்ற மாட்டார் என்று நினைக்கிறேன்.''

மனோஹராவின் இந்தக் கடிதத்துக்குச் சீதாராமன் மிக நீண்ட பதிலை அனுப்பியிருந்தார். அதையும் அவள் என்னிடம் காட்டினாள். அதை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னபோது அவள் கண்கள் கலங்கியிருந்தன. நான் அவளை ஒன்றுமே கேட்காமல் அதைப் படிக்கலானேன். அது பின்வருமாறு :

''அன்புள்ள மனோஹராவுக்கு,

ஆசிகள்.

உன் கடிதம் கிடைத்தது. என்னிடம் எந்தக் குறையையும் நீ இதுகாறும் காணவில்லை என்ற கூற்றை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. என்னிடமுள்ள குறைகள் அனைத்தும் எனக்குத் தெரியும். அவற்றில் சில உனக்குத் தெரிவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திய பல நிகழ்ச்சிகள் உன் முன்னிலையில் நடந்திருக்கின்றன. என் மனம் புண்படும் என்பதற்காகத்தான் நீ அவற்றைப் பற்றி என்னிடம் விவாதிக்க அஞ்சுகிறாய் என்று நான் நினைக்கிறேன். நம்மிடையே ஒளிவு மறைவு என்பதே இருக்கக் கூடாது. எனவே உனது அடுத்த கடிதத்திலாவது என்னிடம் நீ கண்டுள்ள குறைகளைப் பற்றி விரிவாக எழுதுவாய் என்று நம்புகிறேன்.

நீ என் குறைகளைப் பற்றி ஏதும் சொல்லாவிடினும் உன்னைப் பற்றி நான் கேள்விப்பட்டுள்ள சில விஷயங்களையும் உன்னிடம் நான் கண்டுள்ள குறைகளையும் மனம் விட்டு விவாதிக்கலாமென்று நினைக்கிறேன்.

நீ சென்னையில் இருந்தபோது வீரேந்திரா என்ற வட இந்திய வாலிபன் ஒருவனுடன் நட்பாக இருந்தாயாம். நீயும் அவனும் திருமணம் செய்து கொள்ளுவதற்கு இருந்தீர்களாமே? 'இது இவனுக்கு எப்படித் தெரிந்தது?' என்று மலைக்க வேண்டாம். சென்னைத் தலைமை அலுவலகத்திலிருந்து நம் அலுவலகத்துக்கு 'டூர்' வந்து போன ஒருவர் பேசிக்கொண்டதை நான் கேட்க நேர்ந்தது. நீ இந்த விஷயத்தை என்னிடமிருந்து மறைத்தது ஏன்? உன்னுடைய இறந்த காலத்தைப் பற்றிச் சொன்னால் நான் உன்னை நிராகரித்து விடுவேன் என்ற அச்சத்தால்தானே? உண்மையில் நீமட்டும் அந்த வட இந்திய வாலிபனைக் காதலித்ததைப் பற்றியும் உங்கள் காதல் ஈடேறாமல் போனதற்கான காரணங்களையும் என்னிடம் நேர்மையுணர்வோடு சொல்லியிருந்தால் என் மதிப்பில் நீ மிகவும் உயர்ந்து நின்றிருப்பாய். ஆனால் நீ அப்படிச் செய்யவில்லை. உன் கறைபட்ட கடந்த காலத்தை என்னிடம் மறைத்திருக்கிறாய். இது பண்புள்ள பெண்ணுக்கு அழகல்ல. இது பற்றி உனது நேர்மையான பதிலை எதிர்பார்க்கிறேன்.

இன்னொரு விஷயம். முன்பொரு சமயம் நம் பிரிவுக்கு சுந்தரராஜன் ஏதோ வேலையாக வந்திருந்தபோது, ஒரு பத்திரிகையின் மிக ஆபாசமான கேள்வி — பதில் பகுதியொன்றை உன்னிடம் காட்டிப் படிக்கச் சொன்னார். நீயும் அவருமாகச் சேர்ந்து கொண்டு அதைப் படித்துவிட்டுப் பெருங்குரலில் சிரித்தீர்கள். அசிங்கமான அந்தக் கேள்விக்கு மிக அசிங்கமான பதில் சொல்லப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட ஒரு விஷயத்தை ரசித்து ஓர் ஆண்பிள்ளையோடு சேர்ந்து சிரிப்பது பண்புள்ள ஒரு பெண் செய்யக் கூடிய செயலா?

உன் பதிலில் நீ என்னிடம் கண்ட குறைகளையும் இது போல் மனம் விட்டு எழுதுவாய் என்று எதிர்பார்க்கிறேன். நான் எழுதியுள்ள விஷயங்களில் ஏதேனும் உன் மனத்தைப் புண்படுத்தியிருந்தால் மன்னிக்கவும்.'



கடிதத்தைப் படித்து முடித்ததும் நான் சொல்லி முடியாத அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் ஆளானேன். சீதாராமன் அவள் மேல் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுகள் துளியும் உண்மையற்றவை என்பது இத்தனை ஆண்டுகளாக மனோஹராவுடன் பழகி வரும் எனக்கு நன்றாகத் தெரியும். எனக்கு என்ன சொல்லுவது, அந்த

மனிதரைப் பற்றி என்ன நினைப்பது என்றே புரியவில்லை.

"ஒரே பிதற்றலாக இருக்கிறதே!" என்றேன் வெறுப்புடன்.

"அவர் ஓர் எடுப்பார் கைப்பிள்ளை என்று நினைக்கிறேன். நாலு பேர் வாய்க்கு வந்ததைப் பேசுவதையெல்லாம் உண்மை என்று நம்பி இப்படியெல்லாம் கன்னாபின்னாவென்று எழுதித் தள்ளியிருக்கிறார். உண்மையான அன்பு இருந்தால் இப்படியெல்லாம் சந்தேகப் படத் தோன்றுமா?" — மனோஹரா மளமளவென்று கண்ணீர் பெருக்கினாள்.

"வீரேந்திராவைப் பற்றி எழுதியுள்ள விஷயம் ரொம்பவும் புண்படுத்துவதாக இருக்கிறது" என்றேன். இந்த வீரேந்திராவை எனக்குந் தெரியும். சென்ற ஆண்டு மதுரைக்கு வந்திருந்தான். எங்கள் அலுவலகத்துக்கு வந்து மனோஹராவைப் பார்த்துவிட்டுப் போனான். அப்போது அவள் அவனை எனக்கு அறிமுகப்படுத்தினாள். அந்த அறிமுகம் ஏற்படுவதற்கு முன்பே மனோஹரா தனக்கும் அவனுக்குமிடையே நிலவிய வெறும் நட்பு அல்லது பாசத்தைப் பற்றி என்னிடம் கூறியிருக்கிறாள். வயதில் தன்னைவிட மிகவும் இளையவனான அவனை ஒரு தம்பி மாதிரி கருதி அவள் அவனோடு பழகி வந்தாள். அவர்களிடையே நிலவிய அன்பு சகோதர பாசமாகவே மலர்ந்தது.

"ஆனந்தி, இவர் ஏன் இப்படியெல்லாம் எழுதி என் மனசைப் புண்படுத்துகிறார்? சுந்தரராஜனுடன் சேர்ந்துகொண்டு அசிங்கமான ஏதோ ஒன்றைப் படித்துவிட்டுச் சிரித்தேன் என்று எழுதியிருக்கிறாரே. அதைப் போல் அபத்தம் இன்னொன்று இருக்க முடியாது. அந்த மாதிரிச் சிரிக்கக் கூடியவள் என்று என்னைப் பற்றி நீ நினைக்கிறாயா, ஆனந்தி?"

"சீச்சீ! உன்னை எனக்குத் தெரியாதா, என்ன? அவர் கிடக்கிறார்" என்றேன்.

என்றால் அவர் மனோஹராவின்மேல் வீசிய குற்றச்சாட்டுக்களைச் சகிக்க முடியவில்லை. அவள் மீது அவருக்கு இவ்வளவு கேவலமான கருத்து இருக்கும்போது அந்த உறவைத் தொடர்வதுகூட என்னைப் பொறுத்தவரை பைத்தியக்காரத் தனமாகத்தான் தோன்றிற்று. ஆயினும் அறிவிற் சிறந்த மனோஹரா தானாகவே தன் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருவதுதான் நல்லது என்று தோன்றிற்று. எனவே, என் கருத்தை அவளிடம் வாய்விட்டுச் சொல்லக் கூடாது என்ற முடிவுக்கு நான் வந்தேன்.

மனோஹரா கண்ணீர் உகுக்கலானாள். அவள் அழுது நான் பார்த்ததே இல்லை. என் மனம் சங்கடப்பட்டது. அழட்டும் என்று நான் பேசாமலிருந்தேன்.

"ஆனந்தி! அவர் கேட்டிருக்கிற அத்தனை கேள்விகளுக்கும் சுடச்சுட நாளைக்குப் பதில் எழுதப் போகிறேன்" என்றவாறு அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலை மனோஹரா என் வீட்டுக்குச் சற்று முன்னதாகவே வந்தாள். சீதாராமனுக்குத் தான் எழுதி வைத்திருந்த கடிதத்தைக் காட்டுவதற்கு அலுவலகத்தில் வாய்ப்புக் கிடைக்காமல் போகலாம் என்பதால் அவள் தான் எழுதியிருந்த கடிதத்தைக் கொண்டு வந்திருந்தாள். நானும் அவளும் யாருடைய தலையீடும் இருக்கக் கூடாதென்பதற்காக மொட்டை மாடிக்குப் போனோம்.

'அன்புள்ள திரு சீதாராமன் அவர்களுக்கு,

உங்கள் நீண்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். அதைப் படித்து முடித்ததும் எனக்குத் தோன்றிய முதல் எண்ணம் நீங்கள் என்னை உள்ளன்போடு நேசிக்கவில்லை என்பதுதான். உங்களை மணந்து கொள்ளுவது ஓர் ஆபத்தான விளையாட்டு என்று தோன்றிவிட்டது. திருமணம் என்பது நம் நாட்டில் பெண் ஒரே ஒரு தடவை மட்டுமே செய்து கொள்ளக்கூடிய நிலையான பந்தம் என்பதை நினைத்துப் பார்க்கையில் நாம் திருமணத்தால் பந்தப் படக் கூடாது என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. உங்களை மணந்து கொள்ளும் எண்ணத்தை நான் கைவிடுகிறேன். இப்படி எழுதும் போது என் மனம் என்ன பாடுபடுகிறது என்பதை அந்த ஆண்டவனே அறிவான். உங்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிவது என்று நான் தீர்மானம் செய்துவிட்ட பிறகு நீங்கள் என் மேல் சுமத்தியுள்ள குற்றச் சாட்டுகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை என்று நினைக்கிறேன். ஆனால் அவற்றுக்குப் பதில் சொல்ல வழியில்லாததாலேயே நான் உங்களிடமிருந்து 'தப்ப' முயல்வதாக நீங்கள் நினைத்து விட இடமுண்டு என்பதை நினைத்துப் பார்க்கும் போது, விளக்கம் கொடுக்க வேண்டிய தேவையிருப்பதாக நான் கருதாவிடினும், எனது தூய்மையை விளக்குவதற்கு நான் விரும்புகிறேன். அதை நீங்கள் நம்புவீர்கள் என்றோ அல்லது என் மீது இப்படியெல்லாம் பழி சுமத்தியதற்கு வருந்துவீர்கள் என்றோ நான் எதிர்பார்க்கவில்லை.

நான் சென்னையில் இருந்த போது வீரேந்திரா என்ற வட இந்திய வாலிபனுடன் நட்பாக இருந்தது உண்மைதான். நானும் அவனும் வெறும் நண்பர்களே. இன்றும் அவன் எப்போதாவது நலன் விசாரித்துக் கடிதம் எழுதுவதுண்டு. என்னைவிட நான்கு வயசு சிறியவனான அவன் என் தம்பி மாதிரி தான். அவனும் என்னை 'சிஸ்டர்' என்று தான் அழைப்பான். நாங்கள் திருமணம் செய்து கொள்ளுவதற்கு இருந்தோம் என்பது வெறும் பிதற்றல்.

ஆகவே நான் என் 'கறைபட்ட' கடந்த காலத்தை உங்களிடமிருந்து மறைக்கவில்லை.

சுந்தரராஜன் எந்தக் காலத்திலும் ஆபாசமான கேள்வி — பதில் பகுதியை என்னிடம் காட்டியது கிடையாது. அவரும் நானும் சேர்ந்து கொண்டு அதை ரசித்துச் சிரித்ததும் கிடையாது. அப்படி ஒரு நிகழ்ச்சியே நடந்திராத போது, அது நடந்ததாகவும், அது நடந்த போது நீங்கள் உடன் இருந்ததாகவும் எழுதியிருப்பது அப்பட்டமான பொய்.

உங்கள் கடிதத்தில் முடிவுரையாக, உங்களிடம் நான் கண்ட குறைகளை என் பதிலில் எடுத்து எழுதுமாறு கேட்டிருக்கிறீர்கள். குறையில்லாதவர் யாருமே இல்லை. ஆயினும் பிறரிடம் உள்ள குறைகளைப் பாராட்டாமல்— நாமும் குறை உள்ளவர்களே என்ற காரணத்


மகிழ்ச்சி துள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே...
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும்
இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலை
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
தலைமை அலுவலகம்: 4, சிந்தியா ஹவுஸ், புது டெல்லி 1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிட்.
டால்மியாபுரம், (தமிழ்நாடு).



லக்ஷ்மியின்
அழகு மிளிர அணியும்
சுகத்திற்கு....
அன்றாடம் உடுப்பதற்கும்,
எல்லா விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்
உகந்த துணி
கவர்ச்சியான அணி-
இலேசானது சுருங்காதது-
நேர்த்திமிக்க டிசைன்கள்
பாலிரீனு-வாயில்களுள்
மேம்பட்டது.
வாயில்கள்
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
VSK LM 295 TM

தால் — அவர்களிடம் இருக்கக் கூடிய நல்ல தன்மைகளுக்காக மட்டுமே அவர்களை நேசிப்பதுதான் அன்பின் இலக்கணம் என்று நான் கருதுகிறேன். என் கருத்து இதுவாக இருக்கும்போது உங்களிடம் நான் கண்ட குறைகளையெல்லாம் எடுத்து எழுதிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை.

என்னை மறந்துவிட்டு வேறொரு பெண்ணைப் பார்த்து நீங்கள் மணந்து கொள்ளவும். உங்கள் அன்புக்கு நன்றி.'

கடிதத்தைப் படித்துவிட்டு நான் தலை நிமிர்ந்த போது மனோஜாவின் கன்னங்களின் மீது கண்ணீர் வழிந்துகொண்டிருப்பதைக் கண்டேன்.

''விட்டுத் தள்ளு, மனோஜா. அவர் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். நீ எவ்வளவு புத்திசாலிப் பெண்! நீ மனசை இப்படித் தளர விடலாமா? கண்ணைத் துடைத்துக் கொள்'' என்றேன்.

மறு தபாலிலேயே மனோஜாவின் கடிதத்துக்குச் சீதாராமனிடமிருந்து பதில் வந்து விட்டது. அன்று பிற்பகல் மனோஜா என்னிடம் கடிதத்தைக் காட்டினாள்.

'அன்புள்ள மனோஜாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. என் கடிதம் இந்த அளவுக்கு உன்னைப் புண்படுத்தும் என்று எனக்குத் தெரியாது. என் சென்ற கடிதத்தில் நான் எழுதிய விஷயங்களுக்காக உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நான் எழுதியது எதையும் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம். என்னை மன்னித்ததாக ஒரு வரி நீ உடனே எழுதினால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும்.'

இந்தக் கடிதம் அவரது சென்ற கடிதத்துக்கு எந்தவிதத்திலும் சமாதானம் தெரிவிக்கவில்லை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை ஓர் அப்பாவிப் பெண்ணின் மேல் சுமத்தி விட்டு, இப்போது அவற்றுக்காக அவர் மன்னிப்புக் கேட்பதில் உள்ள கேலிக்கூத்தை நினைத்துப் பார்த்தபோது எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. இனி அவர்களுக்குள் பழைய உறவு நிலவவே முடியாது என்றுதான் எனக்குத் தோன்றிற்று. எனினும், எனது கருத்தையோ, மனத்தின் எதிரொலியையோ மனோஜாவின் மேல் திணிக்க நான் விரும்பாததால் பேசாமல் இருந்தேன்.

இரண்டு வாரங்கள் கழிந்தபிறகு சீதாராமன் தனக்கு மறுபடியும் கடிதம் எழுதியிருப்பதாக மனோஜா தெரிவித்தாள். ஓரளவு மலர்ந்த முகத்துடன் அந்தக் கடிதத்தை அவள் என்னிடம் காட்டியபோது நான் வியப்புடன் அதைப் பிரித்துப் படித்தேன். அதில் படிப்பதற்கு ஒன்றுமே இல்லை. ஒரு முழுக் கடிதத்தின் இரு பக்கங்களிலும் 'மன்னிக்க மாட்டாயா? மன்னிக்க மாட்டாயா?' என்ற சொற்களே காணப்பட்டன.

''பாவமாக இல்லை?'' என்று அவள் கேட்டபோது 'பாவமாவது, மண்ணாங்கட்டியாவது' என்று பதில் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் நான் பேசாமலிருந்தேன்.



காரை ஜாக்கிரதையாக ஓட்டாவிட்டால் காரின் முன் பகுதி சேதமடைகிறது. ஜாக்கிரதையாக ஓட்டினாலோ பின் பகுதி சேதமடைகிறது. மக்கால்ஸ் - பாலி

''என்ன ஆனந்தி, பேசாமல் இருக்கிறாய்?'' என்று கேட்டபோது, ''முன்பே நான் சொல்லியிருக்கிறபடி நான் அபிப்பிராயம் சொல்வதற்கு இதில் என்ன இருக்கிறது? இது உன் சொந்த விஷயம். இதில் இரண்டாமவரின் தலையீட்டுக்கோ கருத்துக்கோ இடமே இல்லை'' என்றேன்.

ஒரு விநாடி என்னைக் கூர்ந்து பார்த்த மனோஜா, ''நான் அவரை மன்னித்துவிடுவதென்று தீர்மானித்திருக்கிறேன். ஏதோ தெரியாத்தனமாக எழுதிவிட்டார், பாவம்'' என்றாள். நான் அப்போதும் பேசாமல் இருந்தேன். கடிதத்தை மடித்து அவளிடம் திருப்பிக் கொடுத்தேன்.

''நான் அவரோடு சமாதானம் செய்து கொள்ளுவது உனக்குப் பிடிக்கவில்லைதானே'' என்று மறுபடியும் அவள் என்னைக் கேட்ட போது, ''இதோ பார், மனோஜா. இது உன் விவகாரம். அவர் குறைகள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும் சரிக் கட்டிக் கொண்டு போகிற அளவுக்கு அவர் மேல் உனக்கு அன்பு இருந்தால் நீ அவரை மணந்து கொள். எதையும் ஒரு தடவைக்கு இரு தடவை நன்றாக யோசித்துவிட்டுச் செய்!'' என்றேன்.

''அவர் ரொம்பவும் குழந்தைத்தனமானவர் என்று நினைக்கிறேன். கள்ளங் கவடு இல்லாதவர். அதனால்தான் கைக்கு வந்தபடியெல்லாம் எழுதிவிட்டு இப்போது பக்கம் பக்கமாக மன்னிப்புக் கேட்கிறார்.''

அதற்குப் பிறகு மனோஜா சீதாராமனுக்கு எழுதிய கடிதத்தையும் என்னிடம் காட்டியபிறகே தபாலில் சேர்த்தாள். நடந்ததை இருவருமே மறந்துவிடலாம் என்றும் அவர் தன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை என்றும் அவள் சுருக்கமான பதிலை எழுதியிருந்தாள். எனக்கும் அது போதுமென்றே பட்டது. அவர்கள் இருவரும் எவ்வளவுக்கெவ்வளவு சுருக்கமாக எழுதிக் கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்றும் எனக்குத் தோன்றியது. ஆனால் இந்த எனது எண்ணத்தை நான் அவளிடம் வாய்விட்டுச் சொல்லவில்லை.

மறு நாள் சீதாராமனிடமிருந்து வந்த கடிதத்தை வழக்கம்போல் மனோஜா கொண்டு வந்து காட்டினாள். அதில் அவர் மனோஜாவின் தந்தையைத் தாம் பார்த்துப் பேசி விடுவது நல்லதென்று கருதுவதாகத் தெரிவித்திருந்தார்.

''ஆனந்தி! இவர் இந்தமாதிரி எழுதியிருக்கிறாரேடி? என்ன செய்வது? எப்படி அப்பாவிடம் சொல்வது? இன்னும் கொஞ்ச நாட்கள் கழித்துச் சொல்லிக் கொள்ளலாம் என்று இருந்தேன். இவர் அவசரப்படுகிறாரே? இப்போதுதான் அப்பாவின் உடம்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தேறிக் கொண்டு வருகிறது. அப்பாவை இந்த விஷயம் எப்படிப் பாதிக்குமோ?'' என்று மனோஜா கவலை தெரிவித்தாள்.

''மனோஜா! இதோ பார், எப்படியும் உன் அப்பாவிடம் இதைப் பற்றி ஒரு நாள் சொல்லித்தானாக வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு விரைவில் சொல்லி விடுகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு நல்லதென்று நான் எனக்குப் படுகிறது'' என்றேன்.

''நீ சொல்வதும் ஒரு வகையில் சரிதான்'' என்றாள் மனோஜா.

மறுநாள் மனோஜாவின் விவகாரம் எதிர்பாராத திருப்பத்தை அடைந்தது. இந்தத் திருப்பம் யாரும் எதிர்பாராத ஒன்றுதான். அலுவலகத்தில் அவள் செய்தியைச் சொன்ன போது எனக்கே ஒரு மாதிரியாக இருந்தது.

''ஆனந்தி, அவருடைய கடிதம் ஒன்று அப்பாவின் கையில் சிக்கிவிட்டது'' என்றாள்.

''எப்படிச் சிக்கியது? நீ ரொம்பவும் கவனமாக இருப்பவளாயிற்றே?'' என்றேன்.

''எப்படியோ என் பர்சிலிருந்து நழுவியிருக்கிறது.''

''இன்றைக்கா?''

''இல்லை, நேற்று. நேற்று மாலை நான் வீட்டுக்குப் போனதும் அப்பா அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு மௌனமாக என்னை உற்றுப் பார்த்தபோது என்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகிப் போய்விட்டது!''

''கடிதத்தைப் பற்றி உன்னிடம் அவர் ஒன்றுமே கேட்கவில்லையா?''

''கேட்டார். 'யார் அந்தப் பையன்?' என்பதுதான் அவர் கேட்ட முதல் கேள்வி. நான் சொன்னேன்.''

''அவருடைய சாதியைச் சொன்னாயா?''

''அவருடைய சாதியைப் பற்றி உடனே சொல்லவில்லை. அவர் நம் அலுவலகத்திலிருந்து மாற்றலாகிப் போய்ப் பெங்களூரில் தற்போது இருப்பதைப் பற்றிச் சொன்னேன். அவருடைய வயது, படிப்பு முதலியவற்றைப் பற்றிக் கேட்டார். சொன்னேன். 'எத்தனை நாட்களாக உங்களுக்குள் பழக்கம்? ஏன் என்னிடம் இத்தனை நாட்களாகச் சொல்லவில்லை?' என்று கேட்டார். அவர் அதைப் பற்றி என்னிடம் கேட்டுச் சில நாட்கள்தான் ஆகின்றன என்பதைச் சொன்னேன். ஜாதகத்தை வரவழைத்துக் கொடுக்கும்படியும் முதலில் ஜாதகப் பொருத்தம் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் சொன்னார்.''

''அப்படியானால், ஜாதகம் பொருந்தினால்தான் உன் அப்பா உங்கள் கல்யாணத்துக்குச் சம்மதிப்பார் என்று அர்த்தமா?''

அவருடைய மனப்பான்மையே அதுதானே? 'ஜாதகம் முதற்கொண்டு பொருந்த வேண்டும்' என்று நினைக்கிறவர் அவருடைய சாதிக்கு என்ன சொல்லுவாரோ?'' என்று நினைத்தபடி நான் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தேன். இவளுடைய இந்தக் காதல் விவகாரம் எதில் போய் முடியுமோ? சீதாராமனின் கடிதங்களைப் படித்த பிறகு அவர் மேல் நான் கொண்டிருந்த மதிப்பு சரிந்து போய்விட்ட நிலையில் மனோஜாவும் அவரும் மணம் செய்து கொள்ளாதிருப்பதே மேல் என்றுதான் நான் எண்ணி வந்தேன்.

''என்ன ஆனந்தி, பேசாமல் இருக்கிறாய்?''

''சொல்லு, மேலே. அதற்கப்புறம் உன் அப்பா என்ன சொன்னார்?''

''அப்புறமென்ன? மென்று விழுங்கியபடி அவர் நம்முடைய சாதிக்காரர் இல்லை என்பதையும், மாத்வ வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் நான் தெரிவித்தபோது அவர் முகம் போனதை விவரிக்க வார்த்தைகளே இல்லை. கொஞ்ச நேரம் ஒன்றுமே அவர் கேட்கவில்லை. பிறகு கோபமாக 'என்ன காரியம் செய்தாய்? நம் குடும்ப கௌரவம் என்னாகிறது? உன் மற்ற தங்கைகளுக்கெல்லாம் நாளைக்குக் கல்யாணமாக வேண்டாமா? இப்படிச்செய்து விட்டாயே?' என்று கேட்டார். 'அவர் பிராமணர்தானே அப்பா? இது ஒன்றும் தடையாக இருக்காது' என்று சொன்னேன். 'கலப்பு மணம் செய்து கொள்ளுகிற பெண் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருந்தால் நீ சொல்லுவது சரி. பணத்தால் அவர்கள் மாப்பிள்ளைகளை விலைக்கு வாங்கி விடுவார்கள். நம் விஷயம் அப்படியா? நாம் ஏழைகளாயிற்றே?.... இது நமக்கு ஒத்து வராத விஷயம். நீ இதைக் கைவிட்டுத்தான் தீர வேண்டும். உன்னை எப்படியாவது நான் உடனே ஒரு நல்ல இடத்தில் — என் தலையை அடகு வைத்தாவது — கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடுகிறேன். 'என் தகப்பனார் சம்மதிக்க மறுத்துவிட்டார்' என்று அந்தப் பையனுக்கு உடனே ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிடு' என்று கடுமையாகச் சொல்லி விட்டு என் பதிலுக்குக்கூடக் காத்திராமல் வாசற் பக்கம் போய் விட்டார்.'' —மனோஜாவின் கண்கள் கலங்கின.

''நான் கல்யாணம் செய்து கொள்ள ஆசையும் அவசரமும் படுகிறேன் என்று எண்ணித்தானே அப்பா இந்த மாதிரி சொல்லி விட்டார்? இதை நினைத்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டுவிடலாம் போல் இருக்கிறது. எவ்வளவு பெரிய அவமானம்? இதைவிடவும் பெரிய அவமானம் ஒரு பெண்ணுக்கு வேறென்ன வேண்டும்?'' என்று மனோஜா அழுதாள்.

''உன் அப்பாவுக்கும் உனக்கும் இந்தப் பேச்சு நடந்தபோது யாராவது உன் வீட்டில் உடன் இருந்தார்களா?''

''நல்ல வேளையாக யாரும் இல்லை. கல்லூரியிலிருந்தும் அலுவலகத்திலிருந்தும் யாரும் திரும்பியிருக்கவில்லை.''

''நீ எப்படி நிலைமையைச் சமாளிக்கப் போகிறாய்?''

''அதுதான் எனக்கும் தெரியவில்லை. நடந்ததை யெல்லாம் அவருக்குத் தெரிவித்து நாளைக்குக் கடிதம் எழுதலாம் என்று இருக்கிறேன். அவர் என்ன சொல்கிறார் என்று பார்க்கலாம்.''

இவன் இப்பொழுதெல்லாம் துண்டு விழும் பட்ஜெட்டில் வாழ்வதில்லை



கிட்டத்தட்ட பட்டினி கிடந்த நாட்களெல்லாம் இவனுக்கு ஒரு கடந்த கால நிகழ்ச்சி. யூகோ பாங்கியிலிருந்து கிடைத்த பணஉதவி மாதம் ரூ. 3600/-க்கு மேல் தொழில் நடத்தும் படியாக இவன் தொழிலின் போக்கையே மாற்றிவிட்டது.

தொழிலாளிகள் மாத்திரமின்றி மற்றும் சிறு வியாபாரிகள் விவசாயிகள். தனிப்பட்ட தொழிலாளிகள், டாக்டர்கள், பல்வைத்தியர்கள் போன்ற சுயத் தொழில் நடத்தும் சிகிச்சையாளர்கள். சிறு ஏற்றுமதியாளர்கள். இன்னும் சிறு தொழில்களில் ஈடுபட விரும்புவர்களுக்கும் யூகோ பாங்க் பண உதவிசெய்து உதவுகிறது.

எங்கள் பலவிதமான பண உதவி திட்டங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு உங்கள் வியாபாரத்தையும் தொழிலையும் விருத்தி செய்யுங்கள்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை காரியாலயம்: கல்கத்தா

UCO-11/71

"மனோஹரா, ஒன்று மட்டும் நீ உன் அப்பாவுக்குத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திவிடு. சீதாராமனைத் தவிர வேறு யாருக்கும் வாழ்க்கைப்பட முடியாது என்பதைக் கண்டிப்பாக அவரிடம் சொல்லிவிடு. அவர் பாட்டுக்கு வேறு இடத்தில் உனக்கு நிச்சயம் செய்துவிடப் போகிறார். வீண் சிக்கல் ஏற்படப் போகிறது."

"அவர் என் பேச்சைக் கேட்பதற்கே தயாராக இல்லாதவர் மாதிரி மல்லவா விருட்டென்று போனார். அவரிடம் எப்படிப் பேச்சை எடுப்பது?"

"எப்படியாவது நீ அதைப் பற்றி அவரிடம் உடனே பேசித்தானாக வேண்டும். இல்லாவிட்டால் ஒன்று செய். சீதாராமனை எப்படியாவது முயற்சி செய்து விடுமுறை எடுத்துக் கொண்டு உடனே புறப்பட்டு வரச் சொல்லி எழுது. இருவருமாகச் சேர்ந்து அப்பாவிடம் உங்களது நிலையைத் தெளிவுபடுத்திவிடுங்கள். விஷயமோ உன் அப்பாவுக்குத் தெரிந்து போய்விட்டது. இனிமேலும் தயங்குவதற்கோ யோசிப்பதற்கோ என்ன இருக்கிறது?"

"சரி. அப்படியே செய்கிறேன். நீ சொல்கிறது போல இனிமேல் தயங்குவதற்கு என்ன இருக்கிறது? நடந்தது எல்லாவற்றையும் அவருக்கு எழுதிவிட வேண்டியதுதானே?"

"ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் எழுது. அதுதான் நல்லது" என்றேன்.

மனோஹராவின் இந்தக் கடிதத்துக்கு மறு தபாலிலேயே சீதாராமனிடமிருந்து பதில் வந்துவிட்டது. அந்தக் கடிதம் வருமாறு:

'அன்புள்ள மனோஹராவுக்கு.

நம் விஷயம் நீ வாய் விட்டுச் சொல்லாமலே உன் தகப்பனாருக்குத் தெரிந்து போனதும் ஒரு வகையில் நல்லதுதான். ஆனால் நீ நான் எழுதும் கடிதங்களைப் போதுமான ஜாக்கிரதையோடு வைத்துக் கொள்வதில்லை என்று இதிலிருந்து அறிந்து நெஞ்சம் உளைச்சலுற்றேன். இனிமேலாவது கவனமாக இரு. உன் தகப்பனாரின் கையில் அகப்பட்டதுபோல் வேறு யார் கையிலாவது சிக்கப் போகிறது. இனிமேல் ஒன்று செய். நான் உனக்கு எழுதுகிற கடிதங்களை நீ எனக்கு எழுதும் பதிலோடு அவ்வப்போது திருப்பி அனுப்பிவிடு.

உன் கடிதத்தில் ஒரு சோகம் இழையோடுவதைக் காண்கிறேன். மனசைத் தளரவிடாதே. நீ எவ்வளவுக்கெவ்வளவு உறுதியாக இருக்கிறாயோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு இதில் வெற்றி கிட்டும். நாம் இருவரும் மனம் தளராமல் இருக்கும் வரை யாரும் எதுவும் செய்து கொள்ளுவதற்கில்லை.

உன் தகப்பனாரோடு வாதிட்டு அவரை மசிய வைப்பது என் பொறுப்பு. அதை நான் வெற்றிகரமாகச் செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மனசைத் தளரவிட வேண்டாம்.

மற்றவை நேரில்'

"ஆனந்தி, எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கிறது. அவர் வருவதற்கு முன்னால் நீ இந்த விஷயமாக என் தகப்பனாரைச் சந்தித்துப் பேசுகிறாயா?" என்று கேட்டாள் மனோஹரா.

"நானா?"

"ஆமாம், ஆனந்தி. என் தகப்பனாருக்கு உன் மேல் நல்ல மதிப்பு உண்டு. நீயும் நன்முகப் பேசக் கூடியவளாதலால் என் கட்சியை என்னைவிட நீ திறமையாக எடுத்துச் சொல்லி வாதாடுவாய் என்று நான் நம்புகிறேன். என்னாலும் அவ்வளவு சரியாக வாதாட முடியாது. உணர்ச்சி வசப்பட்டு அழுகைதான் வரும் எனக்கு. நீ கொஞ்சம் வாயேன்."

"சரி...."



"என் பையன்கள் எல்லோரும் நான் சொன்னபடி கேட்டு நடக்கறாங்க!"

"அடே 1971ல் இப்படி ஓர் அதிசயமா?"

"ஆமாம்! உங்க இஷ்டப்படியெல்லாம் இருங்கடான்னேன். அப்படியே செய்யறாங்க."

அன்று மாலை அலுவலகத்திலிருந்து நேரே வீட்டுக்குப் போன நான் மனோஹராவுக்காகத் துணிமணி வாங்குவதற்காக அவளுடன் கடைகளுக்குப் போக வேண்டியிருப்பதாக அம்மாவிடம் சொல்லி விட்டு அவள் வீட்டை நோக்கிக் கிளம்பினேன்.

நான் போய்ச் சேர்ந்தபோது மாலை மணி ஆறு. மனோஹராவின் தம்பி, தங்கை ஆகியோர் வீட்டில் இருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் மனோஹராவின் தந்தையோடு பேசவேண்டியிருக்குமே என்ற எண்ணம் என்னுள் கொஞ்சம் தயக்கத்தை ஏற்படுத்தியது..

அடுக்களையில் காப்பியும் சிற்றுண்டியும் அருந்திவிட்டு முன்னறைக்குத் திரும்பிய என்னை, அப்போதுதான் எங்கோ வெளியே போய்த் திரும்பி வந்திருந்த மனோஹராவின் தந்தை ராமசுப்பன், "என்னம்மா சௌக்கியமாக இருக்கிறாயா? பார்த்து ரொம்ப நாளாகிறதே?" என்று கேட்டு வரவேற்றார்.

"சௌக்கியம்தான். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?"

"ஏதோ இருக்கிறேன்." பிறகு நான் தயங்கித் தயங்கிப் பக்குவமாக மனோஹரா சீதாராமன் காதல் விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தவர் திடீரென்று ஆக்ரோஷமாக, "என் பெண்ணை நான் ஒரு மாத்வனுக்குக் கொடுப்பதாக இல்லை. இந்த நினைப்பே என்னை அருவருப்படையச் செய்கிறது. தகப்பனைவிட நேற்று வந்தவன் பெரிசாக அவளுக்குத் தோன்றினால் அவள் போகட்டும். ஆனால் இந்தக் கைகளால் நான் அவள் கல்யாணத்தை நடத்தி வைக்க மாட்டேன். அதுமட்டும் நிச்சயம். மூத்த மகளாகப் பிறந்தவளுக்குப் பொறுப்பு உணர்ச்சி கொஞ்சமாவது வேண்டாமா?

அவள் செய்கிற காரியங்களும் அவளுடைய நடத்தையும் அவளுடைய மற்ற தங்கைகளுக்கு ஊறு செய்யாத வகையில் அமைய வேண்டாமா? இவள் சுயநலத்தோடு இன்று தனக்குப் பிடித்தவனைக் கல்யாணம் செய்து கொண்டு போய்விடுவாள். நாளைக்கு இவளுடைய தங்கைகளை யார் கல்யாணம் செய்து கொள்ளுவார்கள்? அதைப் பற்றி அவள் யோசித்தாளா?'' என்று மூச்சுவிடாமல் பேசினார்.

''மாமா! வெளியிலே இருக்கிற நிலவரமே உங்களுக்குத் தெரியவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அக்கா கலப்பு மணம் செய்து கொண்ட குடும்பங்களிலேயெல்லாம் எனக்குத் தெரிந்து தங்கைகளுக்குக் கலியாணமாகாமல் நின்றுபோய்விடவில்லை. காலம் எவ்வளவோ மாறிவிட்டது. நாமும் கொஞ்சம் விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும்.''

''அம்மா, ஆனந்தி, நான் இதுவரை பொறுமை இழக்காமல் உன் வாதங்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். ஏனென்றால் நீ மூன்றாம் மனுஷி, உன்னைக் கோபித்துக் கொள்ளக் கூடாது என்பதால்தான். இனிமேலும் என்னால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியாது. இனிமேல் இந்த விஷயத்தைப் பற்றி உன்னுடனும் சரி, மனோஜாவுடனும் சரி, நான் விவாதிப்பதற்குத் தயாராக இல்லை...'' என்ற ராமசுப்பன் தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து இடுப்பில் இறுக்கிச் சுற்றிக் கொண்டு வாசற் பக்கம் போனார்.

அவர் வாசற்பக்கம் விருட்டென்று போனதும் மனோஜா கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் முழங்கால்களில் முகத்தைப் பதித்தபடி தரையில் உட்கார்ந்து விட்டாள்.

நான் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஏழரை. மனோஜாவின் தோளில் தட்டி விட்டு நான் எழுந்தேன். ''வரட்டுமாடி மனோஜா? மனசைத் தளர விடாதே. காலப் போக்கில் எல்லாம் சரியாகி விடும்'' என்றவாறு நான் அவளிடம் விடைபெற்றேன்.

மறுநாள் மனோஜாவைப் பிற்பகலில்தான் அலுவலகத்தில் பார்த்துப் பேச முடிந்தது.

''நான் உங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டுப் போன பிறகு என்ன நடந்தது மனோஜா? அப்பா அதைப் பற்றி மேற்கொண்டு உன்னிடம் ஏதாவது பேசினாரா?'' என்றேன்.

''அப்பா எதுவுமே பேசவில்லை. நேற்றிரவு அவர் சாப்பிடக் கூட இல்லை. என்மேல் அவ்வளவு கோபம் போலிருக்கிறது...''

''இருக்கட்டும். நாளைக்கு வருகிறார் அல்லவா சீதாராமன்?''

''ஆமாம். அதை நினைத்தால் வயிற்றைக் கலக்குகிறது. அப்பாவைச் சந்தித்து அவர் பேசுவது வேறு அப்பாவை எப்படிப் பாதிக்குமோ என்று பயமாக இருக்கிறது.... நேற்றிலிருந்து அப்பாவின் முகத்தில் உயிரே இல்லை. யாருடனும் பேசாமல் இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறார்.''

நான் பேசாமல் இருந்தேன். இருபத்தேழு வயது கழிந்த பிறகும் ஒரு பெண் எத்தனை பேருடைய அதிருப்திக்கு ஆளாக வேண்டியிருக்கிறது என்று நான் நினைத்துப் பார்த்தேன். சீதாராமனுடன் மனோஜா தன் உறவைத் தொடருவது எனக்குத் தனிப்பட்ட முறையில் பிடித்தமில்லாவிடினும் தனக்குப் பிடித்த ஒருவனோடு தன் வாழ்வைப் பிணைத்துக் கொள்ள ஒரு பெண்ணுக்கு—அவளது இருபத்தேழாவது வயசுக்குப் பிறகும் கூட — உரிமை இல்லை என்ற நிலை என்னுள் கசப்பை விளைவித்தது.

அன்று பிற்பகல் சாப்பாட்டு வேளையில் ''அவர் உன் வீட்டுக்கு வரும் நேரத்தில் நீயும் உடன் இருப்பது நல்லது. எனவே சீக்கிரம் வீட்டுக்குப் போய்ச் சேர்'' என்றேன்.

மனோஜாவின் கண்கள் கலங்கின. ''எனக்கு ஒரே திகிலாக இருக்கிறது. எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனோ? எனக்காகக் கடவுளிடம் வேண்டிக் கொள், ஆனந்தி'' என்று முனகியவாறு அவள் என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

மறுநாள் மனோஜா அலுவலகத்துக்கு வரவில்லை. என் கவலை அதிகரித்தது. சீதாராமன் மனோஜாவின் தந்தையைச் சந்தித்துப் பேசிய போது என்ன நடந்திருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளா விட்டால் தலையே வெடித்துவிடும் போலிருந்தது. அஞ்சல் வாயிலாக வந்த விடுமுறை விண்ணப்பத்தில் 'அவசர வேலை நிமித்தம்' என்று சொல்லப்பட்டிருந்தது. சீதாராமனை ராமசுப்பன் வரவேற்றிருப்பாரா இல்லையா என்பதைப் பற்றியோ அவர்களுக்குள் என்ன பேச்சு நடந்திருக்கும் என்பதைப் பற்றியோ என்னால் ஊகிக்க முடியவில்லை.

அதற்கு அடுத்த நாள் மனோஜா அலுவலகத்துக்கு வந்தாள். முகம் வாடியிருந்தது. உடம்பே கொஞ்சம் இளைத்து விட்டாற் போல் இருந்தது. உருவமே கறுத்தாற்போல் குறுகிப் போயிருந்தாள். சுமார் பத்தரை மணிக்கு அவள் பிரிவுக்குச் சென்ற நான், ''கான்டீனுக்குப் போகலாம் வருகிறாயா?'' என்று கேட்டதும் மனோஜா எழுந்து வந்தாள்.

''என்ன மனோஜா பேசாமல் இருக்கிறாய்? அவர் வந்தாரா?'' என்று நான்தான் முதலில் அமைதியைக் கலைத்தேன்.

''வந்தார், வந்தார்...''

''முதலிலிருந்து எல்லாவற்றையும் ஒன்று விடாமல் சொல்லு... இப்போது கையில் உடனே செய்து முடிக்க வேண்டிய அவசர வேலை எதுவும் இல்லையே? கொஞ்ச நேரம் நாம் இங்கு உட்கார்ந்து பேசலாமல்லவா?''


''என்னுடைய அதிகாரி எங்கோ வெளியே போயிருக்கிறார். திரும்பி வர ஒரு மணி நேரமாவது ஆகும். கையிலும் அவசர வேலை எதுவும் இல்லை...''

பணியாள் வந்து குவளைகளை எடுத்துக் கொண்டு போனான்.

மனோஜா எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள். ''...அவர் வரப் போவதைப் பற்றி அப்பாவிடம் நான் முன்கூட்டியே சொல்லவில்லை.... சுமார் ஆறரை மணிக்கு வந்தார். வந்ததும் அப்பா அவரை உள்ளே அழைத்துக் கொண்டு வந்தார்....''

''இன்னார் என்று தெரிந்து கொண்டுதான் உள்ளே அழைத்துக் கொண்டு வந்தாரா?''

''ஊகித்திருப்பார் என்றுதான் நினைக்கிறேன். அதனால்தான் உள்ளே அழைத்துக்



அரைப் பங்கு செலவில் இரு பங்கு வெளிச்சம் பெறுங்கள். பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்திப் பாருங்கள்.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் உடனே பொருத்துவதற்கு ஏற்றவாறு தயார் செய்யப்படுகிறது—லாம்ப், லாம்ப் ஹோல்டர், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் பலாஸ்டுடன் சேர்ந்து, முன் கூட்டியே அது ஒரு கனெக்டருடன் இணைக்கப் படுகிறது. நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவுதான் —ஸ்ட்ரிப்பின் இரு முனைகளையும் சுவரிலோ அல்லது மேலிருந்து கீழாகவோ ஆணிகள் போட்டு முடுக்கி விட வேண்டும். மெயின்லைன் கனெக்டருடன் இணைக்க வேண்டும். இப்போது விளக்கு எரிவதற்கு தயார்.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் ஒரு 40 வாட் பிலிப்ஸ் TL ப்ளூரோஸெண்ட் லாம்ப் பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த லாம்ப் இரண்டு 100 வாட் பல்புகளை விட அதிக வெளிச்சம் தரக்கூடியது. இருப்பினும், ஒரு 40 வாட் பல்புக்கு வேண்டிய மின்சாரமே அதற்கு தேவையாகிறது. அதனால், மின்சாரச் செலவுக் குறைப்பின் மூலமே உங்களுக்கு அதிகமான லாபம் ஏற்படுகிறது.

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
பிலிப்ஸ் வாங்குங்கள்.
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் பொருத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு மூலப்பொருளும் அதை அதிக நாட்கள் உழைக்க உதவுகின்றது. அதன் மூலம் உங்கள் பணத்திற்கு அதிகப்படியாகவே வெளிச்சத்தை நீங்கள் பெறுகிறீர்கள். உதாரணமாக, அதில் பொருத்தப்பட்டிருக்கும் பலாஸ்ட் லாம்பிலிருந்து முழு அளவு வெளிச்சத்தையும் பெறுவதற்கு ஏற்றவாறு தயார் செய்யப்பட்டிருக்கிறது. லாம்ப் ஹோல்டரும், ஸ்டார்ட்டர் ஹோல்டரும் கச்சிதமாக இணையுமாறு பொருத்தப்பட்டிருக்கிறது. அதனால் ஒவ்வொரு முறையும் உங்கள் லாம்ப் தடங்கலே இன்றி எரியும். ட்யூபை உருட்டவோ, திருகவோ வேண்டிய அவசியமில்லை.

வருங்காலத்தைப் பற்றி நன்கு சிந்தனை செய்து பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் பணத்தை முதலீடு செய்யுங்கள். அதைவிட சிறந்த லாம்ப் வேறெதுவுமில்லை.

பிலிப்ஸ் PHILIPS



ரெம்கோவின் நாத வெள்ளத்தில்
நீந்தித் திளையுங்கள்!
தேர்ந்தெடுக்க
உன்னதமான
4 ரேடியோக்கள்...
REMCO கெய்ஷா
அனுராக்
மங்களா
REMCO
ரெம்கோ
ரேடியோக்கள்
ஒலி நயத்தில்
புதுமையைப் புகுத்துபவை.
ரேடியோ அண்ட் எலக்ட்ரிகல்ஸ்
மேன்யு ஃபேக்சரிங் கோ லிட்.,
மைசூர் ரோடு, பெங்களூர்

> ஜப்பானில் 'ரோஜாக்களின் கவிதை' என்ற பெயரில் ஒரு புத்தகம் வெளிவந்தது. அந்தப் புத்தகத்தில் வெடிகுண்டுகள் தயாரிக்கும் முறைகளைப் பற்றி விளக்கமாக எழுதப்பட்டிருந்தது!
>
> -டைம்ஸ் ஆப் இந்தியா - பாபு

கொண்டு வந்தார். — வாசலில் வைத்துப் பேச வேண்டாமே என்று...'உட்காருங்கள்' என்று அப்பா ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டதும் அவர் உட்கார்ந்தார். எடுத்த எடுப்பிலேயே அவர் விஷயத்துக்கு வந்துவிட்டார். 'நான் உங்கள் மூத்த மகள் மனோஜாவின் அலுவலகத்தில் சில ஆண்டுகள் வேலைபார்த்து விட்டுத் தற்போது பெங்களூர் தலைமை அலுவலகத்துக்கு மாற்றப்பட்டு அங்கு வேலை செய்கிறேன். உங்கள் மகளை மணந்து கொள்ள நான் விரும்புகிறேன்...' என்று அவர் சொன்னதுதான் தாமதம், அப்பாவுக்குக் கோபம் வந்து விட்டது. 'ஓகோ! அந்த ஆசாமி நீங்கள்தானா? கூட வேலை பார்க்கிற பெண்களைக் கவர்ந்து, அவர்கள் மனசைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவதையே உங்களைப் போன்ற பல ஆண்பிள்ளைகள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. நான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க முடியாது' என்று கடுமையாகவும் கண்டிப்பாகவும் அப்பா பதில் சொல்லி விட்டு எழுந்து நின்றார். 'நீங்கள் போகலாம்' என்றுதானே அதற்கு அர்த்தம்? அப்பா எழுந்து நிற்கவே இவரும் உடனே எழுந்து நின்றார். ஆனால் போகவில்லை.... 'சார், நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு முப்பத்திரண்டு வயசாகிறது. இதுவரை யோக்கியமாக வாழ்ந்து வருகிறேன். ஒரு தப்புத் தண்டாவுக்குப் போனது கிடையாது. கல்யாண வயசில் எனக்குத் தங்கைகள் இருப்பதால் இதுவரையில் என்னுடைய கல்யாணத்தைப் பற்றி நான் யோசித்தது கூடக் கிடையாது. என் நடத்தையைப் பற்றி நீங்கள் எந்த வட்டாரத்திலும் விசாரித்துப் பார்க்கலாம். எங்கள் அலுவலகத்தில் எத்தனையோ பெண்கள் — கல்யாணமாகாதவர்கள்—இருக்கிறார்கள். அவர்களில் யாரையும் நான் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. உங்கள் பெண் ஒருத்திதான் என் மனசைக் கவர்ந்தாள்...' என்று சொல்லிக் கொண்டு போன அவரை அப்பா இடைமறித்தார்... இருவரும் ஆங்கிலத்தில்தான் பேசிக் கொண்டார்கள்.... 'நீங்கள் எவ்வளவு நல்லவராக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தாலும் சரி — இன்னும் எத்தனை சிறப்புக்கள் உங்களுக்கு இருந்தாலும் சரி — உங்களுக்கு என் பெண்ணை நான் கொடுப்பதற்கில்லை' என்று அப்பா ஆத்திரத்துடன் வெடிக்கவும், 'காரணம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?' என்று இவர் பணிவோடு கேட்டார். 'என் பெண் உங்களுக்குத் தெரிவித்திருப்பாளே காரணத்தை? இம்மாதிரியான கலப்பு மணம் எங்கள் வம்சத்திலேயே நடந்ததில்லை. அந்த வழக்கத்தை மீறுவது என்பது என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. நீங்கள் அநாவசியமாக இங்கே நின்று கொண்டு என்னோடு வாதாட வேண்டாம். நான் ரொம்பக் கோபக்காரன்' என்று அப்பா பதில் சொன்னார்.''

''ஐய்யய்யோ! அப்புறம்? இதையெல்லாம் கேட்டுக் கொண்டு நீ சும்மாவா இருந்தாய்?''

''வாயே திறக்கவில்லை. அவசியமானாலொழிய வாயே திறப்பதில்லை என்றுதான் நான் எண்ணியிருந்தேன். நானும் பேசினால் அப்பா அதைத் தாங்க மாட்டார் என்பதால் தான் கூடியவரை வாயே திறப்பதில்லை என்று முடிவு செய்திருந்தேன்.''

'' 'வெளியே போ' 'என்று உன் அப்பா சொன்னதற்கு அவர் என்ன சொன்னார்? அவருடைய பொறுமை போயிருக்குமே?''

''இல்லை. அப்போதும் அவர் பொறுமையைக் கைவிடவில்லை. 'சார், தயவுசெய்து ஆத்திரப்படாதீர்கள். முதலில் உட்காருங்கள்' என்று அப்பாவைக் கட்டாயமாக நாற்காலியில் உட்கார்த்திவிட்டுத் தாம் மட்டும் மரியாதையாக நின்று கொண்டே பேசினார். ''உங்கள் பெண்ணுக்கு இருபத்தெட்டு வயசாகிறது. இதுவரைக்கும் அவளுக்குக் கல்யாணம் ஆகாததற்கு என்ன காரணம் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஆயிரக்கணக்கில் வரதட்சிணை கொடுக்க முடியாதது முக்கியமான காரணம் இல்லையா? வரதட்சிணை வேண்டாம் என்று சொல்லி முன்வருகிற என்னைப் போன்ற நியாய உணர்ச்சியுள்ள இளைஞர்களை உங்களைப் போன்ற படித்த பெரிய மனிதர்கள் ஒதுக்கலாமா?' என்று கேட்டார். எனக்கு அழுகையே வந்துவிட்டது.''

''சே, என்ன பெண் நீ? வாயைத் திறந்து ஏதாவது சொல்ல வேண்டாமா? நீ அழுததைப் பார்த்ததும் உன் அப்பாவுக்கு என்ன தோன்றி யிருக்கும்? இவளை நம் வழிக்குக் கொண்டு வந்துவிடுவது சுலபம் என்றுதானே தோன்றியிருக்கும்?... சரி, சரி. அப்புறம்?''

''இவர்-உடனே, 'மிஸ் மனோஜா, உங்கள் தகப்பனாரிடம் உங்கள் மனத்தில் இருப்பதைக் கண்டிப்பாகச் சொல்லி விடுங்கள்' என்றார். 'ஓகோ, என் முன்னாலேயே என் மகளுக்குப் போதிக்கிறாயா? போடா வெளியே' என்று அப்பா கையை உயர்த்திக் கொண்டு கூச்சல் போட்டார். நிலைமை விபரீதமாவதைப் பார்த்ததும், சீதாராமனைப் பார்த்து, 'தயவு செய்து நீங்கள் இப்போது போய்விடுங்கள். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்' என்றேன். 'சார்! அப்புறம் உட்கார்ந்து நிதானமாக யோசித்துப் பாருங்கள். நான் வருகிறேன்' என்று அப்பாவை நோக்கித் தம் கைகளைக் கூப்பிவிட்டு இவர் கிளம்பினார். இவ்வளவு தான் நடந்தது....அவர் அந்தப் பக்கம் போனாரோ இல்லையோ, அப்பா இந்தப் பக்கம் மயக்கமாகிச் சாய்ந்து விட்டார்.''

''த்சு த்சு. இரத்த அழுத்தமாக்கும்?''



டியூஷன் வாத்தியார் : உங்கப்பா தன் கோட்டின் ஒரு பாக்கெட்டிலிருந்து 1000 ரூபாய் எடுக்கிறார். இன்னொரு பாக்கெட்டிலிருந்து 2000 ரூபாய் எடுக்கிறார். மொத்தம் என்ன ?

பையன் : இருங்கோ சார்! ஏதோ தப்பு நடந்திருக்கிறது. அவர் வேறு யார் கோட்டையோ தவறிப் போய்ப் போட்டுண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

"ஆமாம், இரத்த அழுத்தம்தான்."

"அதுதான் நேற்று நீ அலுவலகத்துக்கு வரவில்லையா?"

"ஆமாம். நேற்று முழுவதும் கூட அவருக்கு உடம்பு சரியாக இல்லே. அதனுல்தான் வரவில்லே."

நான் ஒன்றும் சொல்லவில்லே.

அன்று மாலே மஹேஹாவைச் சந்தித்தபோது, சீதாராமன் அவளைச் சந்திக்க வரவில்லே என்று சொன்னுள். அவர் வராததைத் தன்னுல் சாதாரணமாகக் கருதி அமைதியாக இருக்க முடியவில்லே என்றும், அவர் வராததற்கு ஏதோ காரணமிருக்க வேண்டும் என்று தான் நினேப்பதாகவும் அவள் சொன்னுள்.

"அதெல்லாம் ஒன்றும் இருக்காது. எப்படியும் ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுவார்" என்று தேற்றி வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்.

இரண்டு நாட்களுக்கெல்லாம் சீதாராமனிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. சிவந்த கண்களுடன் மஹேஹா அந்தக் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்து காட்டினுள்.

"நான் பயந்தபடியே ஆகியிருக்கிறது. ஆனந்தி... காரசாரமாகக் கடிதம் எழுதியிருக்கிறர்....என்னேச் சரியாகவே அவர் புரிந்து கொள்ளவில்லே" என்றுள் மஹேஹா. நான் ஒன்றும் கூருமல் சீதாராமனின் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

'மஹேஹாவுக்கு. கொஞ்சம் யோசித்துப் பார்த்தாயாலுல் என் கோபத்தின் காரணம் உனக்குப் புரியும். அன்று உன் தகப்பனுருடன் நான் வாதாடிக் கொண்டிருந்தபோது ஒரு வார்த்தைகூடப் பேசாமல் நீ மௌனமாக நின்று கொண்டிருந்ததை நினேத்து நான் வேதனேப்படுகிறேன். உன்னுடைய அன்பில் போதுமான அளவுக்கு ஆழமில்லேயோ என்றுதான் உனது நடவடிக்கைகள் என்னே நினேக்க வைக்கின்றன. உன்னேச் சந்தித்துப் பேச வேண்டும் என்பதில் எனக்கிருந்த ஆவல் உனக்கும் இருந்திருந்தால் நீ மறுநாள் கண்டிப்பாக அலுவலகத்துக்கு வந்திருப்பாய். என் கோபத்துக்கு அதுதான் காரணம்....'

கடிதத்தில் கண்டிருந்தது இவ்வளவுதான்.

கடிதத்தை மடித்துத் திருப்பிக் கொடுத்த நான், "நல்ல பெண்ணடி நீ. உன் அப்பாவுக்கு மிகவும் உடம்பு சரியில்லாமல் போய்விட்டதையும் அதனுல்தான் மறு நாள் அலுவலகத்துக்கு வர முடியவில்லே என்பதையும் தெரிவித்திருந்தால் இந்த வம்பில்லே பார். உடனே எல்லாவற்றையும் தெரிவித்து அவருக்கு விவரமாக எழுது. உன் அப்பாவோடு அவர் பேசியபோது நீ வாயே திறக்காமல் இருந்ததற்குக் காரணம் கேட்டிருக்கிறரே, என்ன சொல்லப் போகிறய்?" என்றேன்.

" 'இரண்டு பேராகச் சேர்ந்து வளைத்தால் அவருக்கு அதிர்ச்சி அதிகமாக இருக்கும் என்று தான் நான் பேசாமல் இருந்தேன்' என்று எழுதுகிறேன்....."

"சரி... அப்படியே செய்...." என்றேன்.

மஹேஹா மறு தபாலிலேயே என்னிடம் கூறியபடி சீதாராமனுக்குக் கடிதமெழுதினுள்.

ராமகப்பன் குமார் இரண்டு வாரங்கள் படுக்கையில் இருந்த பின்னர் ஓரளவு தேறினுர். மஹேஹா தக்க வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்ததாக என்னிடம் கூறினுள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. சீதாராமனிடமிருந்து வரும் கடிதங்களில் மஹேஹாவின் தகப்பனுரின் உடல் நிலேயைப் பற்றி விசாரித்துச் சில வாக்கியங்கள் இருந்தன. வேறு விசேஷம் இல்லே.

ஒரு நாள் அவளிடமிருந்து வந்த கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

"இன்று உன் தகப்பனுருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதன் நகல் பின்வருமாறு—

'மதிப்புக்குரிய ராமகப்பன் அவர்களுக்கு,

கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக நீங்கள் அன்று என்னேடு பேசியும் இந்தக் கடிதத்தை எழுத நான் முன்வந்ததற்காக முதலில் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் திருமண விஷயமாக யோசித்துப் பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு இதற்குள் வந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களுக்கு உடம்பு சரியில்லே என்று கேள்விப்பட்டேன். இப்போது எப்படி இருக்கிறீர்கள்?

என் தங்கைக்குக் கல்யாணம் நிச்சயமாகி விரைவில் நடக்கவிருக்கிறது. மஹேஹா என்னேத் தவிர வேறு யாரையும் மணப்பதற்கில்லே என்பதை இதற்குள் தங்களுக்குத் தெரிவித்திருப்பாள் என்று நம்புகிறேன். உங்கள் பதிலே விரைவில் எதிர்பார்க்கிறேன்.'

உன்னேக் கலந்து கொள்ளாமல் உன் தகப்பனுருக்கு எழுதியதைப் பொருட்படுத்த மாட்டாய் என்று நம்புகிறேன்."

கடிதத்தைப் படித்த நான் ஒன்றும் பேசாமல் இருக்கவே, "அப்பாவுக்கு இன்றுதான் அவர் கடிதம் கிடைக்கும் என்று நினேக்கிறேன். சாயந்திரம் வீட்டுக்குப் போனதும் எந்த மாதிரி பூகம்பம் வெடிக்குமோ தெரிய

வில்லை. எனக்கு ஒரே திகிலாக இருக்கிறது' என்றாள் மனோஹரா.

'' இட்டவட்டமாகச் சொல்லிவிடு, மனோஹரா. நீ என்ன சின்னக் குழந்தையா என்ன? இருபத்தெட்டு வயசாகிறது உனக்கு'' என்றேன். மனோஹரா மௌனமாக இருந்தாள்.

மறு நாள் சீதாராமன் தன் தகப்பனாருக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி அவர் சொன்னதை என்னிடம் தெரிவித்தாள் மனோஹரா.

''ஆனந்தி! நேற்றிலிருந்து அப்பாவுக்கு மறுபடியும் உடம்பு சரியில்லை. அப்பாவுக்கு உடம்புக்கு வந்திருப்பதைவிட 'உன்னால்தான் அப்பாவுக்கு உடம்பு சரியில்லாமல் போயிற்று' என்று தங்கை மாலா சொல்லுவதைத்தான் என்னால் தாளவே முடியவில்லை. 'சீதாராமன் எனக்குக் கல்யாண விஷயமாய்க் கடிதம் எழுதியிருக்கிறான். நீ உன் மனசை மாற்றிக் கொள்ளுவதுதான் எல்லாருடைய நன்மையை உத்தேசித்தும் நல்லது' என்றார் அப்பா.''

''நீ என்ன சொன்னாய்?''

'' என் தைரியத்தை யெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு, 'அவரைத் தவிர வேறு யாரையும் என்னால் மணந்து கொள்ள முடியாது, அப்பா. தயவுசெய்து மன்னித்து விடுங்கள்' என்றேன்.''

''என்ன சொன்னார் அதற்கு?''

''நம் பிரிவைச் சேர்ந்தவனாக இருந்திருந்தால் நான் ஜாதகம்கூடப் பார்க்க வேண்டாம் என்று சொல்லிவிடுவேன். என்ன ஆனாலும் சரி, நான் அந்த மாதவப் பையனுக்கு உன்னைக் கலியாணம் செய்து கொடுப்பதாக இல்லை' என்று சொன்னார். எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது. இன்று வேறு அவரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. சொக்கிகுளத்தில் இருக்கும் தன் தாயாரைப் பார்த்து வருமாறு எழுதியிருக்கிறார்....''

மனோஹரா அன்று சொக்கி குளத்துக்குப் போய்ச் சீதாராமனின் தாயாரைச் சந்தித்து விட்டு வந்தாள்.

மறு நாள் எல்லாவற்றையும் எனக்கு விவரமாகச் சொன்னாள்.

'' நான் போன போது அவருடைய அம்மா அரிசியிலிருந்து கல் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். 'நான்தான் மனோஹரா' என்று சொன்னேன். என் பேரைக் கேட்டதுமே, 'வா, அம்மா, வா, வா' என்று ஆசையாக வரவேற்றார்கள்.''

''மாமியாரைப் பிடித்துப் போய்விட்டது என்று சொல்லு'' என்றேன்.

மனோஹரா சிரித்து விட்டுப் பேசாமலிருந்தாள். பிறகு இருவரும் பிரிந்தோம்.

மறு நாள் மனோஹரா அலுவலகத்துக்கு வரவில்லை. அதற்கு மறு நாளும் வரவில்லை. அதற்கு அடுத்த நாளும் வரவில்லை. விடுமுறை கேட்டுக் கடிதம் மட்டும் அஞ்சல் வாயிலாக வந்தது. தன் தகப்பனாருக்கு உடம்பு சரியில்லை என்று அவள் காரணம் காட்டியிருந்தாள். எனவே அன்று மாலை நான் மனோஹராவின் வீட்டுக்குச் சென்றேன்.

நான் போனபோது மனோஹரா ராமகப்பனின் படுக்கைக்குப் பக்கத்தில் நின்று அவருக்கு விசிறிக் கொண்டிருந்தாள். ராமகப்பன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாற்



மனைவி: பணம் பேசுகிறது என்கிறார்களே, உண்மையா?

கணவன்: அப்படித்தான் எல்லாரும் சொல்றாங்க...! அதுக்கென்ன?

மனைவி: அப்ப நீங்க ஆபீஸ் போகும் போது இருபது ரூபாய் கொடுத்துவிட்டுப் போங்க. நான் பூரா தனியா இருக்கிறது 'போர்' அடிக்கிறது. அதோடு பேசிண்டு இருக்கேன்.

போல் கண்களை மூடிப் படுத்திருந்தார். மாலா அறையின் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து ஏதோ பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்.

''வா, ஆனந்தி!'' என்று என்னை வரவேற்ற மனோஹரா விசிறியை ஓர் ஓரமாகப் போட்டுவிட்டு என்னை அழைத்துக் கொண்டு அடுக்களைக்குப் போனாள்.

மனோஹரா கலகலவென்று கண்ணீர் உகுக்கலானாள். இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு அவள் விம்மியது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''அப்பாவுக்கு எந்தவிதமான அதிர்ச்சியும் அளிக்கக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அவருடைய கடிதம் வந்ததிலிருந்தே அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லை... நேற்று என்ன ஆயிற்று, தெரியுமா? பாதி ராத்திரியில் அப்பா திடீரென்று கூச்சல் போட்டுக் கொண்டு எழுந்தார். எனக்கும் அவருக்கும் கல்யாணம் ஆன மாதிரி கனவு கண்டாராம். என்னை மாதவப் பெண்ணின் கோலத்தில் பார்த்து ஏற்பட்ட அதிர்ச்சியில்தான் உளறியடித்துக் கொண்டு எழுந்தாராம்.....''

''உன்னிடமே அப்படிச் சொன்னாரா ?''

''இல்லை, இல்லை. மாலாவிடம் சொன்னார். சொன்னதை நானே என் காதால் கேட்டேன் ஆனந்தி. சாதி உணர்ச்சி என்பது எந்த அளவுக்கு நம் ரத்தத்தில் ஊறிப் போயிருக்கிறது என்று பார்த்தாயா? சில சமயங்களில் யோசித்து யோசித்துத் தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது எனக்கு..... ஆனந்தி, நேற்று முழுதும் யோசித்ததில் ஓரளவுக்கு அப்பாவுக்கு அதிக ஏமாற்றமும் அதிர்ச்சியும் ஏற்படாதபடி இந்தக் கல்யாணத்தை நடத்த முடியும் என்று தோன்றுகிறது.......''

''எப்படி மனோஜா?''

''திருமணத்தை எங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி நடத்துவதற்கு அவர்கள் வீட்டில் சம்மதம் கொடுத்தால் அப்பாவின் மனம் ஓரளவுக்குச் சமாதானம் அடையக்கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனந்தி, நீ என்ன நினைக்கிறாய்?''

''நல்ல யோசனைதான். ஆனால் அவர்கள் வீட்டில் அதற்குச் சம்மதிப்பார்களா?''

''கேட்டுத்தான் பார்க்க வேண்டும்.''

மேலும் கொஞ்ச நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டுக் கிளம்பினேன். நான் கிளம்பும் வரைக்கும் ராமகப்பனுக்கு விழிப்பு வரவில்லை. மறு நாள் அலுவலகத்துக்கு வரவிருப்பதாக மனோஜா தெரிவித்தாள். சீதாராமனிடமிருந்து பதிவுத் தபால் வந்திருக்கும் என்றும் அதைப் பெற்றுக் கொள்வதற்காகவாவது தான் மறு நாள் அலுவலகத்துக்கு வரவேண்டியிருக்கும் என்றும் அவள் கூறினாள்.

மறு நாள் அவள் எதிர்பார்த்தபடியே சீதாராமனிடமிருந்து கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தை மிகுந்த மலர்ச்சியுடன் மனோஜா என்னிடம் காட்டினாள்.

'அன்புள்ள மனோஜாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. நீ எங்கள் வீட்டுக்குப் போய் அம்மாவைப் பார்த்துவிட்டு வந்ததைப் பற்றி மிக்க மகிழ்ச்சி. என் தாயாரைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? என்ன பேசினீர்கள்? உன்னிடம் அம்மா என்ன என்ன கேட்டார்கள்? என் தாயாருக்கு உன்னைப் பிடித்துவிட்டது. நீ மாத்வப் பெண்ணாக இல்லையே என்ற ஒரே ஒரு குறைதான் அவர்களுக்கு.

உன் தகப்பனார் என் கடிதத்தைப் பார்த்ததிலிருந்து திரும்பவும் நோய்வாய்ப்பட்டிருப்பதை அறிந்து மிகவும் வருந்துகிறேன். உன் தகப்பனார் எப்போது நம் விஷயத்தைச் சொன்னாலும் அப்போதெல்லாம் நோய்வாய்ப்படுவார் என்று இதிலிருந்து தெரிகிறது. ஆயினும் எவ்வளவு விரைவில் நம் திருமணம் நடக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது. உன் தகப்பனாரை எப்படியாவது சரிக்கட்டவும்.

என்னைப் பொறுத்தவரை நான் பதிவுத் திருமணத்துக்குக்கூடத் தயாராக இருக்கிறேன். நீ எவ்வளவு விரைவில் முடிவெடுக்கிறாய் என்பதைப் பொறுத்தது நம் திருமணம். உனக்கும் வயசாகிறது. எனக்கும் வயசாகிறதல்லவா?''

கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்த நான் வழக்கத்தைவிட மனோஜாவின் முகம் அதிகமாக மலர்ந்திருந்ததன் காரணம் புரியாமல் அவளை ஏறிட்டுப் பார்த்தபோது அவள் சொன்னாள்—

''ஆனந்தி! பதிவுத் திருமணத்துக்குக்கூடத் தயாராக இருப்பதாகச் சொல்கிறவர் நிச்சயமாகத் திருமணம் எங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி நடப்பதற்குச் சம்மதிப்பார் அல்லவா?'' — மனோஜாவின் மகிழ்ச்சிக்குக் காரணம் விளங்கிற்று.

''சம்மதிப்பார் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. பதிவுத் திருமணத்துக்கே சம்மதிக்கிறவர் உங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி கல்யாணம் நடப்பதை அனுமதிக்கமாட்டாரா என்ன?'' என்றேன். மனோஜாவின் யோசனை எனக்கு முற்றிலும் பிடித்திருந்ததோடு அந்த ஏற்பாடு அவள் தந்தைக்கு ஓரளவுக்கு ஆறுதல் அளிக்கும் என்று தோன்றிற்று.

மறுநாளே மனோஜா சீதாராமனுக்குக் கடிதம் எழுதினாள். வழக்கம்போல் அதை என்னிடம் காட்டிவிட்டுத்தான் தபாலில் போட்டாள்.

சீதாராமன் பதில் நான்கு நாட்கள் கழித்து வந்தது.

'அன்புள்ள மனோஜாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. அதைப் பல தடவைகள் படித்த பிறகு என்னால் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடிந்தது. உனது கோரிக்கை ஒருதலைப்பட்சமானதாக இருக்கிறது. உன்னைத் தேர்ந்தெடுத்ததில் என் தாயாருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்பைப் பற்றி நீ கொஞ்சமும் நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. உனக்கு உன் தகப்பனார் மேல் அன்பு இருப்பதைப் போல் எனக்கும் என் தாயாரின் மேல் அன்பு உண்டு.

மகனின் விருப்பத்துக்காக இந்த அளவுக்குப் பெருந்தன்மையோடு என் தாயார் விட்டுக் கொடுத்திருக்கும்போது, சம்பிரதாய விஷயத்திலும் அவர்கள் முதுகில் குத்துவதற்கு நான் தயாராக இல்லை. எங்கள் வீட்டு வழக்கப்படி நம் திருமணம் நடப்பது ஒன்றுதான் நான் என் தாயாருக்கு அளிக்கக்கூடிய ஒரே ஆறுதல். உன் தகப்பனார் உனக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவில் பாதியாவது என் தாயார் எனக்கு முக்கியம் என்று நான் சொல்லிக் கொண்டால் நீ அதை மறுக்கமாட்டாய் என்று நம்புகிறேன். எனவே, சம்பிரதாய விஷயத்தில் நான் விட்டுக் கொடுப்பதற்கில்லை.

உன் விரைந்த பதிலை எதிர்பார்க்கிறேன்.'

''இந்தக் கடிதத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் ஆனந்தி?'' என்று அவள் கேட்டபோது என் மனத்தில் எழுந்த எண்ணங்களை நான் அவளிடம் தெரிவிக்கவில்லை.

''நான் என்ன நினைக்கிறேன் என்பது முக்கியமல்ல. நீ என்ன நினைக்கிறாய் என்பதுதான் முக்கியம்'' என்றேன்.

சில விநாடிகளுக்கு மௌனம் சாதித்த மனோஜா, ''ஆனந்தி! கொஞ்சம் யோசித்துத்தான் இந்தக் கடிதத்துக்குப் பதில் எழுத வேண்டும்'' என்றாள்.

''ஆமாம், ஆமாம். எதையும் யோசித்துச் செய்'' என்றேன்.

மனோஜா நன்கு யோசித்து எழுதிய கடிதத்துக்கு மறு தபாலில் சீதாராமனிடமிருந்து பதில் வந்துவிட்டது.

'அன்புள்ள மனோஜாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. உங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி திருமணம் நடப்பதற்கு நான் சம்மதிக்கவில்லை என்பதால் நீ நம் உறவுக்கே முற்றுப்புள்ளி வைக்கும் தொனி


3
சுவையான பாரெக்ஸ்
உணவு-இதனால் அனு
தினமும் உரிய புரதத்தை
உங்கள் குழந்தை
பெறுவது உறுதி.
1. பருப்புடன் பாரெக்ஸ
2 டேபிள்ஸ்பூன் பாசிப்பருப்பு
1/2 தேக்கரண்டி வெண்ணெய்
1 டேபிள்ஸ்பூன் பாரெக்ஸ்
பருப்பை நன்றாக வேகவைத்து, பருப்பு நீரிலேயே குழைவாக மசித்துக் கொள்ளவும். வெண்ணெயையும் பாரெக்ஸ் தூளையும் அதனுடன் சேர்க்கவும்
2. பழரசத்துடன் பாரெக்ஸ்
1 கோப்பை ஆரஞ்சு அல்லது சாத்துக்குடி பழரசம்
2 தேக்கரண்டி துருவிய ஆப்பிள்
1 தேக்கரண்டி சர்க்கரை
2 டேபிள் ஸ்பூன் பாரெக்ஸ்
பழரசத்துடன் சர்க்கரை சேர்த்து, ஆப்பிள் துருவலையும் பாரெக்ஸ்தூளையும் சேர்க்கவும் நன்றாகக் கலந்து, குழந்தை குளித்தவுடன், காலை பதினொரு மணிக்கு முற்பகல் உணவாகக் கொடுக்கவும்.
3. முட்டையுடன் பாரெக்ஸ்
1 முட்டை
1 உருளைக் கிழங்கு, சிறியது
1 1/2 டேபிள்ஸ்பூன் பாரெக்ஸ்
1 டேபிள்ஸ்பூன் பால்
முட்டையை மிக லேசாக வேகவைக்கவும். வேகவைத்த உருளைக் கிழங்கை நன்றாக மசித்து முட்டையுடன் கலக்கவும். பால், பாரெக்ஸ் தூள் சேர்க்கவும்.
வளரும் குழந்தைக்கு உகந்தது பாரெக்ஸ்
வாய்க்கினிதாய் வழங்குங்கள் அதனை
பாரெக்ஸ்®
—க்ளாக்ஸோ தயாரிப்பு
சீரான உடல் வளர்ச்சிக்கு ஏற்ற
சரியான புரதச் சத்து கொண்டது
FAREX
பாரெக்ஸ் புத்தகத்தை இலவசமாகப் பெற, 25 பை. தபால் தலை இணைத்து, தபால் பெட்டி 16553, 'வொர்லி' பம்பாய் என்ற முகவரிக்கு எழுதுக.
CMGF-25-200 Tam

யில் எழுதியிருந்ததைக் கண்டு ஆச்சரியமும் வேதனையும் அடைந்தேன்.

பதிவுத் திருமணத்தைப் பற்றிப் பேச்செடுத்ததே நான்தான். மறுக்கவில்லை. என் தாயார் பதிவுத் திருமணத்துக்கெல்லாம் சம்மதிக்கமாட்டார் என்று நினைக்கிறேன். கூடிய விரைவில் அங்கு வந்து என் தாயாருடன் இது பற்றிப் பேசலாம் என்று இருக்கிறேன்.... அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதையும் கேட்டுவிட்டு நானும் நீயும் சந்தித்துப் பேசலாம் என்று நினைக்கிறேன். மற்றவை நேரில்......''

இரண்டு நாட்களுக்கெல்லாம் சீதாராமன் புறப்பட்டு வந்தார். வந்த இரண்டாம் நாள் தொலைபேசியின் வாயிலாக அவரது தங்கையின் மூலமாக மனோஹராவுடன் பேசினார்.

மறு நாள் அலுவலகத்தில் மனோஹராவைப் பதினொரு மணிக்குப் பார்த்துப் பேசினேன். அவர்கள் பேச்சு நல்லபடியாக முடியவில்லை என்று சொன்னாள்.

'' என்னதான் சொன்னார் ?''

'' 'பதிவுத் திருமணத்துக்கு அம்மா சம்மதிக்கவில்லை. சாஸ்திர சம்பிரதாயங்களை மீறிப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளுவது அவர்களுக்கு அருவருப்பாக இருக்கிறதாம். அதனால், 'எவளேயோ இழுத்துக் கொண்டு வருகிற மாதிரி வந்தால் ரொம்ப அசிங்கம். நான் இதற்குச் சம்மதிக்கவே முடியாது' என்கிறார்கள். அப்புறம் உங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி — திருமணத்தை நடத்துவதற்கு அனுமதி கேட்டேன். அதற்கு என் தாயார் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'ஐயர் வீட்டுச் சம்பிரதாயப்படி உன் கல்யாணம் நடந்தால் நான் கல்யாணத்துக்கு வரமாட்டேன்' என்கிறார்கள். இதிலே இன்னொரு சிக்கலும் இருக்கிறது. எங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி நடந்தாலே கூட என் அண்ணி — அவளும் என் மூத்த சகோதரனும் தான் மணையில் உட்கார்ந்து நம் திருமணத்தை நடத்திக் கொடுக்க வேண்டியவர்கள் — நீ மாத்வப் பெண் இல்லை, ஐயர் வீட்டுப் பெண் என்பதாம் இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்க மறுக்கக்கூடும். இந்த நிலையில் உங்கள் வீட்டுச் சம்பிரதாயம் என்றால் என் தாயாரும் வராமல், என் அண்ணனும் அண்ணியும் கல்யாணத்தை நடத்திக் கொடுக்க வராமல், அநாதையின் கல்யாணம் மாதிரி என் கல்யாணம் நடக்கும். இதற்கு நீ சம்மதிப்பாயா? என் பக்கத்து மனிதர்கள் யாருமே வராமல், ஓர் அநாதைக்கு வாழ்க்கைப்படுவது போல் வாழ்க்கைப்படுவதற்கு நீ விரும்புகிறாயா ?' என்று என்னைக் கேட்டார்......''

''திருமணங்கள் பிள்ளை வீட்டார் சம்பிரதாயப்படி நடத்தப்படுகின்றன என்று அவர் தம் சம்மதியாமைக்குச் சப்பைக் கட்டுக் கட்டிய போதுதான் என்னால் தாங்கவே முடியவில்லை'' என்று மனோஹரா வாய்விட்டுச் சிரித்தாலும் சிரித்த சிரிப்பில் வெறுப்பே விஞ்சி நின்றது.

''அதற்கு நீ என்ன சொன்னாய்?''

''நான் என்ன சொல்லட்டும்? என்னால் பேசவே முடியவில்லை. இவர் இப்படியெல்லாம் கோழைவழியில் கட்டியாடுவார் என்று நான் துளியும் நினைக்கவில்லை.....''

''கடைசியில் என்னதான் முடிவு செய்தீர்கள் ?''

'' நான் ஒன்றுமே குறுக்கே பேசாமல், பேசி முடிக்கட்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். கடைசியாக இன்னொன்று சொன்னார், பார். அதுதான். என்னை அப்படியே தாக்கிப் போட்டுவிட்டது.''

''என்ன சொன்னார் ?''

''திருமணத்தைத் தங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி நடத்த வேண்டியதற்கு அவர் சொன்ன இன்னொரு காரணம், எங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி எங்கள் திருமணம் நடந்தால், அது தன் தங்கையின் திருமணத்தையும் இன்னும் சில ஆண்டுகள் கழித்து நடக்கவிருக்கும் அவருடைய அண்ணன் மகளுடைய கல்யாணத்தையும் பாதிக்கும் என்றாரே — பார்க்கலாம்......''

'' என்னது ? அவருடைய அண்ணன் மகளுடைய திருமணத்தைப் பாதிக்குமாமா ? ரொம்ப அழகாயிருக்கிறதே நியாயம்? என்றோ நடக்கவிருக்கும் அவருடைய அண்ணன் மகளின் கல்யாணத்தை இந்தச் சிறு சம்பிரதாய மீறல் பாதிக்கும் என்றால், உடனடியாகக் கல்யாணம் செய்தாக வேண்டிய வயசுகளில் உள்ள உன் தங்கைகளின் கதி என்னாகிறது ? நீ செய்வது பெரிய சம்பிரதாய மீறலாயிற்றே? அதாவது கலப்பு மணத்தைச் சொல்லுகிறேன்.....''

''நீ இப்போது கேட்கிறாயே, அதைத்தான் என் மனசாட்சியும் என்னைக் கேட்டது..... 'கொஞ்சம் முயன்றால் நம் தங்கைகளுக்கெல்லாம் மாப்பிள்ளைகள் தேடிவிடலாம்' என்று இதுகாறும் நினைத்துக் கொண்டிருந்த என் நம்பிக்கையில் அவருடைய இந்தப் பேச்சு மண்ணை வாரிப் போட்டுவிட்டது. அனந்தி, இம்மாதிரியான கலப்புத் திருமணங்கள் பதிவு முறைப்படி நடப்பதுதான் நல்லது. பிள்ளை வீட்டார் சம்பிரதாயமும் வேண்டாம்,



''சட்டையில் சாம்பார் கறை தெரியுதே உண்மையைச் சொல்லுங்கள். ஆபீஸிலிருந்து வரும் போது உடுப்பி ஓட்டலா? ஆரிய பவனா? எந்த ஓட்டலில் 'பார்ட் டைம்' வேலை பார்த்தீர்கள்?''

பெண் வீட்டார் சம்பிரதாயமும் வேண்டாம். இல்லையா? அதற்கும் உடன்படமாட்டார் போலிருக்கிறது.... பிற்பகல் சாப்பாட்டு வேளையின் போது திரும்பவும் வருவதாகச் சொல்லிவிட்டு எழுந்து போனார்.... பிற்பகல் அவர் வருவதற்குள் நான் என்னுடைய பதிலை அவருக்குச் சொல்லியாக வேண்டும்."

"என்ன சொல்லப் போகிறாய்?"

"பேசுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கிறதோ இல்லையோ ? எனவே நான் சொல்ல நினைப்பதையெல்லாம் கடிதத்தில் எழுதிக்கொடுத்து விடலாமா என்றிருக்கிறேன்."

சொன்னபடியே மனோஜா பிற்பகல் சுமார் பன்னிரண்டு மணிக்கு, தான் சீதாராமனுக்கு எழுதி முடித்த கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னாள்.

'அன்புள்ள சீதாராமன் அவர்களுக்கு,

இன்று காலை நமக்குள் நடந்த பேச்சை நினைத்துப் பார்க்கிற போது நாம் இருவரும் ஒருவரை ஒருவர் மணந்துகொள்ள விரும்பியிருக்க வேண்டாமே என்றுதான் தோன்றியது. எனது இந்தக் கடிதம் கசப்பு மாத்திரையைப் போல் கைத்தால் அதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

வளவளவென்று எதையும் எழுதிக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. திருமணம் எங்கள் வீட்டுச் சம்பிரதாயப்படி நடந்தால், அது உங்கள் அண்ணன் மகள் திருமணத்துக்குச் செல்லாம்கூடக் குறுக்கே நிற்கும் என்ற உங்களது கூற்றைக் கேட்ட பிறகு சிந்திக்கும் திறனும் நேர்மை உணர்வும் படைத்த எந்தப் பெண்ணும் செய்யக்கூடிய முடிவை நானும் செய்துள்ளேன். அதாவது உங்களை மணக்கும் எண்ணத்தைக் கைவிடுவது என்பதுதான் அது.

ஆண்பிள்ளைகளோடு ஆபாசமாகப் பேசிச் சிரிக்கிறவள் என்றெல்லாம் நாலு பேர் என்னைப் பற்றிப் பேசியதைக் கேட்ட பிறகும் என்னை மணக்க முன்வந்ததற்கு என் மனமார்ந்த நன்றி.'

நான் கண் கலங்கியபடி கடிதத்தை அவளிடம் திருப்பிக் கொடுத்தேன்.

"நன்றாக யோசித்துவிட்டுத்தானே கடிதம் எழுதியிருக்கிறாய்?"

"இதற்கு மேல் யோசிப்பதற்கு ஒன்றுமேயில்லை. இனி மேலும் தயக்கமோ யோசனையோ ஏற்பட்டால் எனக்குத் துளியும் மூளை கிடையாது என்றுதான் அர்த்தம்...." என்றாள் மனோஜா.

அன்று மாலை வீட்டுக்குப் புறப்படும் நேரத்தில் அலுவலகத்தில் நான் மனோஜாவைச் சந்தித்த போது, "பிற்பகல் நீ எங்கள் பிரிவை விட்டுப் போனதற்குப் பிறகு வந்தார். கடிதத்தை அவரிடம் கொடுத்து விட்டேன்....." என்று தெரிவித்தாள் மனோஜா.

"ஏதாவது சொன்னாரா ?"

"ஏன் கடிதம் எழுதிக் கொடுக்கிறாய் ? நான்தான் நேரிலேயே வந்திருக்கிறேனே?" என்று கேட்டார்.

" ஒரு வேளை பேசுவதற்கு முடியாமல் ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டால் என்ன செய்வது என்றுதான் கடிதமாகவே எழுதி விட்டேன் என்று சொன்னேன்....."

"கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறேன் என்பதைப் பற்றி விசாரித்தார். 'நீங்களே வீட்டுக்குப் போய்ப் படித்துப் பாருங்கள்' என்று சொன்னேன். சில விநாடிகள் ஒன்றும் பேசாமல் நின்றார். பிறகு என்ன நினைத்துக் கொண்டாரோ என்னவோ, ஒன்றுமே சொல்லாமல் — போய்விட்டு வருகிறேன் என்று கூடச் சொல்லாமல் — விருட்டென்று போய் விட்டார்.... ஆனந்தி. என் இந்த விவகாரம் இந்த மாதிரி முடியும் என்று நான் எதிர் பார்க்கவேயில்லை...."

மனோஜாவின் குரல் உடைந்து போயிற்று. வெகு நாட்கள் கழித்துப் பார்க்கிறவளைப் போல் நான் அவளை உற்றுப் பார்த்தேன். கண்களுக்குக் கீழே கருமை சூழ்ந்திருந்தது. அவள் இரவில் நிம்மதியாகத் தூங்குவதில்லை என்பதை உணர்த்தியது.

இப்படியாக மனோஜாவுக்கும் சீதாராமனுக்குமிடையே ஏற்பட்ட காதல் கருகிப் போயிற்று....

மனோஜாவின் கடிதம் எத்தகைய விளைவைச் சீதாராமனிடம் ஏற்படுத்தியிருக்கும் என்பதைப் பற்றி என்னால் ஒன்றும் ஊகிக்க முடியவில்லை. அவர் மறுபடியும் அவளைத் தேடி வருவார் என்று மட்டும் எனக்குத் தோன்றவில்லை. நான் நினைத்தது சரிதான் என்பதை வலியுறுத்தும் வகையில் சீதாராமனிடமிருந்து மனோஜாவுக்குச் சுமார் ஒரு மாதம் வரை கடிதம் இல்லை.

இதற்கிடையில் மனோஜாவின் அப்பா உடல் நிலையில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டது..

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ராமசுப்பன் ஒரு நாள் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். மனோஜாவின் தம்பி ராமு ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று எங்கள் வீட்டுக்கு வந்து, என்னைக் கையோடு அழைத்து வருமாறு தன் அப்பா கூறியனுப்பியதாகச் சொன்னபோது எனக்கு வியப்பாகஇருந்தது. எதற்காக இருக்கும் என்று என்னால் ஒன்றும் ஊகிக்க முடியவில்லை. மனோஜாவின் விஷயமாகத்தான் என்று ஊகிக்க முடிந்ததே ஒழிய எதற்காக என்று திட்ட வட்டமாக ஊகிக்க முடியவில்லை.

வழியில் ராமுவிடம், "அப்பா எதற்காக என்னை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார் என்பது உனக்குத் தெரியுமா, ராமு?" என்று கேட்டேன்.

"சரியாகத் தெரியவில்லை அக்கா. மனோஜாவின் விஷயமாக இருக்குமென்று நினைக்கிறேன் !"

"மனோஜா வீட்டில் இருக்கிறாளா?"

"இல்லை, எங்கோ வெளியில் போயிருக்கிறாள். சினிமாவுக்குப் போயிருக்கிறாள் என்று நினைக்கிறேன்."

மேற்கொண்டு நான் ராமுவிடம் ஏதும் கேட்கவில்லை.

நான் மனோஜாவின் வீட்டை அடைந்த போது, ராமசுப்பன் வாசலில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர், "வாம்மா, ஆனந்தி!" என்று என்னை வரவேற்றவாறு

எழுந்து உள்ளே சென்றார். நானும் ராமு வின் பின்னால் அவரைத் தொடர்ந்தேன்.

''இப்போது உங்கள் உடம்பு எப்படி இருக்கிறது மாமா?'' என்று கேட்ட என்னை உட்காரச் சொன்ன ராமகப்பன் தானும் எனக்கு எதிரில் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

''இப்போது என்னவோ தேவலை அம்மா! ஆனாலும் இருதயம் சம்பந்தப்பட்ட நோய் பார், எமன் எப்போது வேண்டுமானாலும் வரலாம். நான் போன பிறகு இந்தக் குடும்பத்தை ராமு கவனித்துக் கொள்ளுவான் என்றுதான் நம்பிக் கொண்டிருக்கிறேன்... போகட்டும் நான் உன்னைக் கூப்பிட்டு அனுப்பிய விஷயத்துக்கு வருகிறேன். இரண்டு நாட்களுக்கு முன் நான் மனோஜாவின் திருமண விஷயமாக அவனோடு பேசிப் பார்த்தேன்... அந்தப் பையன் — அவன் பேரென்ன? சீதாராமன்தானே? அவனையே அவள் மணந்து கொள்ளலாம் என்று சொன்னேன்.''

''அப்படியா?''

''ஆமாம். மனோஜா உன்னிடம் சொல்லவில்லையா?''

''நான் ஒரு வாரமாக விடுமுறையில் இருக்கிறேன்.''

''நானே இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன் என்று ஆச்சரியப்படுகிறாயா? ரொம்பயோசித்த பிறகுதான் முடிவுக்கு வந்தேன். சீதாராமன் வந்து போனதற்குப் பிறகு மனோஜாவும் ரொம்ப இளைத்துப் போய்விட்டாள். தவிர, ஆழ்ந்து யோசித்தபோது, இத்தனை வயசுக்குப் பிறகும் — அவளுக்கு இருபத்தெட்டு வயசாகி விட்டதே — ஒரு பெண்ணின் திருமணத்தில் குறுக்கிடுவதற்கு ஒரு தகப்பனுக்கு என்ன உரிமை இருக்க முடியும் என்ற கேள்வி தான் எழுந்தது. காலாகாலத்தில் அவளுடைய திருமணத்தை முடித்திருக்க வேண்டிய நான், ஒரு தகப்பனுக்குரிய கடமையில் தவறிவிட்டு, அவளைத் தேடி வலிய வரும் வாழ்க்கையை — அவள் மனசுக்குப் பிடித்த ஒருவரோடு அவள் வாழ விரும்பும் வாழ்க்கையை — வாழ விடாமல் செய்ய நினைப்பது பொறுக்கி எடுத்த அநாகரிகமல்லவா? அது ஒரு மாதிரியான சுயநலம்தானே? கடமையைச் செய்யத் தவறிய தகப்பனுக்குப் பெண்ணின்மேல் எந்த விதமான உரிமையும் இருக்கக்கூடாது அல்லவா?''

ராமகப்பனின் கண்கள் கசிந்தன. உணர்ச்சி வசப்பட்டிருந்ததால் அவர் குரல் சற்றே அதிர்ந்தது. எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. விஷயம் இப்படி ஒரு திருப்பத்தை அடைந்திருக்கும் என்பது நான் சிறிதும் எதிர்பாராத ஒன்றாகும். மனோஜா கூட எதிர்பார்த்திருக்க மாட்டாள். நடந்ததையெல்லாம் விவரமாக மனோஜாவின் வாயிலாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத வரை இந்த விஷயத்தில் நான் தலையிட்டுப் பேசுவதோ, சீதாராமனுக்கும் மனோஜாவுக்குமிடையே நடந்த தகராறைப் பற்றி ராமகப்பனிடம் பேசுவதோ எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. மனோஜா தான் அவரை மணக்கும் நினைப்பைக் கைவிட



பெட்டிக்குள் என்ன?

இஸ்ரேல் நாட்டின் முன்னாள் பிரதமர் பென் கூரியன் வெளியில் எங்கு சென்றாலும், எந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் கையில் ஒரு பூட்டிய பெட்டியுடன்தான் காட்சியளிப்பார்.

பிரதமரின் பெட்டியைப் பற்றி எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் சந்தேகம் ஏற்பட்டது. பிரதமர் தமது பதவியை வைத்துத் தினந்தோறும் பெருந் தொகையைத் தகாத வழியில் சம்பாதித்து அந்தப் பெட்டியில் வைத்து எடுத்துச் செல்வதாக எதிர்க் கட்சித் தலைவர்கள் கருதினார்கள். ஆகவே அவர்கள் பாராளுமன்றம் கூடியபோது, பெட்டியைத் திறந்து காட்ட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

பிரதமர் அமைதியுடன் எழுந்து பெட்டியைத் திறந்தார். அனைவருடைய கண்களும் ஆச்சரியத்தால் விரிந்தன. பெட்டிக்குள் ஒரு கம்பும், ஒரு பழைய கோட்டும் மட்டும்தான் இருந்தன. பிரதமர் பேசினார்:

''நான் சிறுவனாக இருக்கும்போது ஆடு மேய்த்து வாழ்க்கை நடத்தினேன். அப்போது நான் உபயோகப்படுத்தியவைதாம் இந்தக் கோலும் கோட்டும். பெரியவனாக வளர்ந்த பின் அரசியலில் ஈடுபட்டேன். காலம் என்னை ஆசிர்வதித்தது. மக்கள் என்னை வாழ்த்தினார்கள். நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்றேன். பதவி மோகத்துக்கும் அதிகார போதைக்கும் நான் அடிமையாகிவிடக் கூடாதென்றும், ஏழைமையில் உழலும் மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபட மறந்துவிடக் கூடாதென்றும், எனது கடந்த கால நிலைமையை நான் என்றும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினாலும், ஒரு வேளை மீண்டும் எனக்கு இந்தக் கோலும் கோட்டும் தேவைப்படும் நிலை ஏற்பட்டால் யாரிடமும் இரவல் வாங்க வேண்டாம் என்ற உணர்வோடும்தான் இவைகளைப் பெட்டியில் வைத்து என் கையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறேன்!''

தூய்மையே உருவான அவரைச் சந்தேகித்தவர்கள் தலைகுனிந்தார்கள். -'வேமுதி'

நேர்ந்த கதையை அவரிடம் சொல்லியிருக்க மாட்டாள்.

''சீதாராமன் ரொம்ப நல்லவனாகத் தோன்றினான்... அன்று என்னோடு வந்து பேசினான்....அது உனக்குத் தெரியுமல்லவா?''

''தெரியும். மனோஜா சொன்னாள்.''

''அன்று என்னோடு வந்து பேசியபோது ரொம்பப் பொறுமையாக என்னோடு வாதாடினான். நான் பொறுமை இழந்து, 'கெட்-அவுட்' என்று கத்தியும் என் கோபத்தால் பாதிக்கப்படாமல் சாந்தமாகப் பேசினான். எனக்கு என்ன தோன்றுகிறது, தெரியுமா? 'அப்பாவுக்கு இஷ்டமில்லை' என்பதால்தான் மனோஜா அவனை நிராகரித்து விட்டாள் என்று எனக்குத் தோன்றுகிறது. வேறு காரணமே இருக்க முடியாது. என்னுடைய

மூடத்தனமான விருப்பு வெறுப்பு இத்தமாதிரி என் பெண்ணின் வாழ்க்கையைப் பாதித்து விட்டதற்காக நான் இப்போது எவ்வளவு வருந்துகிறேன் என்று யாருக்குமே தெரியாது. எனக்குச் சம்மதமில்லை என்பதால் அவனை உதறி விட்டாள். இப்போது மறுபடியும் எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனோடு சரிசெய்து கொள்வது என்று அவள் தயங்குகிறாள் என்று நினைக்கிறேன்...''

ராமகப்பனின் விழிகள் கண்ணீரில் மிதந்தன. அந்த முதியவர் கண் கலங்கியதைப் பார்த்தபோது என்னை என்னவோ செய்தது.

மேல் துண்டால் கண்களைத் தேய்த்தவாறு ''நீ கொஞ்சம் அவளோடு பேசிப் பாரேன், அம்மா. நானே அந்தப் பையனுக்கு எழுதலாமா என்றுதான் பார்த்தேன். ஆனால் 'நான் அவரை மணந்து கொள்ளும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டேன்' என்று அவள் சொன்ன பிறகு அவளுடைய அனுமதி இல்லாமல் நானாக அவனுக்கு எழுதுவது சரியாகத் தோன்றவில்லை. நீ கொஞ்சம் அவளைக் கேட்டுப் பாரேன். அவள் ஆசைப்பட்ட இந்தக் கல்யாணம் நடக்காவிட்டால் எனக்கு நிம்மதியான சாவு கிடையாது. என் நெஞ்சுகூட வேகாது, அம்மா, நெஞ்சுகூட வேகாது...'' என்று அவர் அரற்றியதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''அதற்குத்தான் உன்னைக் கூட்டிவருமாறு ராமுவை அனுப்பினேன். மனோஹராவிடம் பேசிப் பார்க்கிறாயா? நான் முழு மனதோடுதான் அவள் அந்தப் பையனையே மணந்து கொள்ள அனுமதி அளித்திருக்கிறேன் என்பதை அவளுக்குக் கொஞ்சம் எடுத்துச் சொல்கிறாயா, அம்மா? என் மனம் எவ்வளவு சங்கடப்படுகிறது என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவளும் அந்தப் பையனும் மணந்து கொண்டால்தான் என் மனசு சமாதானமடையும். நீ எப்படியாவது அவளைச் சம்மதிக்கச் செய். நீ எடுத்துச் சொன்னால் அவள் கட்டாயம் கேட்பாள்...''

''ஆகட்டும், மாமா. சொல்கிறேன்.''

''நீ என்றைக்கு அலுவலகத்தில் சேர வேண்டும்?''

''நாளைக்குச் சேர வேண்டும்.''

''அப்படியானால் நாளைக்கே நீ மனோஹராவைச் சந்தித்துப் பேசி எப்படியாவது திருமணத்துக்கு அவளுடைய சம்மதத்தை வாங்கிவிடு....''

''ஆகட்டும்...''

எங்கள் உரையாடலின்போது ராமு அருகில்தான் இருந்தான். வீட்டில் எங்கள் மூவரைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை.

அவரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினேன். வழியெல்லாம் மனோஹராவின் காதல் விவகாரத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் வழக்கம் போல் மனோஹராவும் நானும் சுமார் பத்தரை மணிக்குக் கான்டீனுக்குப் போனோம்.

''நேற்று வீட்டுக்கு வந்திருந்தாயாமே?''

''ஆமாம். உன் அப்பா என்னைக் கையோடு அழைத்துக்கொண்டு வரச் சொல்லி ராமுவை அனுப்பியிருந்தார். நடந்ததையெல்லாம் சொன்னாரா?''

''இல்லை. தாம் உன்னை வரவழைத்ததாகவே சொல்லவில்லை. நீ வந்திருந்ததாக மட்டும் சொன்னார். நான் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் சினிமாவுக்குப் போயிருந்தேன்.''

''தெரியும். ராமு சொன்னான்.''

நான் எங்களுக்குள் நடந்த உரையாடலை அப்படியே அவளுக்குத் திருப்பிச்சொன்னேன்.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு மனோஹரா பெருமூச்செறிந்தாள்.

''ஆனந்தி! என்ன துரதிருஷ்டம் பார்த்தாயா? அப்பாவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் மனமாற்றம் அப்போதே ஏற்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? எங்களுக்குள் வீண் தகராறு ஏற்படாதிருந்திருக்கும் அல்லவா? எப்படியோ, கல்யாணம் என்ற ஒன்று ஆகிவிட்டிருக்கும். அதற்குப் பிறகு எது நடந்தாலும் — எங்களுக்குள் ஒத்துப் போனாலும் போகாவிட்டாலும் ஏதோ கல்யாணம் என்ற ஒன்று நம் மகளுக்கு ஆகிவிட்டது என்ற திருப்தி அப்பாவுக்காவது மிஞ்சியிருக்கும். இப்போது அதுவும் இல்லை. இனிமேல் அவரோடு சமரசம் செய்துகொள்வதென்பது முடியாத காரியம். இனி எது நடந்தாலும் — நீ சொன்ன மாதிரி என் நன்மைக்காகத்தான் இருக்கும். முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்கள். அது என் விஷயத்தில் மிகவும் சரியாகி விட்டது...'' என்று மனோஹரா மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டு போனாள்.

''உண்மைதான்.''

''ஆனந்தி, அவர் இதுவரை என்னிடம் நடந்து கொண்டு வந்திருக்கிற முறையை எண்ணிப் பார்க்கும்போது, 'இவர் எதற்காக என்னை நேசித்தார்?' என்ற கேள்விதான் என்னுள் எழுகிறது. 'இவருக்காவது என்மேல் அன்பாவது' என்றுதான் தோன்றுகிறது.. அன்பின் அடிப்படையே நம்பிக்கைதானே? இது ஒரு பெரிய படிப்பினை. வெளிக்குத் தெரிகிற மனிதர்கள் வேறு, உள்ளே இருக்கிற மனிதர்கள் வேறு என்பதை அறிவதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பு இது, ஆனந்தி. இனி நான் இந்த மாதிரி ஏமாந்தே போக மாட்டேன். யாரையும் நம்ப மாட்டேன். 'காதல்' என்ற உணர்வுக்கே நான் இத்துடன் தலை முழுகி விட்டேன்...'' — மனோஹராவின் உதடுகள் துடித்தன.

''மனோஹரா! சீதாராமனோடு நேர்ந்த மனக் கசப்பை மறந்து நீ அவரோடு சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கவில்லை....ஆனால் உன் அப்பாவை உத்தேசித்து — அவர் அன்று என்னோடு பேசிய போது எப்படிக் கண்ணீர் சிந்தினார் தெரியுமா? — வேறு யாரையாவது நீ சீக்கிரம் மணந்து கொள்ள வேண்டும், மனோஹரா...''

''ஆனந்தி! அதுமட்டும் என்னால் முடியாது. இனி காதல் என்ற சொல்லுக்குக்கூட என் வாழ்க்கையில் இடமில்லை. காதலுக்கும்

கல்யாணத்துக்கும் என்னைப் பொறுத்தவரை நான் ஒரேயடியாகத் தலை முழுகியாகி விட்டது. எனக்கும் அவருக்கும் ஏதோ கருத்து வேற்றுமை என்று வேண்டுமானால் நீ அப்பாவிடம் சொல்லிக் கொள். அல்லது மறுபடியும் அப்பா இந்தப் பேச்சை எடுத்தால் நானே சொல்லிக் கொள்ளுகிறேன்.''

''சரி, போகட்டும். சீதாராமன் தானாகவே உன்னோடு சமரசத்துக்கு வருகிறார் என்று வைத்துக் கொள். அப்போது....?''

''அவர் வரமாட்டார். அப்படியே வந்தாலும் நான் உடன்பட மாட்டேன். அவரை நினைத்தாலே என் மனத்தில் இப்போது தோன்றுவதெல்லாம் பயம்தான். என் மனத்தில் பயத்துடனும், அவர் மனத்தில் சந்தேகத்துடனும், நாங்கள் மணந்து கொள்ளவே கூடாது, ஆனந்தி. நடந்தது எதையும் பாராட்டாமல் நாங்கள் மணந்து கொண்டாலும், எங்கள் திருமணம் தோல்வியில் தான் முடியும்.''

என்னால் மேற்கொண்டு ராமசுப்பனின் சார்பில் அவருக்கு அளித்திருந்த வாக்குப்படி வாதாட முடியவில்லை.

இது நடந்ததற்குப் பிறகு ஒரு நாள் மனோஹரா, ''ஆனந்தி! சீதாராமன் இங்கே மதுரைக்கு வந்திருக்கிறார் போலிருக்கிறது. அவருடைய கடைசித் தங்கைக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கும், அதற்காக வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். தம் தங்கையின் திருமண அழைப்பிதழை அப்பாவின் பேருக்குத் தபாலில் அனுப்பி யிருக்கிறார். எனக்கும் அவருக்கும் உள்ள உறவு இற்றுப்போய், அறுந்துவிட்ட நிலையில் என் தகப்பனருக்கு அவர் எதற்காகத் தம் தங்கையின் திருமண அழைப்பிதழை அனுப்ப வேண்டும்? ஏற்கெனவே ஒரு வாரமாக மறுபடியும் நோய் வாய்ப்பட்டுள்ள அப்பா இவருடைய கடிதத்தைப் பார்த்ததிலிருந்து ரொம்ப மோசமாகி விட்டார். 'நான் போய் அந்தப் பையனைப் பார்த்துப் பேசுகிறேன். நீ எனக்கு விருப்பமில்லை என்பதனால்தான் அவனை வேண்டாம் என்கிறாய். எனக்குத் தெரியும். அவனுடைய விலாசத்தைச் சொல்லு' என்று அவர் தங்கையின் திருமண அழைப்பிதழைப் பார்த்ததிலிருந்து குதியோ குதி யென்று குதித்துக் கொண்டிருக்கிறார். இந்தச் சங்கடத்துக்கு நான் என்ன செய்யட்டும்? 'அப்படியொன்றும் இல்லை, அப்பா. எங்களுக்குள் ரொம்பப் பெரிய விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் எங்களுக்குள் ஒத்துப் போகவில்லை. நான் அவரை மணந்து கொள்ளக் கூடாது என்று தீர்மானித்ததற்கு அதுதான் காரணம்' என்று படித்துப் படித்துச் சொல்லியும் அப்பா கேட்பதாக இல்லை. நான் போய் சொல்வதாக நினைக்கிறார்'' என்றாள்.

மனோஹராவுக்கும் எனக்கும் இடையே மேற்கண்ட பேச்சு நடந்து சுமார் ஒரு வாரம் கழித்து மனோஹரா ஒரு நாள் அலுவலகத்துக்கு வரவில்லை. தன் அப்பாவுக்கு மிகவும் உடம்பு சரியில்லாமற் போய் அவரை மருத்துவ விடுதியில் சேர்த்திருப்பதாகத் தம்பி ராமு அலுவலகத்துக்கு வந்து தகவல் சொன்னான்.



மகளிர் பஸ் நடத்துனர்: மயிலாப்பூரிலிருந்து பாரீஸ், பாரீஸிலிருந்து மயிலாப்பூர் இப்படி என் பஸ்ஸிலேயே ஆறு முறை வருகிறீர்களே, என்ன சங்கதி?

''நான் போட்டிருக்கும் புது மாடல் கொண்டையை இதுவரை 1024 பெண்கள்தானே பார்த்திருக்கிறார்கள்!''

''ஆனந்தி அக்கா! நான் நேரே எர்ஸ்கின் ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறேன். அப்பாவுக்கு ரொம்பவும் உடம்பு சரியாக இல்லை. சீதாராமனிடமிருந்து அவர் தங்கையின் கல்யாணக் கடிதம் வந்ததிலிருந்தே அப்பாவுக்கு உடல்நிலை கோளாறாகி விட்டது. ஆஸ்பத்திரியில் அப்பாவுக்கு இன்று காலை முதல் 'டெலிரியம்' வந்து, பிதற்றிக் கொண்டிருக்கிறார்.''

''ஆஸ்பத்திரியில் நீதான் அப்பாவுக்குத் துணையாக இருக்கிறாயா?''

''ஆமாம், சீதாராமனுக்கும் மனோஹராவுக்கும் எந்தத் தகராறும் இல்லை, தமக்குப் பிடிக்கவில்லை என்றுதான் மனோஹரா அவரைத் திருமணம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள் என்று அப்பா நினைக்கிறார். 'போடா, போய்ச் சீதாராமனை அழைத்துக் கொண்டு வா' என்று தொணதொணத்துக்கொண்டே யிருக்கிறார். உங்களுக்கு அவருடைய விலாசம் தெரிந்தால் கேட்டுக் கொண்டு போகலாம் என்றுதான் வந்தேன்...''

''மனோஹராவைக் கேட்டாயா? என்ன சொல்லுகிறாள்?''

''தனக்கும் சீதாராமனுக்கும் இடையே சரிக்கட்ட முடியாத அளவுக்கு உறவு சீர்கெட்டுப் போய்விட்டதாகவும் எனவே அவரைக் கூப்பிடக் கூடாது என்றும் ஒற்றைக் காலாய் நிற்கிறாள்.''

''அப்படி யிருக்கும்போது நீ போய் அவரைக் கூப்பிடுவது சரியில்லை, ராமு!''

''அவர்களுக்குள் அப்படி என்னதான் நடந்தது? மனோஹரா ஒன்றுமே சொல்ல மாட்டேன் என்கிறாள். உங்களுக்கு ஏதாவது தெரியுமா, அக்கா?''

''...எனக்கு ஒன்றும் தெரியாது, ராமு. அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கிற பிளவு மிகவும் மோசமானது என்று அவன் பேசுகிறதிலிருந்து தெரிகிறது. இல்லாவிட்டால் அப்பா மனசு மாறி இவ்வளவு தூரம் இறங்கி வந்திருக்கும்போது அவன் ஏன் மறுக்க வேண்டும்? அதையும் நாம் யோசிக்கவேண்டும். அப்பா நல்ல நினைவுடன் இருக்கும்போது, மனோஹரா சீதாராமனிடமிருந்து விலகியதற்கு அவர் எந்த வகையிலும் காரணம் இல்லை என்று நான் சொன்னதாக உன் அப்பாவிடம் சொல்லு. நான் இன்று மாலை ஆஸ்பத்திரிக்கு வந்து அவரைப் பார்த்துப் பேசுகிறேன் என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தேன். வேறு அவனிடம் எதைச் சொல்ல முடியும்?

ஆயிற்று. ராமகப்பன் காலமாகி ஓர் ஆண்டுக்கு மேல் ஆகிவிட்டது. அன்று பிற்பகல் மனோஹராவும் நானும் சாப்பாட்டுக்காக வெளியில் சென்றிருந்தபோது, மனோஹரா அதற்கு முதல் நாள் தான் சீதாராமனை பஸ் நிலையத்துக்கு அருகில் நின்று கொண்டிருந்த போது சந்தித்ததாகத் தெரிவித்தாள்.

''என்னைக் கடந்து சென்ற அவரைத் தற்செயலாக நிமிர்ந்த நான் கவனித்தேன். அவரும் பார்த்தார். என்னால் அவரைப் பார்த்துப் புன்னகை செய்ய முடியவில்லை. வெறுப்பு என்று சொல்ல முடியாது.... விருப்பு, வெறுப்பு இரண்டுமே அற்ற நிலைதான் அது. என்னைக் கடந்து சென்றவர் திரும்பி வந்து 'சௌக்கியமா?' என்று விசாரித்தார். புன்னகை ததும்பிய அவரது முகத்தைப் பார்த்த பிறகும் என்னால் பதிலுக்குக் கூடப் புன்னகை செய்ய முடியவில்லை. எனக்கு எதிரில் மிக அருகில் அவர் நின்று கொண்டிருந்தும் அவர் என்னிடமிருந்து வெகு தொலைவில் இருந்ததாகத் தோன்றியது. நான், 'சௌக்கியம்தான்' என்றேன். 'வீட்டில் எல்லோரும் சௌக்கியமா?' என்று கேட்டார். 'எல்லோரும் சௌக்கியம்' என்றேன். 'அதே வீட்டில் தானே இருக்கிறீர்கள்?' என்று விசாரித்தார். 'அதே வீட்டில்தான் இருக்கிறோம்' என்றேன். மேற்கொண்டு என்ன பேசுவது என்ற தயக்கம், உணர்ச்சியற்ற என் முகத்தைப் பார்த்ததும் அவருக்கு ஏற்பட்டிருக்கும். 'ஏ. இவள் என்னை வெறுக்கிறாள்' என்றுகூட அவருக்குத் தோன்றியிருக்கும். அவர் விருட்டென்று நகர்ந்து சென்றுவிட்டார். அடி, ஆனந்தி! என்னதான் நான் அவரை உதறிவிட்டாலும், இந்தப் பாழும் மனசு ஏன்தான் அப்படித் துடித்ததோ தெரியவில்லை. 'நீங்கள் சௌக்கியமா?' என்று மரியாதைக்குக்கூட நான் அவரைத் திருப்பிக் கேட்காதது நிச்சயம் அவரை உறுத்தியிருக்கும். ஆனால் நான் வேண்டுமென்று அப்படியிருக்கவில்லை. எனக்கென்னவோ அவரை எதிர்பாராதபடி சந்தித்ததும் எதுவுமே தோன்றாமல் போய்விட்டது என்றுதான் நினைக்கிறேன்...''

''அவருக்குக் கல்யாணம் ஆகிவிட்டிருக்குமா?''

''ஆகியிருக்காது என்றே நினைக்கிறேன். இதுவரை ஆகாமல் இருந்திருந்தால், அதாவது நான் மறுபடியும் இவருக்கு எழுதி இவரோடு ராஜியாகப் போவேன் என்று அவர் எதிர்பார்த்து இதுவரை செய்து கொள்ளாமல் இருந்திருக்கும் பட்சத்தில், நேற்று நிகழ்ந்த எங்கள் சந்திப்பில் எவ்வித உணர்ச்சியும் அற்றுப் பாறை போல் இருந்த என் முகத்தையும், கேட்டதற்கு மட்டுமே பதில் சொல்லிவிட்டு, ஒப்புக்காகக்கூட 'சௌக்கியமா' என்று அவரை நான் விசாரிக்கவில்லை என்பதையும் கவனித்த பிறகு நிச்சயம் அவருக்கு என்மேல் வெறுப்பு வந்திருக்கும்.... நேற்றைய எங்கள் சந்திப்பின் விளைவாகக் கூடிய விரைவில் அவருடைய திருமண அழைப்பிதழை எதிர்பார்க்கலாம் என்றே தோன்றுகிறது...''—இப்படிச் சொல்லிவிட்டு மனோஹரா சிரித்தாள்.

''மனோஹரா, உன் அப்பாவின் கடைசி ஆசை....''

''ஆனந்தி, எங்களிடையே நடந்த விவகாரங்களெல்லாம் அப்பாவுக்குத் தெரிய நேர்ந்திருந்தால், இவருக்கு என்னைக் கொடுக்கச் சம்மதித்தே இருக்க மாட்டார்.''

''சீதாராமனிடம் நீ சமரசம் செய்து கொள்ள வேண்டாம். ஆனால் வேறு யாரையாவது நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டாமா, மனோஹரா? உன் தகப்பனாரின் ஆன்ம சாந்திக்காகவாவது...''


''அது மட்டும் என்னால் முடியாது ஆனந்தி! என்னைப் பொறுத்தவரை காதல், கல்யாணம் இரண்டுக்கும் தலைமுழுகி ஒரு கும்பிடு போட்டு விட்டேன். இத்தனை ஆண்டுகளாக என்னைக் கவனித்து வந்த சீதாராமனே — வெளிக்கு நல்லவராகத் தெரிந்த மனிதரே — என்னை இப்படியெல்லாம் சந்தேகித்துத் துன்புறுத்தியதை நினைக்கிறபோதெல்லாம், 'பழகியவரே இந்த அழகு என்றால், முன்பின் தெரியாத மனிதரை மணப்பது எவ்வளவு பெரிய ஆபத்தான விளையாட்டு' என்று தோன்றுகிறது!''

''ஒருசிலரை வைத்து எல்லோரையுமே எடை போட்டு விடுவதா, ஆனந்தி? நீ சொல்வது சரியில்லை...''

''இருக்கலாம். ஆனால் அது 'ரிஸ்க்'தானே ஆனந்தி? நாளைக்கு நான் எழுதுகிற கதைகளில் வருகிற கற்பனைப் பாத்திரங்களோடு என்னைச் சம்பந்தப்படுத்தி இல்லாத கேள்விகளெல்லாம் அந்த மனுஷன் கேட்கிறான் என்று வைத்துக் கொள். எப்படிச் சமாளிப்பது? வாழ்க்கையில் ஒரு பெண் ஒரே ஒரு தடவை எடுக்கிற முடிவால் மகிழ்ச்சி கிடைக்குமா? கிடைக்காதா என்பது நிச்சயமாகத் தெரியாத வரையில், மகிழ்ச்சி கிடைக்கும் என்று நம்பி ஏமாந்து போவதைவிட, மகிழ்ச்சி கிடைக்காது என்று அவநம்பிக்கைப்பட்டு அந்த முடிவுக்கு வராமல் இருப்பது விவேகமான செய்கைதானே?... தவிர, இன்னொருவரைக் காதலிக்க என்னால் முடியும் என்று தோன்றவும் இல்லை'' என்று மனோஹரா சிரித்தபோது என்னால் பதிலே சொல்ல முடியவில்லை.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31

Managing Editor: T. Sadasivam



GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுடன்

காப்பியின் சுவையை அனுபவிப்பீர்



க்ளுகோ, மொனகோ
மற்றும் சுவைமிக்க இதர
பிஸ்கெட்டுகளின்
தயாரிப்பாளர்களான பார்லே
உங்களுக்கென பிரத்யேகமாக
வழங்குகின்றனர்—
காப்பியின் சுவைக்குச் சுவையூட்டும்—

பார்லே
மாரி
பிஸ்கெட்டுகள்

அருமையான ருசியுள்ளவை—:பாயில்-ஸீல்டு பெக்குகளில்

everest/1060ø/PP tam